www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA


வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 16 செப்ரெம்பர் 2009 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 125



## ஜனாதிபதியின் அதிகாரமும் கூட்டமைப்பின் இயலாமையும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை செப்டெம்பர் 9ஆந் திகதி சந்தித்து பேச்சு வார்த்தையை நடத்தியுள்ளனர். இச்சந்திப்பு சுமுகமாக நடைபெற்றதாக செய்திகள் வெளியாகி இருந்த போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீது உரையாற்றிய போது தெரிவித்த கருத்துக்களிலிருந்து 9ஆம் திகதி பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெறவில்லை என்பதையே உணர்த்துகிறது. அதாவது புலிப்பூச்சாண்டி காட்டி அரசாங்கம் தமிழ்மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்தப் பார்க்கிறது என்று சம்பந்தன் அரசாங்கத்தை விமர்சித்துள்ளார்.

புலிகள் இயக்கத்துடன் தொடர்பு என்று கூறி தொடர்ச்சியாக அடக்குமுறை நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு எதிராக எடுக்கப்படலாம். அவ்வியக்கத்தின் முக்கியத் தலைவர்கள் பிணையில் விடப்படுகின்றனர். ஆனால் ஆயிரக் கணக்கானோர் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்ததாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பலருக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் அவசரகால சட்டம் என்பவற்றின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. பலருக்கு நீதிமன்றத்தால் கடும் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. இடம் பெயர்ந்தோர் முகாம்களிலிருந்து 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னும் பலர் கைது செய்யப்படலாம். தமிழ் மக்களின் உரிமைக்காகச் குரலெழுப்பி வரும் பலரும் கண்காணிப்புகளுக்கும் பின் தொடருதலுக்கும் விசாரணைகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

ஆனால் சம்பந்தன் இவற்றை உள்ளடக்கித் தனது கருத்தைத் தெரிவித்திருப்பதாகக் கொள்ள முடியாது. அவர் 'புலிப்பூச்சாண்டி காட்டி தமிழ் தேசிய கூட்டமைப்பை' அரசாங்கம் பகடையாக பயன்படுத்துகிறது என்பதையே தமிழ் மக்களைப் பகடைக்காய்களாக பயன்படுத்தப் பார்க்கிறது என்ற அர்த்தத்திலேயே குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களில் பலர் ஏற்கனவே பொலிசாரின் விசாரணைகளுக்குட் பட்டிருந்தனர். ஒரு எம்.பி தற்போதும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மூன்று பேர் வெளிநாடுகளிலிருந்து வருகின்றனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் சுதந்திரமற்ற, பழமைவாத அரசியல் காரணமாக அவர்கள் பல நிர்ப்பந்தங்களுக்குள்ளாகி, செயலாற்றவர்களாகி இருக்கின்றனர்.

ஜனாதிபதியின் இரண்டரை மணித்தியாலய சந்திப்பின் போது அவர்களின் கருத்தை வெளிப்படுத்த முடியாமல் இருந்ததையும், அவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களையும், அவர்கள் மீது அரசாங்கத் தரப்பினர் வைத்ததாக சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் பற்றியும் ஏன் அவர்கள் வெளிப்படுத்த தயங்குகின்றனர். பேச்சுவார்த்தை சுமகமாக நடந்ததாக கூறியமையும், பின்னர் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை விமர்ச்சித்தமைக்கும் வெவ்வேறு காரணங்கள் இருப்பதாகவே தெரிகிறது.

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைக்கு சென்றதற்கும், பின்னர் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை விமர்ச்சித்து உரையாற்றிமைக்கும் இந்திய ஆலொசணைகள் இருந்ததாக ஊடக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மூன்று லட்சம் தமிழ் அகதிகளாக உள்ள மக்கள் உயிர் உடைமை இழப்புகளுக்குள்ளாகி கொடுமைகளுக்கும், அவலங்களுக்கும் ஆளாகி இருக்கின்ற இவ்வேளை அரச தலைவருக்கும் தமிழ்



மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தின் பெரும்பான்மையை கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மிடையிலான சந்திப்பு வெறும் சம்பிரதாய பூர்வமாக இருக்க முடியாது. இவ் விமர்சனத்தை இரண்டு தரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2ம் பக்கம் →



## ரூபா 405க்கு தொழிலாளர்கள் காட்டிகொடுப்பு

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாட் சம்பளம் ரூபா 500 கோரி செம்ரெம்பர் 2ந் திகதி தொடக்கம் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதனைச் செய்வதன் மூலம் தோட்ட முதலாளிமாருக்கு ஒரு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை மூன்று முக்கிய தொழிற் சங்கத் தலைமைகளுக்கும் முதலாளிமார் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் இடையில் எட்டுத் தடவைகள் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதிலும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. தற்போது நடைமுறையில் இருந்து வரும் சம்பளம் மிகக் குறைவானதும் சுரண்டலின் உச்சமானதும் ஆகும். அடிப்படை நாட்சம்பளம் 200/= மேலதிகப்படி ரூபா 20/=, 25 நாட்கள் வேலை செய்திருப்பின் 70 ரூபா எனவே மொத்தம் 290 ரூபா என்று கணக்கிடப்பட்டாலும் 25 நாட்கள் வேலை கிடைப்பதில்லை அல்லது எல்லாரும் செய்யவும் முடியாது. ஆதலினாலேயே அடிப்படைச் சம்பளத்தை அதிகரிக்கும் படி தொழிலாளர்கள் வற்புறுத்தி வருகின்றனர். பதினொரு நாட்களுக்குப்பின் 405 ரூபாவிற்கு மூன்று தொழிற்சங்கத்தலைமைகள் அடிப்படைச் சம்பளம் 290/= 25நாள் வரவிற்காக 85/= திறமைக்கு 30/= என இவ் 405 ரூபா தீர்மானிக்கப்பட்டு இணங்கப்பட்டுள்ளது. இது அப்பட்டமான துரோகமும் காட்டிக்கொடுப்புமாகும்.

இவ்வாறு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நாட் சம்பளமானது இலங்கையிலேயே மிகக் குறைந்த நாட் சம்பளம் ஆகும். இத்தகைய சம்பளத்தை சுமார் 5 இலட்சம் வரையான தோட்டத் தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இவ்வாறு குறைந்த சம்பளத்தை வழங்கும் தோட்ட முதலாளிய நிறுவனங்கள் ஒரு தொழிலாளியை குறைந்தது 16 கிலோ பச்சைக் கொழுந்து எடுக்குமாறு வற்புறுத்துகின்றன. இதிலிருந்து 4 கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது. தரவேறுபாடு செய்யப்படுகிறது. தேயிலை உயர்ந்த விலைகளுக்கும் நடுத்தர விலைகளுக்கும் அதிக விலைபோகிறது. வெளிநாட்டு ஏற்றுமதியின் ஒரு முக்கிய பங்கினை தேயிலை உற்பத்தி நிறைவு செய்கிறது. இருபத்திரண்டு தோட்டத் தனியார் கம்பனிகள் பெருந்தோட்டத் துறையில் இவ்வாறு தொழிலாளர்களை சுரண்டிப் பெருலாபம் பெற்று வருகின்றன. அதேவேளை தொழிலாளர்களுக்கு உரிய சம்பளத்தை வழங்க மறுக்கிறார்கள். சுரண்டல், உபரி உழைப்பு , உபரி லாபம், கொள்ளை லாபம், தொழிலாளர் வாழ்க்கை, முதலாளிகளின் மூலதன விரிவாக்கம் போன்றவற்றை மாக்ஸ் ஆராய்ந்த மூலதனம் என்ற புகழ்மிக்க நூலில் எடுத்து விளக்கினார். அதற்கான நடைமுறையை ஒருவர் நேரடியாகக் காண விரும்பின் மலையகத்தின் தொழிலாளர்கள் மத்தியில் இருந்து கண்டு கொள்ளலாம்.

நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையில் தொழிற் சங்கத் தலைமைகள் ரூபா 500 பெற்றுத்தர நிற்பதாகவே கூறிக் கொண்டன. ஆனால் முதலாளிமார் சிறுதொகை கூட்டி 360 ரூபா தருவதாகவே முன்வைத்து வந்தனர். இதில் முக்கியமானது யாதெனில் அடிப்படைச் சம்பளத்தில்

2ம் பக்கம் →



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## விடுதலையும் இல்லை விசாரணையும் இல்லை



எமது தோழர்கள் ஆர். ஜெயசீலன் எஸ்.சுகேசனன் இரண்டு வருடங்கள் எட்டு மாதங்களாகவும் தோழர் நீ.பிரதீபன் ஏழு மாதங்களாகவும் அவசரகாலச் சட்டம் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பனவற்றின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் சிங்கள முஸ்லீம் அரசியல் கைதிகள் சிறை இருந்து வருகின்றனர். புலிகள் இயக்கத்துடன் சம்பந்தம் என்ற சந்தேகத்தின் காரணமாகவே பெரும் பான்மையான அரசியல் கைதிகள் மேற்படி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் எனப்பட்டவர்கள் நீதிமன்றப் பிணையில் விடப்பட்டுள்ளனர். ஆனால் புலிகளுடன் தொடர்பு வைத்தனர் எனக் கூறப்படுவோர் சந்தேகத்தின் பேரில் வருடக் கணக்கில் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக வெளியில் இருந்து நியாயமான குரல்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதே நேரம் சிறைச்சாலைக்குள் உண்ணாவிரதம் இருந்து தம்மை விடுவிக்கும் படியான கவனயீர்ப்புப் போராட்டத்தையும் கைதிகள் முன்னெடுத்தனர். அண்மையில் ஜனாதிபதிக்கு சில கைதிகள் தம்மை மன்னித்து விடுவிக்குப்படி கடிதம் அனுப்பியும் இருந்தனர்.



அண்மைக்காலத்தில் படைகளில் இருந்து தப்பிச் சென்று கைது செய்யப்பட்டோருக்கும் ஏனையோருக்கும் ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் அரசியல் கைதிகள் விடயத்தில் கடும் நிலை கடைப் பிடிக்கப்படுகிறது. இது தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையின் ஒரு அம்சம் என்றே கொள்ள வேண்டியுள்ளது. எனவேதான் இத்தகையவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது விசாரிக்கப்பட வேண்டும் என வற்புறுத்துகிறோம்

## அதிகாரமும் இயலாமையும்

1ம் பக்க தொடர்ச்சி

பாராளுமன்ற அரசியலில் தமிழ் தேசிய கூட்டமைப்பினருடன் அரசு பேசுவதும், தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதியுடன் பேசுவதும் தவிர்க்க முடியாது. ஆனால் அப்போக்கில் அரசாங்க நிகழ்ச்சி நிரலை மட்டும் கவனத்தில் எடுப்பது என்பது ஏற்று கொள்ளமுடியாத ஒன்றாகும். அன்று முதல் அண்மைக்காலம் வரை நடைபெற்ற எல்லா பேச்சுவார்த்தைகளும் அரசாங்க நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டன என்பதால் தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிராகரிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டனர் என்பதை நினைவில் கொள்வது அவசியம். தமிழ்த் தலைமைகள் பிற்போக்கானவைகளேயாகும். தமது வர்க்க நலனுக்காக முன்வைக்கும் அவர்களது கொள்கைகளிடையே அடக்கப்பட்டு வருகின்ற தமிழ் தேசிய இனத்தின் கோரிக்கைகள் தவிர்க்க முடியாது உள்ளடங்கி இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

மறுபுறத்தில் தமிழ்த்தேசிய இனத்தின் அபிலாஷைகளை உரியவாறு முன்நிறுத்தக் கூடிய தகுதியை தமிழ் தேசிய கூட்டமைப்போ, ஏனைய தமிழ் அமைப்புகளோ கொண்டிருக்கவில்லை என்பதை அறிவது கடினமல்ல. அதற்கு கடந்த காலமும் சமகாலமும் தகுந்த உதாரணமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியை சந்தித்த போது தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அவர்கள் முன்வைத்த, உடனடியான, நீண்டகால கோரிக்கைகள் எவை என்பதை தெரிந்து கொள்ள முடியவில்லை. ஜனாதிபதிக்கும் தங்களுக்கும் இருக்கும் இடைவெளியை குறைப்பதற்காகவே இச்சந்திப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பயன்படுத்திக் கொண்டனரா என்றும் யோசிக்க வேண்டி இருக்கிறது.

அவர்கள் நேர்மையாக செயற்பட்டிருந்தால் ஜனாதிபதியிடம் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் எவை என பட்டியலிட்டு பகிரங்கப்படுத்த வேண்டும். இடம்பெயர்ந்தவர்களின் குடியேற்றம் பற்றி அரசாங்கமும் கதைத்து வருகிறது. ஆகவே அதை பற்றி பேசியதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பெருமிதமடைய முடியாது. முகாம்களில் இருப்போரை பொறுப்பேற்க முன்வரும் உறவினர்களிடம் ஒப்படைக்கும் அரசாங்கத்தின் முடிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதியை சந்திப்பதற்கு முன்பே அறிவிக்கப்பட்டுவிட்டது. எனவே தங்களின் சந்திப்பில் தான் அது நடந்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவது அர்த்தமற்றதாகும்.

அரசியல் தீர்வு பற்றி ஜனாதிபதியிடம் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பேசியவைகள் எவை, பேசப்போவது யாவை என்பதையும் தமிழ் மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும். தமிழ் மக்களை சமாளிப்பதற்கு ஒரு வேடமும், அரசாங்கத்தை சமாளிக்க இன்னொரு வேடமும் போடக் கூடாது.

முகாம்களில் புலிகள் இருந்தால் கைது செய்து நடவடிக்கை எடுங்கள், புலி அல்லாதவர்களை விடுதலை செய்யுங்கள் என்று தற்போது கூறுகின்ற சம்பந்தன், யுத்தம் நடைபெற்ற வேளை தமிழ் மக்கள் இராணுவத்திடம் சரணடைய வேண்டும் என்று அரசாங்கம் கேட்டுக் கொண்ட போது என்ன சொன்னார் என்பதை அவர் மறந்துவிடலாம். நினைவுள்ளவர்கள் மறக்க மாட்டார்கள். புலிகளுடன் இருப்பவர்கள் புலிகளாகத்தானே இருப்பார்கள். அவர்கள் எப்படி அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று படையினரிடம் வருவார்கள் என்று சம்பந்தன் கூறினார். இப்போது வேறு வார்த்தைகளில் பேசுகிறார்.

ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு நம்பிக்கைக்குரியதாக இல்லை. தமிழ் தலைமைகள் வரலாற்றில் முன்வை த்த கோரிக்கைகள் தமிழீழக் கோரிக்கை உட்பட அனைத்தும் தமிழ் மக்களின் நலனுக்காகவன்றி தங்களின் ஆதிக்க அரசியல் இருப்பிற்காக முன் வைத்தவைகளே.

அதேவேளை அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக கொண்டுள்ள நிலைப் பாட்டினால் மேலும் மேலும் தமிழ் மக்கள் ஓரங்கட்டப்படவே செய்வார்கள்.

சர்வகட்சிகள் மாநாட்டின் தலைவர் அமைச்சர் திஸ்ஸவிதாரண யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போது பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்வதற்கு ஜனாதிபதி விரும்பவில்லை என்றும் ஜனாதிபதியின் அங்கீகாரத்தின் பின்னரே அரசியல் தீர்விற்கான யோசனைகள் முன்வைக்கப்படுமென்றும் கூறியுள்ளார். ஆனால் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் பொலிஸ், காணி அதிகாரங்களை வலியுறுத்தி வருகிறார். அத்துடன் ஆளுனருக்கு எதிராகவும் குரல் கொடுத்து வருகிறார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியின் விருப்பத்திற்குட்பட்டவை தீர்வாக இருக்க முடியாது, மாறாக தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்தி செய்வனவாக இருக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடாகும்.

இந்திய பச்சாயத்து முறையும், செனட்சபையும் அரசியல் தீர்வு யோசனைகளில் இடம்பெறும் என்றும் அமைச்சர் திஸ்ஸவித்தாரன கூறுகிறார். இது தீர்வை திசை திருப்பும் முயற்சியேயாகும். இந்திய பஞ்சாயத்து முறைம் முன்னைய செனட் சபையும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாகாது.

அதேவேளை அரசாங்கம் தீர்வு என்ற பேரில் பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஏற்றுக் கொள்ளும்படி தமிழ் மக்களை நிர்ப்பந்திப்பதன் மூலம் பிரச்சினை தீர்க்கப்பட மாட்டாது.

எனவே தமிழ்த் தலைவர்களின் நிகழ்ச்சி நிரலோ பேரினவாத நிகழ்ச்சி நிரலோ நியாயமான தீர்வாகாது. தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் ஐக்கிய இலங்கைக்குள் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமத்துவமும், சுயாட்சியும் உறுதி செய்யப்படும் வகையிலான தீர்வே தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க வழிவகுக்கும். இதற்கான பொது வேலைத்திட்டமும் நேர்மையான சக்திகளின் ஐக்கியப்பட்ட செயற்பாடுகளும் அவசியமாகும்.

## ரூபா 405க்கு தொழிலாளர்

1ம் பக்க தொடர்ச்சி

அதிகரிப்புச் செய்ய மறுப்பதாகும். எவ்வாறாயினும் முக்கிய மூன்று தொழிற் சங்கத் தலைமைகளும் ஐந்நூறு கோரிக்கையை வென்றெடுக்க இறுதிவரை நிற்கப் போவதில்லை என்பது ஏற்கனவே தெரிந்ததேயாகும். ஏனெனில் பேச்சுவார்த்தையில் இரண்டு நிலை உள்ளது. ஒன்று நேரடியாகப் பேசுவது, இரண்டாவது உத்தியோக பூர்வமற்ற நிலையில் பேசுவது. இந்த இரண்டாவதில் எடுக்கும் முடிவே பின்பு முதலாவதில் உத்தியோகபூர்வ அறிவிப்பைப் பெற்றுக் கொள்ளும். அதன் அடிப்படையிலேயே தற்போது மூன்று தொழிற் சங்கத் தலைமையினரும் 405 ரூபாவிற்கு இணங்கி கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இது 500ரூபா சம்பள உயர்வை வற்புறுத்தி பதினொருநாட்களாக ஒத்துழையாமை இயக்கத்தை நடாத்தி வந்த தொழிலாளர்களின் முதுகில் குத்தி முதலாளிமார்களுக்கு போராட்டத்தைக் காட்டிக் கொடுத்ததாகும். ஏனெனில் தொழிலாளரின் ஒத்துழையாமைப் போராட்டம் கடந்த தடவை போன்று வேலைநிறுத்தமாக மாறுவதை தொழிற் சங்கத் தலைமைகள் விரும்பமாட்டா. அதனை அரசாங்கமும் அங்கீகரிக்க மாட்டாது. அப்படி வேலை நிறுத்தமாக மாறினால் ஏனைய துறைத் தொழிலாளர்கள் ஊழியர்களையும் உற்சாகம் கொள்ளச் செய்துவிடும் என அரசாங்கம் அஞ்ச இடமுண்டு. எனவே கடந்த காலங்கள் போன்று தொழிலாளர்கள் குறைந்த சம்பள அதிகரிப்போடு ஏமாற்றப்பட்டுள்ளனர். மலையகத்தின் பிற்போக்கு தொழிற் சங்க தலைமைகளுக்கு மேலாக தொழிலாளர்களும் மலையக மக்களும் சிந்தித்து செயலாற்ற முன்வராதவரை தொடர்ந்து சம்பள உயர்வை எதிர்பார்த்து ஏமாறும் கதைகள் நீண்டு கொண்டே செல்லும்.

## நாளும் நடக்கும் உலகிலே நற்குணன்

### "கலாநிதியின்" கருத்துக் குழப்பம்

த.குமரகுருபரன் என்பவர் கலாநிதிப்பட்டம் வாங்கிய ஒரு அரசியல்வாதி. அவர் 23.8.2009 ஞாயிறு வீரகேசரியில் இந்தியாவை அழிக்க சீனா திட்டமிடுவதாக ஒரு கட்டுரை எழுதியிருந்தார். சீனாவில் அதிகாரபூர்வமான இணையத் தளமொன்றில் சீனாவின் அரசாங்க ஆலோசகர் ஒருவர் இந்தியாவைப் பிரிப்பதன் மூலம் இந்தியாவை பலவீனப்படுத்த வேண்டும் என்று எழுதியிருந்ததாகச் சொல்லியிருந்தார். அவர் அக்கட்டுரையை எழுத முன்னரே அத்தகவல் வந்த இந்திய இணையத்தளத்தைப் பார்த்திருந்தேன். அதில் அது தனியார் இணையத் தளம் என்று இருந்தது. கருத்துக் கூறியவரது பெயரைவிட வேறு எதுவும் சொல்லப்படவில்லை. எங்களுடைய கலாநிதி ஏன் உண்மையை திரிக்க வேண்டும்?

இந்திய இணையத்தளக் கட்டுரையில் தமிழ் நாட்டுப் பிரிவினையை சீனா ஊக்குவிக்க வேண்டும் என்ற கருத்தும் குறிப்பிடப்பட்டிருந்தது. அது உண்மையானால் தமது தமிழினப் பற்றாளர்கள் எல்லாம் சீனாவின் நண்பர்களாகி விடமாட்டார்களா? அந்த விடயம் ஏன் கலாநிதியின் கட்டுரையில் கவனமாகத் தவிர்க்கப்பட்டது? அவருடைய பிற பொய்கள் பற்றி எழுதி இடத்தை வீணாக்க விரும்பவில்லை. இத்தகைய முயற்சிகளின் நோக்கம் சீனாவைக் காட்டி மிரட்டித் தமிழரை மீண்டும் இந்திய எஜமானர்களிடம் ஒப்படைப்பது தான் என்பதில் ஐயம் வேண்டாம்.

நமது தமிழ்த்தேசியவாதிகள் தம்முள் அடிபட்டாலும் எல்லோருக்கும் எசமானி சோனியா காந்தி தான்.

### வாக்களிக்காமல் இருக்கும் உரிமை

80 சதவீத யாழ்ப்பாண மக்கள் மாநகரசபைத் தேர்தலை புறக்கணித்தனர் என்ற உண்மையை தமிழ்த் தேசியவாத அரசியல் வாதிகளாலும் ஜீரணிக்க முடியவில்லை. பௌரல் என்கிற என்.ஜீ.ஓ ஜனநாயக இயக்கத்தாலும் ஜீரணிக்க முடியவில்லை. 40 சதவீத மாணவர்களது வாக்காளர் அட்டைகளே விநியோகிக்கப்பட்டதால் 60 சதவீதம் பேர் வாக்களிக்கவில்லை என்றும் அதன்படி வாக்காளர் அட்டை பெற்றோரில் 55 சதவீதமானோர் வாக்களித்திருந்ததாக அவர்கள் மதிப்பிடுகிறார்கள். வாக்காளர் அட்டை இல்லாமலேயே வாக்களிக்க முடியும் என்று யாழ்ப்பாண மக்கள் அறிவார்கள். வாக்களிக்க அக்கறையுள்ளோர் தமக்கு வாக்காளர் அட்டை கிடைக்காததையிட்டு முறைப்பட்டு வாக்களிக்க வழிதேடியிருப்பார்கள். அப்படி ஏன் நடக்கவில்லை? வாக்களித்தோரில் 6 சதவீதமானோர் ஏன் வாக்குச் சீட்டுக்களைப் பழுதாக்கினார்கள்.

### தேசியமும் காசுக்குப் பின்னாலே

விடுதலைப் புலிகளின் தலைவராக அறிவிக்கப்பட்ட கே.பி. சிறைப் பிடிக்கப்பட முன்னர் இந்தியாவும் சீனாவும் சேர்ந்தே விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கச் செய்துள்ளன என்று சொல்லியிருந்தார். அப்படியானால் மேலை நாடுகள் இறுதி மாதங்களில் ஆடிய நாடக த்தைப் பற்றி எதையுமே அவர் பேச விரும்பவில்லையா? விடுதலைப் புலிகள் திரட்டிய பணம் எக்கச் சக்கமாக மேலை நாடுகளில் உள்ள சிலரின் கைகளில் உள்ளது. மேலை நாடுகளைப் பகைத் தாற் பணமும் பணத்தின் மூலம் பெறப்படக் கூடிய அதிகாரமும் பறிபோய் விடும் என்று பயப்படுகிறார்களா? ''தேசம் ஞானங் கல்வி ஈசன் பூசையெல்லாம் காசுக்குப் பின்னாலே'' என்று ஏன் பாடி வைத்தார்கள் என்று விளங்குகிறதா?

### இலக்கியக் கோணல்கள்

1970களில் முருகையனின் கடூழியம் நாடகம் பற்றிய அறிமுகத்தை முருகையனைக் 'காட்டிக் கொடுக்காமற்' தான் செய்ததாகவும் அதற்காகத் தன்னை யாருமே மெச்சவில்லை என்றும் முறைப்பட்டிருக்கிறார், தான் எழுதுகிறவற்றைப் பெரும்பாலும் எவருமே வாசிப்பதில்லை என்று அழுது வடிகிற ஒரு 'திறனாய்வாளர்'. முருகையனின் அரசியற் சிந்தனை பற்றி ஒரு இரகசியமும் இருக்கவில்லை என்பதும் யாருங் காட்டிக் கொடுக்கும் படி முருகையன் எதையுமே செய்யவில்லை என்பதும் அவருக்கு விளங்காதவை. வேறொரு எழுத்தாளரைத் தீவிரவாதி என்றும் பிறவாறும் பொய்யாக அழைக்கப் போய்க் குட்டு வாங்கியும் புத்தி வராமற், தான் காட்டிக் கொடுக்கமல் எழுதியதற்காகத் தனக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்க எவ்வளவு கோணற் சிந்தனை வேண்டும்?

### மொழி விளையாட்டு

''பின்னவீனத்துவவாதிகள் அனைத்தையும் ஒரு மொழி விளையாட்டாகவே கருதுவர்'' என்பது ஒரு பேராசிரியரின் கூற்று. அது 'ஜீவநதி' என்ற சஞ்சிகையின் முன் அட்டையிற் பொறிக்கப் பட்டிருந்தது. பின்னவீனத்துவம் பற்றிப் அன்னாரின் அறிவு எத்தகையது என்றாலும், உள்ளே, 'நரேற்றிவ்' என்பதை 'உரையம்' என்றும் 'டிஸ்கோஸ்' என்பதைக் 'கருத்து வினைப்பாடு' என்றுந் தான் விரும்பிய விதமாகத் தமிழ்ப்படுத்தி நன்றாகவே மொழி விளையாட்டு ஆடிப் பின்னவீனத்துவத்தையே ஒரு புரட்டுப் புரட்டி எடுத்திருக்கிறார் மனிதர். தமிழ்ப் பின்னவீனத்துவவாதிகள் 'மெற்றா' என்பதைச் 'சிறு' என்று கூறுவர். 'இடை' என்றும் அகராதியிற் பொருள் உண்டு. நமது பின்னவீனத்துவப் பேராசிரியருக்கு அது 'பெரிய' என்று கருத்துப்படுகிறது. அன்னாருக்கு ஆசிரியன் மட்டும் இறந்துவிடவில்லை, அகராதிகளுமல்லவா இறந்துவிட்டன.

### அமைச்சருக்கு அற்ப விடயங்கள்

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, ஊடக சுதந்திரம் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு போன்ற அற்பவிடயங்களைப் பெரிது படுத்தி அரசாங்கத்தைத் திசை திருப்பச் சிலர் முற்படுகின்றனர். இது தவறான செயற்பாடுகளாகும் இவ்வாறு சுற்றாடல் துறை அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க கூறி உள்ளார். வன்னியில் எத்தனை பௌத்த விகாரைகள் இருந்தன என்றும் எத்தனை குழங்களைச் சிங்கள மன்னர்கள் கட்டினார்கள் என்றும் ஆராய்ந்து வரும் ஜாதிகஹெல உருமய விற்கும் அதன் அமைச்சர் சம்பிக்கவிற்கும் முதலில் கூறிய மூன்று விடயங்களும் அற்ப விடயங்களையாகும். ஸ்ரீபாவம் சிங்கள மக்கள் தான்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# பெருக்கெடுக்கும் ஊழல் மோசடிகள்

ஊழல் என்பது ''சொந்த இலாபத்திற்காக ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல்" என்று வரைவிலக்கணப் படுத்தப்படுகிறது. அவ்வாறெனில் மேற்படி அதிகாரத் துஷ்பிரயோகத்தில் மோசடி, லஞ்சம், புறக்கதவு நடவடிக்கைகள் என்பன இணைக்கப்பட்டே கருமங்கள் ஆக்கப்படுகின்றன. இவை யாவும் பீடபூமிகளிலிருந்து ஊற்றெடுத்து ஆறுகளாகப் பாய்வது போன்று அதிகார வர்க்கத்தின் உயர் பீடங்களிலிருந்தே பிறப்பெடுத்து கீழ் மட்டம் வரை பரவி நிற்கின்றன. இவை ஏன் எவ்வாறு யாரால் செய்யப்படுகின்றன என்று சற்று ஆழமாக விசாரித்தால் அவற்றின் ஊற்று மூலங்களைக் கண்டுபிடிப்பது சிரமமான ஒரு விடயமல்ல. ஆனால் இன்றைய ஆட்சி முறைமையின் கீழ் அவ்வூழல் மோசடிகளுக்கு உரியவர்கள் பரமசிவன் கழுத்துப் பாம்புகளாகவே இருந்து வருவதால் உரிய நியாயம் கேட்கவோ தண்டனை பெறவோ முடிவதில்லை.

இன்று எங்கும் எதிலும் ஊழல் மோசடி உச்சமாக இருப்பதாகவே சமூக அக்கறையும் மக்கள் சார்பும் உடையவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அரசாங்க நிறுவனங்களில் அதிகாரத்தின் அரவணைப்புடன் அவை தாராளமாக இடம்பெறுகின்றன. இதனை எவரும் மறுக்க முடியாதவாறு பொது நிறுவனங்கள் பற்றி ஆராய்வதற்கென பாராளுமன்ற தெரிவுக் குழு (COP) ஏற்கனவே தெளிவான அறிக்கையை இரண்டு தடவைகள் வெளியிட்டது. முதல் அறிக்கையில் 26 பொதுநிறுவனங்களிலும் இரண்டாவது அறிக்கையில் 20 நிறுவனங்களிலும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றமை சுட்டிக் காட்டப்பட்டது. இவற்றில் பல பலகோடி ரூபாய்கள் ஏப்பம் இடப்பட்டதும் சுட்டிக் காட்டப்பட்டதும். அப்போது அத்தெரிவுக் குழுவின் தலைவராக அரசாங்கப் பாராளுமன்றப் பிரதிநிதியான விஜயதாஸ ராஜபக்ஷ இருந்தார். இவ்வாறு பாராளுமன்றத்தில் பகிரங்கப் படுத்தப்பட்ட மேற்படி ஊழல் மோசடிகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஊழல் ஒழிப்பு லஞ்ச ஒழிப்புக்கு எதிரான பிரிவுகள் மற்றும் நீதிமன்றங்கள் இருந்தும் மேற்படி கண்டுபிடிக்கப்பட்ட ஊழல் மோசடிகள் எதுவும் விசாரிக்கப்படவோ தீர்ப்பு வழங்கப்படவோ இல்லை என்பதே கவனத்திற்குரியதாகும். இதன் காரணமாக மேற்படி தெரிவுக் குழுவின் தலைவர் பதவியை விட்டெறிந்தது மட்டுமன்றி அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் விஜயதாஸ ராஜபக்ஷ எதிர்த்தரப்பு ஆசனத்தில் அமர்ந்தும் கொண்டார்.

இவ்வாறு பொது நிறுவனங்களிலும் உயர் பதவிகளிலும் ஊழல் மோசடி இடம்பெறும் போது அதனைக் காட்டி தத்தமது கைங்கரியங்களை நியாயப்படுத்தும் போக்கு அடுத்தடுத்த மட்டங்களில் இடம்பெற்று கீழ்மட்டம் வரை பரவுகின்றன. இது பற்றி பலர் பலவிதமாக வியாக்கியானங்கள் செய்கின்றனர். மத நல்லொழுக்கச் சிந்தனைகள் அற்றுப் போய்விட்டன என்றும் அறவிழுமியங்கள் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்றும் மனசாட்சியுடன் நடப்பதில்லை என்றெல்லாம் கூறுவோர் உள்ளனர்.

இவற்றுக்கப்பால் உள்ள உண்மையாதெனில் இன்றைய பொருளாதார அமைப்பு முறையின் கீழான தனிச் சொத்துடைமையைப் பெருக்கும் வழிமுறையே அடிப்படையானதாகும். முதலாளித்துவம் பெரு இலாபத்தையும் தனியார் சொத்துடமையையும் முதன்மைப் படுத்தி நிற்கின்றது. அதன் மூலம் ஏகப் பெரும்பான்மை மக்களின் உழைப்பையும் வாழ்வையும் சூறையாடி நாசப்படுத்தி வருகிறது. இவற்றுடன் கூடவே ஊழல் மோசடி லஞ்சம் என்பன முதலாளித்துவத்தின் உடன் பிறப்புக்களாகி நிற்கின்றன. அதிகாரம் படைத்தோருக்கும் சொத்து சுகம் பெற்றோருக்கும் இவற்றால் பிரச்சினை இருக்க மாட்டாது. ஊழல் மோசடிகளால் பாதிக்கப்படுவது ஏகப் பெரும்பான்மையான மக்களாகவே உள்ளனர். ஒரு நிறுவனத்தின் ஊழல் மோசடி நடைபெற்றால் அவற்றுடன் சம்பந்தப்பட்ட பணமும் சொத்துக்களோ பொதுமக்களுக்கு உடையதாகவே இருக்கும். மக்களிடமிருந்து அன்றாடம் நேர்முக மறைமுக வரிகள் மூலம் பெறப்படும் பணத்தைக் கொண்டே அரசாங்கமும் ஏனைய நிர்வாகங்களும் இடம் பெறுகின்றன. மக்களின் உழைப்பும் அவர்கள் வழங்கும் உபரியுமே அரசாங்கத்தால் முதலாளிகளால், வேலை கொள்வோ ரால் பண முதலாக்கம் செய்யப்படுகிறது. அத்தகைய அரசாங்க தனியார் நிறுவனங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவது மக்களுக்கு எதிரான ஒன்றேயாகும்.

எனவே அரசாங்கத்தின் அதி உச்ச நிலையிலிருந்து அடுத்தடுத்த மட்டங்களின் ஊடாக கீழ் நோக்கி வரும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக மக்கள் விழிப்புற்று போராட முன்வராதவரை அவற்றை ஒழிக்க முடியாது என்பது உணரப்படுவது அவசியமாகிறது.

# பண முதலைகள் கூத்தாடிய ஊவா தேர்தல் களம்

ஊவா மாகாண சபைத்தேர்தல் திருவிழா நடந்து முடிந்துள்ளது. அது பற்றி சில வார்த்தைகள். எங்கு பார்த்தாலும் சுவரொட்டிகள் பாதாதைகள் என பல்வேறு நிறங்களில் அலங்கரித்துக் கொள்ளப்பட்டது. இதில் நகைப்புக்குரிய விடயம் என்னவென்றால் இந்த மண்ணின் வாசனையையும் இங்குள்ள மக்களின் வறுமையையும் தெரியாதவர்களே தேர்தல் களத்தில் குதித்திருந்தது தான். தெரிந்த முகங்களை விடவும் தெரியாத முகங்களே சுவரொட்டிகளிலும் பாததைகளிலும் பதிந்திருந்தன. பணம் பாதாளம் வரை பாய்கிறதோ இல்லையோ இப்பிரதேச மக்களின் வாக்குகளை குறிவைத்துப் பாய்ந்திருக்கிறது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகவுள்ளது. பணம் படைத்த முதலாளிகள் ஏராளமாகக் களத்தில் குதித்திருந்தது இதற்கான சான்றாக அமைந்திருக்கின்றது.

ஊவா மாகாணத்தின் ஒரு தோட்டமான நோட்வூட் தோட்டத்து தொழிலாளர்கள் உரிய நேரத்தில் தமக்குரிய ஊதியம் வழங்கப்படாமையினாலும் வேறுபல அசாதாரணங்கள் காரணமாகவும் சுமார் எட்டு மாதங்களாக வேளையில்லாமல் திண்டாடினர். இந்த விடயம் மலையக தலைமைகள் என்று தங்களை தம்மடம் அடித்துக் கொள்ளும் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. இருந்த போதிலும் எவருமே அதனைக் கண்டு கொள்ளவில்லை. ஆனால் இந்ததேர்தல் திருவிழா தொடங்கியதும் எல்லோரும் முதன் முதலில் படையெடுத்துச் சென்றது அந்தத் தோட்டத்தை நோக் கித்தான்.

கம்பனி உரிமையாளர்களிடம் பேசுவதாகவும் சனாதிபதியுடன் பேசுவதாகவும் இந்தப் பிரச்சினைக்கு தங்களால் தான் சரியான தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் தொண்டை கிழிய அறிக்கை விட்டவண்ணம் திரிந்தார்கள். இந்த இதற்கிடையே முன்பின் தெரியாத முகவரி எதுவும் தெரியாத அறியாதவர்கள் எல்லாம் இந்த தேர்தல் களத்தில் இறக்கி பூச்சாண்டி காட்டும் வேலையையும் சில தொழிற் சங்கங்கள் செய்கின்றன.

''எங்கிருந்தோ வந்தான் உங்கள் சாதி நான் என்றான் ஈங்கிவனை யாம் பெறவே என்ன தவம் செய்தோமோ" என நம்பிய சனத்தின் முன் நமட்டுச் சிரிப்பொன்றும் தந்தான். பாவம் இந்தத் பேக்காட்டு மக்கள். எடுப்பான மீசையும் ஏற்றாற் போல் உடல்வாகும் இருக்கின்ற காரணத்திற்காக மாத்திரம் அவர்களை தலைவர்களாக ஏற்றுக் கொள்கிறார்கள். இப்படி விருந்தாளியாக வந்தவர்களை எல்லாம் வேட்பாளர்களாக நிறுத்தி வெற்றிவாகை சூடும் அளவுக்கு இந்தப் பாமரமக்களின் பலவீனத்தை பயன்படுத்திக் கொள்கிறது ஒரு கூட்டம். அவைகள் ஒரு புறம் இருக்க தோட்டத் தொழிலாளர்களை கையேந்தும் பிச்சைக்காரர்களுக்கு சமனாக நடாத்திய சம்பவங்களும் இந்த ஊவா மாகாணத்தில் நடைபெற்று இருக்கிறது என்பது வேதனையுடன் குறிப்பிடத்தக்கது.

பணத்திமிர் படைத்த ஒரு வேட்பாளர் கடித உறைகளில் 100, 200 என வைத்து மக்களுக்கு வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசியலுக்கும் இந்திய அரசியலுக்கும் வேறுபாடு இருக்கின்றது என்ற கூற்றினை பொய்யாக்கும் வண்ணம் இம் முறை நடைபெற்ற இந்தச் சம்பவம் உண்மையாகவே தொழிலா ளர்கள் வர்க்கத்திற்காக போராடி வருகின்ற அரசியல் சக்திகளின் வெறுப்புக்களுக்கு இலக்காகி இருக்கின்றது. சோற்றுப் பொதிகளுக்கும் சாராயத்திற்கும் விலை போனவர்கள் இன்று 100க்கும் 200க்கும் தங்களின் உரிமைகளையும் எதிர்காலத்தையும் விற்பனை செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை நினைக்கும் போது கோபமும் வெறுப்பும் ஏற்படுகிறது.

பெரும்பான்மையோ சிறுபான்மையோ ஒருவருக்கொருவர் எதிர் தரப்பில் நின்றாலும் ஜெயிக்கப் போவது ஏதோ ஒரு முதலாளித்துவக் கும்பல் தான் என்பதை இந்த மக்கள் உணராத வரை அவர்களின் விடிவு அடையப்படாத ஒன்றாகவே இருக்கும். எல்லோரையும் எல்லாக் காலங்களிலும் ஏமாற்ற முடியாது என்ற கூற்றை இந்த அப்பாவிக் கூட்டத்தினர் மெய்பொருள் ஆக்குவார்கள் என்ற நம்பிக்கை மட்டும் இன்னும் நமக்குத் தளர்ந்து விடவில்லை.

- மலைக்கூத்தன் -

# பத்திரிகா (அ)தருமத்தின் படிமம்

ஓகஸ்ற் 2009 ஞானம் இதழில் கே.விஜயன் பற்றி மதிப்புக்குரிய எழுத்தாளர் மானா மக்கீனின் குறிப்பு ஒன்று இருந்தது. அதிலே விஜயனின் வெற்றியைப் பற்றிப் பொறாமையாற் பலரும் அவருக்குத் தீயன செய்கின்றனர் என்ற கருத்துப்பட எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக ஒரு சிகப்புப் பேராசிரியர் வெளியிலிருந்து (வீரகேசரி) நிருவாக இயக்குனருக்குப் பாரதூரமாகக் கடிதம் எழுதி அவரது வேலைக்கு ஆப்பு வைக்க முயன்றதாகவும் எழுதப்பட்டிருந்தது. அதைவிடவும் விஜயன் பத்திரிகா தருமத்தைக் கடைப்பிடிப்பதாகவும் சுட்டப்பட்டுள்ளது.

மேற்கூறிய புனைவுகளின் தோற்றுவாய் மானா மக்கீன் அவர்களாக இருக்க இயலாது. எனவே தான் இப் பொய்ச் குற்றச்சாட்டுக் கூறப்பட்டு அதற்கு எற்கனவே புதியபூமியில் மறுமொழியொன்று எழுதப்பட்ட சூழலையும் இங்கு விளக்குவது தேவையாகிறது. வீரகேசரி எந்தச் சிவப்புப் பேராசிரியரதும் பாரதூரமான கடிதத்தை வைத்துத் தன் ஊழியர்களில் எவர் மீதும் நடவடிக்கை எடுக்குமானால் அது ஒரு பேரதிசயமாக இருக்கும். நடந்தது இது தான். ஒரு இலக்கியக் கூட்டத்தில் பேசப்படாத விடயங்களை, உண்மையிற் பேசப்பட்டதற்கு நேர்மாறான கருத்துப்படத் தன்னுடைய பேருடன் வீரகேசரியில் விஜயன் செய்தியாக எழுதியிருந்தார். இது மிகத்தவறானது என்றும் பத்திரிகையின் நற்பேருக்குக் கேடானது என்றும் மேற்குறிப்பிடப்பட்ட பேராசிரியர் வீரகேசரிக்கு கடிதம் எழுதினார். இவ்வாறான பொறுப்பற்ற நடத்தையைக் கண்டித்து எழுதுவது மனிதாபிமானமற்ற செயலென்று மானா மக்கீன் அவ ர்கள் நம்ப மாட்டாரென்பதில் ஐயமில்லை.

விஜயன் அந்தக் கூட்டத்திற்குச் செல்லவில்லை என்பதும் பின்னரே தெரியவந்தது. இப்படி ஒரே ஒரு முறைப்பாட்டின் பேரில் விஜயன் கடுமையாகக் கண்டிக்கப்பட்டாரெனின் வீரகேசரி மிகக் கண்டிப்பாகப் பத்திரிகா தருமத்தைக் கடைப்பிடிக்கிற ஏடாக இருக்க வேண்டும். அதை நாம் நம்ப நியாயமில்லை. நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்ளாமல் நேரிற் கண்டது போல நிருபர்கள் சிலர் எழுதுவது நமக்குப் புதியதல்ல. நடவாததை நடந்தது போல எழுதுவதும் புதியதல்ல. அதனால் அவை சரியான ஊடக நடத்தையாகி விடாது. விஜயனைப் பற்றிய முறைப்பாடுகள் முன்னரும் போயிராவிடின் அவர் கடுமையாகக் கண்டிக்கப்பட்டிருக்க இடமில்லை என்றே எண்ண வேண்டியுள்ளது.

விஜயனைப் பற்றிப் புதிய பூமியிற் குறிப்பு ஒன்று மூன்று ஆண்டுக்கு முன்பு வந்தது. அது அவரது பத்திரிகா தருமத்தைப் பற்றி மேலுஞ் சிறிது சொல்லும். ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க இலக்கியங்கள் பற்றிய பயனுள்ள தகவல்களைத் தமிழ்ச்சங்கம், தேசிய கலை இலக்கியப் பேரவை போன்றவற்றின் கூட்டங்களில் ஒரு இளம் மாணவர் வழங்கி வந்தார். அதற்காக அவரைப் பலரும் மெச்சினர். அதைத் தாங்க முடியாத வயிற்றெரிச்சலால் விஜயன் சுடரொளி, ஞானம் போன்ற ஏடுகளிற் தனது பத்திகளில் அடுத்தடுத்து அந்த இளைஞரைப் பற்றி மிகக் கேவலமான முறையிற் குறிப்புக்களை எழுதி வந்தார். விஜயனின் பொருந்தாக் கூற்றுக்களைப் புதிய பூமியில் வந்த கட்டுரை மறுத்திருந்தது. அதற்கு விஜயனால் மறுமொழி சொல்ல இயலாமல் இருந்தது. அக்கட்டுரையிலே விஜயன் தனது வேலைக்கு ஒரு பேராசிரியர் ஆப்பு வைக்க முயன்றதாக முறைப்பட்டிருந்தற்குப் பதிலுங் கூறப்பட்டிருந்தது. அதன்பின் விஜயன் அது பற்றி எழுதுவதைத் தவிர்த்து வந்தார்.

விஜயன் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கூடியளவு வலிய ஒரு கடிதமாக எதுவும் எழுதப்பட்டிருந்தால் அது நிச்சயமாக வீரகேசரி நிறுவனத்தில் விஜயனுடைய கோப்பில் இருக்கும். விஜயனின் ஒத்துழைப்புடன் மானா மக்கீன் அவர்கள் அதைப் பார்க்க வாய்ப்பு உண்டு. ஒரு பிக்பொக்கற் காரனைப் பற்றியோ சைக்கிள் திருடனைப் பற்றியோ பொலிஸில் முறைப்படுவது மனிதாபிமானமற்ற செயல் என்றால் ஒரு நேர்மையற்ற பத்திரிகை நிருபரைப் பற்றி அவரது பத்திரிகை நிறுவனத்துக்கு முறையிடுவதும் மனிதாபிமானமற்ற தாகவே இருக்கும்.

மனிதாபிமானம் என்ற பேரில் போப்பாண்டவரின் பிரதிநிதி கொலைகாரன் பினோஷேக்கிற்காக சிலி அரசாங்கத்திடம் சில ஆண்டுகட்கு முன்பு மன்றாடினார். பினோஷேயினால் கொன்றொழிந்தவர்கட்காகவும் சிறையிலடைத்தவர்கட்காகவும் அவர் ஒரு சொற் பேசியறியார். அதுவும் ஒரு வகையான மனிதாபிமானந்தான்.

விஜயன் தனக்கெதிராக முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டு என்ன என்பதை, முடிந்தால் நேர்மையாக, எழுத்தில் வைக்கட்டும். வீரகேசரி அதை உறுதிப் படுத்தப்பட்டும், அதற்குப் பின் நாங்கள் பத்திரிகா தருமம் பற்றியும் மனிதாபிமானம் பற்றியும் விடியவிடியப் பேசலாம்.

- ஜெ -

# மாற்றம் நிச்சயம்

பேச நினைப்பதெல்லாம்
பெரிய கவிதையில்
பேசி விடலாம்
துயரமெனில் அழுதுவிடலாம்
சந்தோஷமெனில்
சின்னதாய்ச் சிரிக்கலாம்

சிலருக்கு புரியலாம்
புரியாமலும் போகலாம்
எல்லோருக்கும் புரியும்
என்ற நிச்சயத்திலா
எல்லாவற்றையும் செய்கிறோம்.

புரிந்து கொண்டு
புரிய வைக்கும்
பிரயத்தனத்தின் ஒவ்வொரு கணமும்
புதிதாய் உருவாகிறோம்
புதியதை உருவாக்குகிறோம்.

சில நேரங்களில்
தடுமாறுகிறோம்
ஒரு கவிதையை
தொடங்கி அதை
முடிக்கத் தெரியாத
கவிஞனைப் போல
வாழ்க்கையில்
தடுமாறுகிறோம்
தடம் மாறுகிறோம்

உணர்ச்சி வசப்படும் போது
உணர்விழந்து விடுகிறோம்
அறிவிழந்து அழுகிறோம்
உணர்ச்சியுடன்
உணர்வுடன்
அத்துடன் அறிவுடனும்
இருக்கப் பயில்வோம்

சிறு ஒளிக்கீற்று
செஞ்சூரியனாய் சிவக்கலாம்
ஒரு ஹைக்கூ
நாளை காவியமாய் மாறலாம்
சின்னதாய் தொடங்குவோம்
பெரிதாய் வளரும் அது
நாங்கள் தொடங்குவோம்
நாளை அவர்கள்
முடித்து வைப்பார்கள்
நிச்சயமாய் மாற்றம்
வந்தே தீரும்.

கிருஷ்ணா

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சம்பள உயர்வு போராட்டமும் நியாயபூர்வமான கோரிக்கைகளும்

மலையக தோட்டத் தொழிலாளர்களின சம்பள வுயர்வு தொடர்பாக வாய் திறக்காதவர்கள் கூட அவர்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு !'தில் சொல்லவாவது அது தொடர்பாக பேச வேண்டிய நிலையில் உள்ளார்கள். அதாவது சம்பளவுயர்வு என்பது மலையக அரசியல் வாதிகளுக்கு தேர்தல் காலங்களில் போஸ் டர்களில் வண்ணமயக மின்னும் வலிந்த புன்னகைகளைப் போல் கவர்ச்சிகரமான பிரச்சாரப் பொருளாகிவிட்டது. இதில் யாருக்கும் பூரண தெளிவிருப்ப தாய் தெரியவில்லை. சம்பள உயர்வு பற்றி பேசுமுன் பேசுபவர்கள் சில அடிப்படை விடயங்களில் தெளிவு பெறல் அவசியம். சம்பளம் என்றால் என்ன? அது ஏன் தேவை? எவ்வளவு உழைப்புக்கு எவ்வளவு சம்பளம்? விலைவாசியின் நிலைமை என்ன? உழைப்பின் பெறுமதி என்ன? இன்று வழங்கப்படும் சம்பளம் உழைப்புக்கு நிகரானதா? கடந்த காலங்களில் வழங்கப்பட்ட சம்பளங்கள் திருப்தியளித்ததா? இல்லையா? ஏன்? கடந்த காலங்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் தவிர்ந்த இதரவசதிகள் எவை? அவை இன்று வழங்கப்படுகிறதா? இல்லையா? ஏன்? முதலாளிகள் அன்று அடைந்த லாப வீதம் என்ன! இன்று அடையும் லாப் வீதம் என்ன? இவற்றின் மத்தியில் சம்பளவுயர்வுக்கு உள்ள சவால்கள் எவை? சம்பளம் நோக்கிய தொழி லாளர்களின் போர்க்குணம் எப்படியுள்ளது? இது அதிகரிக்கப்படல் வேண்டுமா? கூடாதா? ஏன்? இப்போராட்டத்தில் தொழிலாளர்களின் பங்கு என்ன? கூட்டு ஒப்பந்தங்களைத் தாண்டிய பெரும் வலிமை யாக நிற்கும் உழைக்கும் வர்க்கத்திற்கு சக்தி என்ன? அதை எவ்வாறு ஒன்றுதிரட்டுவது? போராடுவது? என்பது பற்றிய தெளிவுடன் எவரும் பேசுவதாகத் தெரியவில்லை. அதைத்தாண்டி இதன் சாத்தியத் தன்மையின் எதிர்மறையான விடயங்களை ரகசிய மாய் பேசிக் கொண்டு மேடைகளில் போலியாக முழக்கமிடுகிறார்கள்.

உண்மையில் பல்வேறு முரண்பாடுகளுடன் ஒருவருக்கொருவரை குற்றம் சாட்டும் எவரும் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டம் பற்றியும், தலைமைகளின் ஒருமித்த குரல் பற்றியும் பேசுவதும் இல்லை. செயல்படுவதும் இல்லை.

மேலும், சம்பளவுயர்வு பற்றி பே''ம் பேசுவதற்கு வலுவான ஆதாரங்கள் இவர்களிடம் இல்லை. இறாத்தல் அளவை முறை நடைமுறையில் இருந்த போது 17 இறாத்தல் கொழுந்துக்கு ஒரு நாள் சம்பளம் வழங்கப்பட்டது. இறாத்தல் அளவை முறை கிலோகிராமிற்கு மாறிய போது அது 17 கிலோவுக்கு ஒரு நாள் சம்பளம் என அறிவிக்கப்பட்டது உண்மையில் இது ஏறத்தாழ 8 கிலோவாக அமைந்திருக்க வேண்டும். அல்லது இரண்டு மடங்கு சம்பளம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அளவை முறைமாறிய காலப்பகுதி தொடர்பான தெளிவும், தேடலும் கொண்டு ஆதார பூர்வமான பேரம் பேசும் ஆற்றல் கொண்டவரால் பலமான கோரிக்கையை முன் வைக்க முடியும். அது முதலாளிமாரைத் தவிர்க்க முடியாத நிலைக்குத் தள்ளியிருக்கும்.

''சம்பளவுயர்வு பற்றி பேசுவோர் அல்லது பேச தகுதியுடையோர்" எனச் சொல்லிக் கொள்வோருக்கு சம்பளப்போக்கு பற்றிய வரலாற்றுத் தெளிவும் அவசியம். முதலில் பேச்சு வார்த்தையில் வலிமையுடையவராதல் வேண்டும். அதற்கான வலுவான ஆதாரங்களுடன் மேசைக்குச் செல்லவேண்டும். அதை விடுத்து மரண வீட்டுக்குச் செல்வதுபோல் திடீரென புறப்பட்டுப் போவதில் பயன்கிடைக்காது. பேச்சு வார்த்தைகள் பலனளிக்காத போது உழைக்கும் மக்களின் உணர்வு பூர்வமான ஒன்று திரண்ட போராட்டத்தை சரியாக வழிநடாத்த தலைமைகள் முன் வரவேண்டும். தவணைக்குத் தவணை தள்ளிப் போட்டு பிச்சை வாங்குவதைப்போல் கெஞ்சி கூத்தாடுவது தொழிலாளர்களின் உணர்வை அவமதிப்பதாகும். தொழிலாளர் வர்க்கம் தன்னை உணராதபோது அதன் விடிவுக்கான எந்தப் போராட்டமும் முழுமையாக வெற்றியடையாது. எனவே மக்கள் அரசியல் மயப்படுத்தப்படுவதும் ஒவ்வொருவரின் பங்கினை உணர வைப்பதும் பெற்றுக் கொள்வதும் இப்போராட்ட வெற்றிக்கு வலு சேர்க்கும்.

பத்தனையூர் வே.தினகரன்

# N.G.Oகள் சேவைபுரிவது யாருக்கு?

மக்கள் நலன், மனித உரிமை, சமாதானம் இன ஐக்கியம் போன்ற வார்த்தைகளை அதிகம் உச்சரிப்பவை N.G.Oக்களாகத் தான் இருக்கும். மக்களது கௌரவமானதும் சுதந்திரமானதுமான வாழ்வை வென்றெடுக்கவே இந்த நிறுவனங்கள் சேவை புரிவதாக கூறிக்கொள்கின்றன. இலங்கையையொத்த மூன்றாமுலக மக்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு கருத்தியல் அம்சங்களில் N.G.O க்களது பாதிப்பு அதிகம்.

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களிடேயே N.G.Oக்கள் மிகவேகமாகவே தனது செயற்பாடுகளை முனைப்புப்படுத்தி வருகின்றன. அவர்களிடையே சேவை புரியும், சலுகைகள் வழங்கும் நல்ல நண்பனாகவே N.G.Oக்கள் நடிக்கின்றன. அதேபோல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கும் நிறுவனமாகவும அது முக்கியத்துவம் பெறுகிறது. வேலைவாய்ப்பு இல்லாத சூழ்நிலையில், சுயபொருளாதாரம் சிதைந்து கொண்டிருக்கும் நிலையில், உற்பத்தி பற்றாக்குறை நிலவும் வேளையில் இந்த நிறுவனங்களது சேவைகள் சலுகைகள், வேலை வாய்ப்புகள் பெரிய விஷயமாகவே இருக்கும். அது ஒரு வரப்பிரசாதமாகவும் மக்கள் நினைப்பர்.

இந்த நிறுவனங்களின் நோக்கங்களை ஆழச் சென்று ஆராய்ந்தால் முடிவுகள் பயங்கரமானதாக அமையலாம். சேவைகள், சலுகைகள், வேலைவாய்ப்பு போன்ற முகமூடிகளின் பின்னே ஒளித்திருக்கும் உண்மை முகம் வெளிப்படும்.

உண்மையில் அவர்கள் சேவை என்ன என்று பார்த்தால் உப்பு சப்பில்லாதவைகளாக இருக்கும். மலையகத்தை பொறுத்தளவில் கல்வி ரீதியில் பெருமளவு உதவும் நிறுவனங்களாக இருப்பவை சீடா, G.T.Z போன்றவையாகும். மலையகத்தில் கல்வி வளர்ச்சியில் அவை கணிசமான பங்கு செலுத்தியுள்ளன. அதேபோல தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளுக்கு பொறுப்பான Trust நிறுவனமும் மக்களுக்கு வசதிகளை செய்து கொடுத்துள்ளன. மிகமேலோட்டமாக பார்த்தால் இவை மக்களுக்கு பெரிய சேவை வழங்கியதாகவே நினைக்கத் தோன்றும். நிறைய பேர் அப்படி நினைத்துத்தான் ஏமாறுகிறார்கள். ஆயினும் இதில் மக்களுக்கு சேவைபுரிந்ததைவிட அரசுக்கே மறைமுகமாக இந்த நிறுவனங்கள் சேவை புரிகின்றன.

இதே போல் சிறிய சிறிய நிறைய நிறுவனங்கள் இயங்குகின்றன. அவை தோட்டங்களில் என்ன சேவை புரிகின்றன என்றால் தோட்டங்களை பார்த்து அதைப்பற்றி அறிக்கை செய்து அதை செயற்திட்டமாக வகுத்து பணம் தரும் தனவந்தகர்களுக்கு அனுப்பி பணத்தைப் பெற்றுக்கொள்வது தான். இதே தொடர்ச்சியான செயன்முறையில் தான் அவற்றிற்கு பணம் வருகிறது. அதன் மூலம் அவை இயங்குகின்றன. அதுமட்டுல்லாது அரசியல் தொழிற்சங்க விடயங்களிலும் அவை செயற்படுகின்றன.

மக்களின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப அவர்கள் கூறிக்கொள்ளும் கௌரவமானதும் சுதந்திரமானதுமான வாழ்வை பெற்றுக் கொள்ளவும் அவர்கள் சொல்லும் தீர்வு மிக மேலோட்டமானவையாக இருக்கும். காரணங்களை ஆராய மாட்டார்கள். பணம் வருகிறது, ஏதோ செய்கிறோம் என்று காட்டினால் போதும்.

எதிர்காலத்திற்கான சமாதானம் என்ற பெயரில் இயங்கும் ஒரு நிறுவனம் சமாதானத்தை இளைஞர்கள் மூலம் தான் ஏற்படுத்தலாம். என்றும் வேறு வேறு இனங்களை சேர்த்த இளைஞர்களை ஓரிடத்தில் திரட்டி பயிற்சி முகாங்களை நடத்துவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தப் போகிறார்களாம். இன முரண்பாடு ஏற்பட்டது எப்படி? ஏற்படுத்தியது யார்? ஏன் ஏற்படுத்தினார்கள்? இனமுரண்பாடு போராக ஏன் எவர் நலன் காக்க போர் நடந்தது? இன்னும் இப்படியாக எழும் கேள்விகளுக்கு பதில் தேடாமல் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

N.G.Oகளது நுனிப்புல்மேயும் வேலைக்கு மேலே சொன்னது ஓர் உதாரணம் மட்டுமே. N.G.Oகளின் பணிகள் உண்மையில் யாருக்கு N.G.Oகளின் பணிகள் உண்மையில் யாருக்கு லாபம் தருகின்றன? என்று பார்த்தால் ஆளும் ஆதிக்கங்களுக்குத் தான். ஏனெனில் அவை செய்த சேவை மூலமாக அரசு என்பது மக்களுக்கு சேவை செய்யும் நிமித்தம் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு எனும் பிரதான கருத்தியல் சிதைக்கப்பட்டது தான் நடந்தது.

அரசின் சுரண்டலுக்கு எதிராக மக்கள் நலனை உதாசீனப்படுத்துவதற்காக மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு போராடுவதற்கு பதிலாக அவர்கள் N.G.Oகள் பின் செல்கின்றார்கள். மக்களின் போர்க்குணத்தை மழுங்கடித்து அவர்களின் சிந்தனையைச் சிதறடித்ததில் அவற்றின் பங்கு அதிகம். பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் சலுகைகளை தேடி ஓடும் பண்பு இருக்கத்தான் செய்யும். அதை இவர்கள் சரியாக பயன்படுத்தி அவர்களை இன்னும் பின்னுக்கு தள்ளுகிறார்கள்.

இந்த நிறுவனங்களது உண்மை முகங்களை தோலுரித்துக்காட்ட நாம் செய்ய வேண்டியது ஏதெனில் மக்களை சிந்தனை ரீதியில் மாற்றுவதும் ஓர் பண்பாட்டு போராட்டத்துக்கு தயார் படுத்துவதுமாகும். இதை செய்யத் திராணியுள்ள முற்போக்கு சக்திகள் ஐக்கியப்பட்டு போலிகளுக்கு எதிரான மக்கள் அமைப்புகளை கட்டவேண்டும். அப்போது சமூக மாற்றம் சாத்தியப்படும்.

கிட்டு




## "வீட்டுப் பணியாளர் எனும் இனிப்பு"

''லயங்கள் பிள்ளைகளுக்கு பாதுகாப்பில்லை. எங்களால் நல்ல உணவையோ உடையையோ கொடுக்க முடிவதில்லை. நன்கு உண்டு உடுத்தாவது இருக்கட்டு" என்று சொல்லிச் சொல்லியே தான் மலையகப் பெற்றோர்களில் கணிசமானோர் அவர்களின் பிள்ளைகளை வீட்டு வேலைகளுக்காக அனுப்புகின்றனர். அவ்வாறு வீட்டு வேலைகளுக்காகச் செல்வோர் உழைப்புச் சுரண்டலுக்கு மட்டுமன்றி பாலியல் துன்புறுத்தல்களுக்கும் மன உழைச்சல்களுக்கும் ஆளாகின்றனர். அவர்களில் வருடாந்தம் பலர் அகால மரணமான செய்திகளையும் கேட்டிருக்கிறோம். ஆகஸ்ட் 15ம் திகதி இரண்டு சிறுமிகளின் சடலங்கள் கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் கழிவு நீர் கால்வாயில் காணப்பட்டது. அவை லக்ஷபான தோட்டப் பிரிவைச் சேர்ந்த சுமதி, ஜீவராணி ஆகியோரின் சடலங்கள். அவர்கள் ''வீட்டுப் பணியாளர்களாக" கொழும்புக்கு உழைக்கச் சென்றவர்கள். நல்ல உணவை உண்ணவும் நல்ல உடையை உடுக்கவும் சென்றவர்கள். அதனாலேயே கழிவு நீரில் சடலமாக மிதந்தவர்கள்.

அதுமட்டுமல்ல இறந்த பிறகு அவர்களுக்கு கௌரவப்பட்டமும் கொடுக்கப்பட்டது. அது தன்னினச் சேர்க்கையாளர்கள். ஜீவராணி (13 வயது) சுமதி (14வயது) ஆகிய சிறுமிகள் வீட்டுப் பணிக்குச் சென்ற இடத்தில் தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டதாகவும் அதற்கு இடையூறு ஏற்பட்டதால் அவர்கள் கழிவு நீர்க் கால்வாயில் குதித்து தற்கொலை செய்து கொண்டனர் என்றும் அவர்களின் எஜமானர்கள் கூறுகின்றனர். வீட்டு வேலைக்காகச் சென்றவர்கள் சடலமாக வீடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டது. இது முதலாவது தடவையும் அல்ல கடைசித் தடவையும் அல்ல. 14 வயதானவர்களை வேலைக்கு அமர்த்தலாம் என்று சட்டம் சொல்லுகிற போதிலும் வீட்டு வேலைக்காக 14 வயதுக்கு குறைந்தவர்களும் அமர்த்தப்படுகின்றனர். 14 வயதுக்கு மேற்பட்டவர்களும் கூட வேலைக்கு அமர்த்தப்படும் இடங்களில் பாதுகாப்பற்றவர்களாகவே இருக்கின்றனர்.

பொதுவாக வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுபவர்கள் தொழிற் சட்டங்களின் ஆளுகைகளுக்கு உட்பட்டவர்களாகவோ அவற்றின் பாதுகாப்புக்கு உட்பட்டவர்களாகவோ இல்லை. இந்நிலையில் 18 வயதுக்கு குறைவானவர்களான சிறுவர்களின் நிலை மிகவும் மோசமானது. மலையகச் சிறார்கள் நிலை பரிதாபகரமானது.

அண்மையில் சடலமாக மீட்கப்பட்ட சுமதி, ஜீவராணி ஆகியோரை அதே தோட்டத்தைச் சேர்ந்த தரகர் ஒருவர் கொழும்புக்கு கொண்டு சென்று ''ரணா ஏஜன்சி" எனும் வீட்டு வேலைக்களுக்கு சிறுவர்களை வழங்கும் முகவர் நிலையத்தில் ஒப்படைக்க அந் நிலையம் அவர்களை பௌத்தலோக மாவத்தையில் உள்ள இரண்டு வீடுகளுக்கு அனுப்பியுள்ளது. அத்தோட்டத்தைச் சேர்ந்த தரகருக்கு ஒருவரை வேலைக்கு வழங்கும் போது மூவாயிரம் கொடுக்கப்படுவதாகவும் ரணா ஏஜன்சி ஒருவரை வேலைக்கு கொடுக்கும் போது எஜமானர்களிடமிருந்து ரூபா 10000 பெற்றுக் கொள்வதாகவும் தெரியவருகிறது. இந்த ரணா ஏஜன்சி தோட்டங்கள் தோறும் தரகர்களை வைத்திருக்கிறார்கள். அந்தத் தரகர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பியே வறுமையில் இருக்கும் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை வீட்டு வேலைக்கு அனுப்புகிறார்கள். இந்த இரண்டு சிறுமிகளும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் அல்லது வேறு காரணங்களுக்காக கொல்லப்பட்டிருக்கலாம் என்றே அவர்களின் பெற்றோர்கள் சந்தேகம் எழுப்பினர்.

கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் மரண விசாரணை நடத்தும் போது பெற்றோர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் செய்த சமர்ப்பணத்தையடுத்து ஆகஸ்ட் 17ந் திகதி புதைக்கப்பட்ட சடலங்கள் ஆகஸ்ட் 27 ந் திகதி தோண்டி எடுக்கப்பட்டன. அவை கண்டி போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு மீள் பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட 1வது பிரேத பரிசோதனைகள் அறிக்கையின் சடலங்கள் உடல்களில் காயங்கள் இருக்கவில்லை என்றும் சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் படவில்லை என்றும் நீரில் மூழ்கியதாலேயே மரணம் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சடலங்களை அடையாளம் காணும் போது உடலில் காயங்களைக் கண்டதாக சிறுமிகளின் பெற்றோர்கள் கூறுகின்றனர். அத்துடன் சுமதி என்ற சிறுமி எழுதியதாக காட்டப்படுகின்ற கடிதத்தில் அவர்கள் இருவரின் இறப்புக்கும் எஜமானர்களும் எஜமானிகளும் காரணம் அல்ல என்று எழுதப்பட்டுள்ளது. இக்கையெழுத்து சுமதி உடையது அல்ல என்று சுமதியின் பெற்றோர்கள் கூறுகின்றனர்.

உண்மை எவ்வாறு இருந்த போதிலும் மரணவிசாரணைகளில் அச்சிறுமிகளின் மரணங்கள் தற்கொலையா அல்லது கொலையா என்பது சாட்சியங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். ஆனால் இந்த இரண்டு சிறுமிகளின் மரணங்கள் மலையகத்தை உலுக்கியுள்ளது. சிறுவர்களை வீட்டு வேலைக்கு அனுப்புவது பற்றி சிந்திக்க வைத்துள்ளது எனலாம்.

சில அரசியல்வாதிகள் தொழிற்சங்க வாதிகள் இச்சம்பவத்தை தங்கள் தங்கள் அரசியல் இருப்பிற்கான பிரசாரமாக பயன்படுத்தினர். சில அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான செயல்திட்ட அறிக்கைகளை தயாரிக்க பயன்படுத்தி வருகின்றனர். இதற்கு அப்பால் நேர்மையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

''புதிய மலையகம்" மலையகச் சிறார்களை வீட்டு வேலைக்கு அமர்த்துவதும் மலையக தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்காலமும் என்ற தலைப்பில் பகிரங்க கருத்தரங்கை செம்ரெம்பர் 6ந் திகதி நடத்தியது. அதில் தொழிலாளர்களின் பிரசன்னம் பெரிய எண்ணிக்கையில் இருக்கவில்லை. ஆனால் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. அதில் சில தொழிற் சங்க தலைவர்கள் உரையாற்றிவிட்டுச் சென்று விட்டனர். கருத்தரங்கின் முடிவுவரை இருந்தவர்கள் முக்கியமான தீர்மானங்களை எடுத்தனர்.

18வயதுக் குறைந்த மலையகச் சிறார்களை வீட்டு வேலைக்கு அனுப்புவதில்லை என்ற பண்பாட்டு ரீதியான முடிவுகளை எடுத்தனர். எவ்வளவு தான் பொருளாதாரப் பிரச்சனை இருந்தாலும் வீட்டு வேலைகளுக்கு சிறார்களை அனுப்புவதில்லை என்று மலையகம் எங்கும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை புதிய மலையகம் ஏனைய அமைப்புக்களுடன் ஐக்கியப்பட்டு முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்படுபவர்களுக்கு தொழிற் சட்டரீதியாகவும் விசேட ஏற்பாடுகளின் ஊடாகவும் பாதுகாப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையும் அங்கு முன்வைக்கப்பட்டது.

சம்பள உயர்வு வேண்டி ஒத்துழையாமை போராட்டம் நடைபெறுகின்ற போது அந்த இரண்டு சிறுமிகளின் மரணம் தோட்டத்தொழிலாளர்களின் வறுமையை போக்கும் அளவுக்கு சம்பள உயர்வு அவசியம் என்பதையே வலியுறுத்தி வேண்டியுள்ளது.

எமது நாட்டுச் சூழலில் வீட்டு வேலை என்பது அடிமை வேலையே ''வீட்டுப் பணியாளர்கள்" என்ற அழகு தமிழில் அழைக்கப்பட்டாலும் வீட்டு வேலை செய்வோர் அடிமைகளாகவே நடத்தப்படுகின்றனர். அவர்கள் திறன் மிக்க தொழிலாளர்களாக மதிக்கப்படுவதில்லை. அதிலும் சிறுவர்களை வீட்டு வேலைக்கு அனுப்புவதன் மூலம் எதிர்கால அடிமைகளை உருவாக்கவே துணைபோகின்றோம்.

200 வருட மலையக மக்களின் அடிமை வாழ்வு தகர்க்கப்பட போராட்டங்கள் நடைபெறுகின்ற போது மேலும் மேலும் அடிமைகளை பயிற்றுவிக்க துணைபோவதைத் தவிர்ப்போம். சிறார்களை வீட்டு வேலைக்கு அமர்த்தாது இருப்போம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

சுற்று 16 செப்ரெம்பர் 2009 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 125

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@gmail.com, web : www.ndpsl.org


## சிறைப்படுத்தப்படும் மாற்று அபிப்பிராயங்கள்

ஜே.எஸ்.திசநாயகத்திற்கு கொழும்பு மேல்நீதிமன்றம் இருபது வருடங்களுக்கு கடுழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது. North - Eastern monthly என்ற சஞ்சி கையை பிரசுரித்து வெளியிட்டமை, அதில் இனக்குரோதங் களைத் தூண்டும் வகையில் கட்டுரைகளை வெளியிட்டமை அதனை பிரசுரிப்பதற்காக நிதி திரட்டியமை ஆகிய குற்றச் சாட்டுக்கள் மீதான விசாரணையின் பின்னர் 2009.8.31ஆந் திகதி குற்றவாளியென தீர்ப்பளித்து 20 வருடங்கள் கடுழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது.

வழக்குத் தீர்ப்பின் உள்ளடக்கம் விசாரணைகள் பற்றி விமர்சிப்பது நீதிமன்றத்தை அவமதிப்பதாகக் கொள்ளப்படும். மேன்முறையீட்டு விசாரணையில் விவாதிக்கப்படலாம். அதனைத் தவிர அத்தீர்ப்பின் மீது நியாயமான கருத்துக்களைச் சொல்லவும் அதனை கல்வியியல் ரீதியான வகுப்பாக்கங்களைச் செய்யவும் முதலாளித்துவ ஜனநாயகம் இடம் அளிப்பதாகச் சொல்லப்படுகிறது.

திஸநாயகம் நாடறிந்த உலகறிந்த பத்திரிகையாளர். அவர் பயங்கரவாத தடைச்சட்டம் அவசரகாலச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு முன்னும் பல எழுத்தாளர்கள் இலங்கை நீதிமன்றங்களால் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் ஆட்சியின் போது ''கவட்ட கதிக்கயா'' என்ற பத்திரிகையின் ஆசிரியர் பி.டி.பே லிஸ் பிரிட்டிஷ் அரசாங்கத்தை அவமதிப்பதாக குற்றம் சாட்டப்பட்டார். 'கம்கருவா' பத்திரிகையில் அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் கட்டுரைகளை எழுதினார்கள் என்று எஸ்.ஏ.விக்கிரமசிங்கவும் பென்ட் சில்வாவும் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டு ஒரு வருட சிறைத்தண்டனையும் ரூபா 3000 தண்டமும் விதிக்கப்பட்டது அதன்பிறகு 'நவசக்திப்'' பத்திரிகைக்கு தடை விதிக்கப்பட்டு அதன் ஆசிரியரான ஓ.பி.யசோதீஸ்சுக்கு நான்கு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

'கம்கருவ பத்திரிகையின் பத்திரிகையாளர்களான கேமசிறி சில்வா, சிறிசேன குலதிலக்க, சோமவீர சந்திரசிறி, டி.பி.நந்தகே, எஸ்.ஜினேந்திரபால போன்றோர் அடிக்கடி நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளனர். தீப்பொறி பத்திரிகையின் ஆசிரியர் எம்.கே.அந்தனில் இரண்டு வருட சிறைத்தண்டனை பெற்றார்.

குற்றவியல் நீதிவிசாரணை ஆணைக்குழுவினை அவமானப்படுத்திய குற்றம் சாட்டப்பட்டு டெய்லி நியூஸ் பத்திரிகையின் பத்திரிகையாளர் பிரடி சில்வாவுக்கு ஆறுமாத சிறைத்தண்டனையும் அதன் ஆசிரியர் பத்திர விதானவுக்கு ரூ.500 தண்டமும் விதிக்கப்பட்டது. சிறையிலேயே பிரடி சில்வா காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தில் ரோகண குமார, சுணில் மாதவ, பிரேமதிலக, பி.ஏ.சிறிவர்த்தன சிங்க ரணதுங்க லசந்த விக்ரமதுங்க ஆகிய பத்திரிகையாளர்களுக்கு குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

பல தமிழ் சிங்கள முஸ்லிம் பத்திரிகையாளர்கள் பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். பல கடுமையாகத் தாக்கப்பட்டனர். கடந்த இரண்டு வருட காலத்தில் பல பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டனர் பலர் கொல்லப்பட்டனர்.

திஸநாயத்திற்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் அவசரகால தடைச்சட்டத்தின் கீழும் தண்டிக்கப்பட்டவராவார். இவர் 1988, 89 கால அரச அடக்குமுறைக் காலகட்டம் அல்லது ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சிக் காலகட்டத்தின் போது தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐ.நாவுக்கு எடுத்துச் சென்ற மனித உரிமை மீறல்கள் பற்றிய அறிக்கைகள் தயாரிக்க இவரே உதவியாளர் ஆவார். காணாமல் போன பெற்றோர் சங்கத்துடன் நெருங்கிச் செயல்பட்டார். அதேபோன்று வடக்கு கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமைகள் பற்றி நிறையவே எழுதியுள்ளார். 2002 - 2006 வரை சமாதான காலகட்டத்தில் கிளிநொச்சிக்குச் சென்று பத்திரிகையாளர் என்ற ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை சந்தித்துள்ளார்.

இவரது வழக்கில் முக்கியமான விடயம் யாதெனில் அவர் எழுதிய இரண்டு ஆசிரியர் தலையங்கங்கள் சாதாரண மக்கள் மத்தியில் இனக்குரோதத்தை ஏற்படுத்துவனவென்று நீதிமன்றம் பொருள் கோடல் செய்துள்ளது.

குற்றவியல் மான நஷ்ட அல்லது குடியியல் மான நஷ்ட வழக்குகள் அபகீர்த்தி ஏற்படுத்தும் எழுத்து அல்லது பேச்சு வெளிப்படையாக நேரடியாக இருக்க வேண்டும் என்பது வழக்குத் தீர்ப்புச் சட்டங்களில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அல்லது தேசிய நீரோட்ட நிலைப்பாடுகளுக்கு மாறான அபிப்பிராயங்கள் அரசிற்கு எதிரான சூழ்ச்சி அல்லது பயங்கரவாதம் ஆகுமோ என்பதை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய தேவையை திஸநாயகம் வழக்குத் தீர்ப்பு ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடத்தில் வோல்டேயரின் கூற்று நினைவில் கொள்ளத் தக்கது. ''நான் உனது கருத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் உனது கருத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு எனது உயிரையும் விடத்தயார்.'' அப்படிக் கூறிய வோல்டேயர் தனது பாதுகாப்பிற்காக நாட்டிலிருந்து வெளியேறினார். எழுத்தாளரும் பத்திரிகையாளருமான யூலியஸ் பூசிற்கும் நினைவுக்கு வருகிறார்.

எதனையும் எதிர்ப்பதற்கான உரிமை ஒரு மனிதனின் பிறப்புரிமையாகும். அவ்வுரிமை பற்றி சிங்களத்தில் இருக்கும் ஒரு கூற்று நினைவுக்கு வருகிறது. ''அரசனுக்கு எதிராக எழுதுவது நாட்டிற்கு எதிராகவல்ல'' என்ற அரசர் காலத்தில் வழக்கில் இருந்த கூற்றாகும். அக்கூற்றும் தற்போது செல்லுபடியாவதாக தெரியவில்லை.

எனவே மாற்று அபிப்பிராயங்களைக் கொண்டோ அதனை வெளிப்படுத்துவதற்கான வரையறை என்று சிந்தித்து அவற்றைச் சிறைப்படுத்திக் கொள்வதா? வரையறையை தாண்டிச் சென்று சிறைப்படுத்தப் படுவதா? மாற்று அபிப்பிராய சுதந்திரத்தின் பரப்பெல்லையை விரித்து அதனை ஜனநாயகத்தின் அடிப்படை உரிமையாக நிலைநாட்டிக் கொள்வதா என்பதில் எதனை தெரிவு செய்து கொள்ளலாம்.

**ஆசிரியர் குழு**

# தடுமாறும் தமிழ்த் தலைமைகளும் தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்காலமும்

**வெகுஜனன்**

**தமிழர் தலைமைகள்** என்று தம்மை வர்ணித்து வரும் அனைத்து தமிழ்க் கட்சிகளும் இன்று கடுமையான தடுமாற்றத்திற்கும் இயலாமைகளுக்கும் உள்ளாகி நிற்கின்றன. இதில் கடந்த பொதுத்தேர்தலில் புலிகள் இயக்கத்துடன் இணைந்து 22 பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்வதறியாது திகைத்து நிற்கிறது. வன்னி யுத்தத்தில் பின்னடைவு ஏற்பட ஆரம்பிக்கும் வரை தாமே தமிழ்த் தேசிய இனத்தின் ஏகப்பிரதிநிதிகள் என்பது போன்று நெஞ்சு நிமிர்த்தி நின்று பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் வீண் பேச்சுக்களும் வீரதீர வசனங்களும் வெளியிட்டு வந்தனர். அரசியல் தொலை நோக்கில் தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்காலம் எப்படி அமையும் என்பதைச் சிறியளவில் கூட அவர்களால் அனுமானிக்க முடியவில்லை. காரணம் அவர்களது நம்பிக்கை முழுவதும் தமிழ் ழக்களின் மீதல்ல. புலிகள் இயக்கம், இந்தியா, சர்வதேச சமூகம் என்பனவற்றின் மீதே முழுவதும் தங்கியிருந்தது. ஆனால் இவர்கள் எதிர்பார்த்திருந்த இந்தியாவின் நிலை முழுக்க முழுக்க எதிர்நிலைப்பட்டதாலும் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு அதன் தலைமை அழிக்கப்பட்டதாலும் இன்று திரிசங்கு நிலையில் இருந்து வருகின்றனர். இது அவர்களால் செய்யப்பட்ட முன்வினைகளின் பின் விளைவுகளால் ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலையாகும். அதனால் கக்கவும் முடியாது விழுங்கவும் முடியாத கையறு நிலையில் தமிழ்க் கூட்டமைப்பினர் இருந்து வருகின்றனர்.

அண்மையில் இத்தமிழ்க் கூட்டமைப்பினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை அலரி மாளிகையில் சந்தித்து மூன்று மணிநேரம் பேச்சுவார்த்தை நடாத்தியதாக ஊடகங்கள் தெரிவித்தன. ஆனால் அச் சந்திப்பில் கூட்டமைப்பினர் பேசிய நேரம் மிகக் குறைவானதாகும். பல்வேறு விடயங்கள் பற்றி விவாதிக்கப் போகிறோம் எனக் கூறிச் சென்றவர்களிடம் பெரிதாக எதையும் கேட்கும் நிலையில் ஜனாதிபதி இருக்கவில்லை. ஜனாதிபதியும் அவரது சகோதர ஆலோசகர் பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷவும் தான் அதிக நேரம் பேசியவர்களாவர். தாம் ஏன் சுமார் மூன்று லட்சம் வரையான மக்களை முகாம்களில் தடுத்து வைத்திருக்கிறோம் என்பதற்கும், மீள் குடியேற்றம் உடனடியாகவோ அன்றி கிட்டிய காலத்திலோ செய்ய முடியாது என்பதற்கும் நீண்ட விளக்கம் அளிக்கப்பட்டது. புலிகள் இயக்கத்தை முழுமையாக வடிகட்டி எடுக்கவும். வன்னியில் கண்ணி வெடிகளை கண்டு பிடித்து அகற்றவும் அதிக காலம் செல்லும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என்ற இறுக்கமான செய்தியே தமிழ்க் கூட்டமைப்பினருக்கு கூறப்பட்டது. இதனைக் கேட்டுக் கொண்டு வெறுங்கையுடன் திரும்புவதைத் தவிர வேறெதுவும் கூற முடியாத பரிதாப நிலையிலேயே அவர்கள் இருந்தனர். அவர்களிடம் உள்ள ஒரே திருப்தி பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளாவது உள்ளனவே என்பது மட்டுமேயாகும். ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள சங்கடம் யாதெனில் அவர்கள் ஊர் உலகிற்குப் பாராளுமன்ற உறுப்பினர்களாவர். அதுமட்டுமன்றி இதுவரை அரசாங்கத் தரப்பால் கூட்டமைப்பில் இருந்து ஏவரையும் தமது பக்கத்திற்கு பிரித்தெடுத்துக் கொள்ள இயலவில்லை. எனவே அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டே அதற்கான முயற்சிகளும் இடம்பெறுவதாகவே பேசப்படுகிறது. அந்த வலைக்குள் ஓரிருவர் சிக்கவும் கூடும் என்ற நம்பிக்கை உள்ளது.

மேலும் ஏற்கனவே இடம்பெற்ற வடக்கின் தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருக்கு கிடைத்த வாக்கின் வீதம் 10ற்கும் குறைவானதாகும். யாழ்மாநகரசபையில் உறுப்பினர்களைப் பெற முடிந்தாலும் வவுனியாவில் நகரசபை நிர்வாகத்திற்கு தலைமை தாங்கினாலும் மக்களின் ஆதரவு நிலை அடிமட்டமாகவே இருந்து வருகிறது. பாராளுமன்ற உறுப்பினர் ஆகுவதோ ஏனைய தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுவதோ மக்களின் ஆதரவில் அல்லது அரசியல் தெளிவின் கொள்கை விளக்கத்தின் வழிகளில் அல்ல. வர்க்கம், சாதி, ஊர், பணம், ஊழல், முறைகேடுகள் போன்றனவே ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் வெற்றியை தீர்மானிக்கின்றன. இதன் மூலம் அத்தகையவர்களே தலைமை தாங்குபவர்களாக காட்சிப்படுத்தப்படவும் செய்கின்றனர். இது 62 வருட முதலாளித்து பாராளுமன்ற ஆட்சி முறையின் இலட்சணம் ஆகும். இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல தமிழ்த் தலைமைகள். அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்த் தேசியத்தின் பெயரால் பாராளுமன்றம் - ஆயுத நடவடிக்கைகள் - பாராளுமன்றம் எனச் சுழன்ற வண்ணமே உள்ளனர். இத்தகையவர்களுக்கு ஆதிக்க அரசியல், பாராளுமன்ற பதவிகள், பேரப்பேச்சுக்கள் போன்றவற்றிற்கு அப்பால் செல்ல முடிவதில்லை. தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் காணப்படும் இன வர்க்க சாதி பெண் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக கொள்கை வைக்கவோ அவற்றுக் குரிய போராட்ட வழிமுறைகளை முன்னெடுக்கவோ தாயாராக வில்லை. இனிமேலும் புதிய மாற்றுக் கொள்கைக்கோ நடைமுறை க்கோ தயாராக மாட்டார்கள்.

இதன் வழியில் அரசாங்கத்தோடு இணைந்து நின்று செயலாற்றி வந்த ஈ.பி.டி.பி இப்போது சற்று தடுமாற்றம் அடைந்த நிலையில் காணப்படுகிறது. அரசாங்கத்தின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட நிர்ப்பந்திக்கப்பட்டதையும் வடக்கில் மக்களிடம் அதற்கு குறைந்தளவிலாவது வரவேற்பு கிடைக்காமல் போனதையிட்டும் உணர ஆரம்பித்துள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள கருத்துக்களில் அதனைக் காணமுடிகிறது. மகிந்த சிந்தனை அரசாங்கமும் ஜனாதிபதியும் தமது உள்நோக்க நிலைப்பாடுகளை வடக்கில் ஈ.பி.டி.பி மூலமும் கிழக்கில் அமைச்சர் கருணா, முதலமைச்சர் சந்திரகாந்தன் மூலமும் நிறைவேற்றிக் கொள்ள முன்நிற்கிறார்களே தவிர அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளையோ அல்லது தமிழ் மக்கள் சார்பான விருப்பங்களையோ நிறைவேற்றத் தயாராக இல்லாத நிலையே காணப்படுகிறது. இதனால் இவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான உள்ளார்ந்த முரண்பாடு அடிக்கடி வெளிவராத புகைச்சல்களாகவே இருந்து வருகின்றன.

இதே நிலைதான் ஆயுதம் தூக்கி அதனால் அழிவுகள் பட்டு பின் ஜனநாயக நீரோட்டம் என்று கூறிக்கொண்டு பாராளுமன்ற அரசியலுக்கு வந்தவர்களிடமும் காணப்படுகிறது. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் (பத்மநாபா அணி) மற்றும் ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியனவும் அரசாங்கத்தை எதிர்த்து நிற்கவும் முடியாது விட்டுச் தூரச் சென்று சுதந்திரமாக அரசியல் செய்யவும் முடியாத நிலையில் தடுமாற்றத்துடன் இருந்து வருகின்றனர். ஏறத்தாழ ஒரே நிலைப்பாட்டில் உள்ள இவர்களிடம் கூட ஒத்த கருத்தும் இல்லை மாற்றுக் கொள்கையும் இல்லாத நிலைதான் தொடர்கிறது.

இவற்றைவிட தற்போது தமிழ்க் கூட்டமைப்பில் இருந்துவரும் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய இரண்டு கட்சிகளும் ஏற்கனவே புலி எதிர்ப்பு வன்மத்துடன் சந்திரிகா அரசின் கீழ் அரசாங்கத்துடன் இருந்து தமது நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்களாவர். புலிகள் மட்டுமே பிரதான எதிரியென கொண்டிருந்த இவர்கள் புலிகளின் ஆதரவுடன் பாராளுமன்ற பதவிகளைப் பெறவும் தமிழ் மக்கள் மத்தியில் தத்தமது பாராளுமன்ற அரசியலை தக்க வைக்கவும் தமிழ்க் கூட்டமைப்பில் இணைந்தனர். பாராளுமன்ற பதவிகளைப் பெற்றனர். ஆனால் நிலைமை இந்தளவுக்கு ஆபத்தாக வரும்மென கனவிலும் அவர்கள் நினைக்கவில்லை. அவர்கள் மட்டுமன்றி தமிழ் மக்கள் மத்தியில் அன்று தொட்டு ஆண்ட பரம்பரை ஆதிக்கச் சிந்தனை வழியில் பாராளுமன்ற அரசியலில் இருந்து வந்த தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகள் கூட இப்படியொரு அவல நிலைக்கு தள்ளப்படுவோம் என எதிர்பார்க்கவில்லை. இவர்கள் எல்லோரும் ஒருபுறம் புலிகளின் ஆயுதப் பலத்தையும் மறுபுறம் இந்திய ஆளும் வர்க்க எசமானர்களையும் நம்பியிருந்தனர். அவை இரண்டும் இன்று இவர்களின் பிடிக்குரியதாக இல்லாத நிலையில் நடையிழந்து குரலற்று வெறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற பெயரில் தட்டுதடுமாறியவர்களாக இருந்து வருகின்றனர். அதுமட்டுமன்றி இவர்கள் அனைவரிடம் ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்திற்கும் செய்த அரசியல் துரோகமும், மக்கள் மத்தியில் கொலை, கொள்ளை, சகோதரப் படுகொலை நிகழ்த்திய இரத்தக் கறைகளும் அழிக்கப்பட முடியாத அளவுக்கு நிறைந்துள்ளன.

இவர்கள் அனைவரும் தமிழ்த் தேசியத்தை பின்பற்றியவர்கள் என்பதுடன் இந்திய ஆளும் வர்க்க எசமானர்களின் காலடியில் கிடந்து வந்தவர்கள். அழிவுகளைத் தேடிய புலிகளும் இத் தமிழ் கூட்டமைப்பினரும் தமிழ்த்தேசிய இனத்திற்கு மாபெரும் துரோகம் இழைத்தவர்களே ஆவர். இதில் யார் கூட குறையச் செய்தவர்கள் என்று கணக்கிட முடியாத அளவுக்கு சகல நிலைகளிலும் தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பிற்கும் எதிர்காலத்திற்கும் மாபெரும் அழிவுகளை தேடித்தந்திருக்கின்றனர். சில தமிழ் தேசியவாத ஆய்வுக்காரர்கள் இப்போதும் பாராளுமன்ற இடதுசாரிகள் இழைத்த அரசியல் தவறுகளை பெரும் தமிழினத் துரோகமாக ஊதிப்பெருப்பித்துக் காட்டி வருவதில் குறியாக இருக்கின்றனர். அத்தவறுகள் மறைக்கப்படுவதற்கு இல்லை. ஆனால் தமிழ்த் தேசிய வாதத் தலைமைகள் அனைத்தும் தமிழ்த்தேசிய இனத்திற்கு செய்துள்ள மாபெரும் துரோகங்களோடு அவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் போன்றதாகும். இவற்றை வெறும் அரசியல் காழ்ப்புணர்வினால் நாம் கூறவில்லை. வரலாற்றின் ஊடே இடம்பெற்ற நிகழ்வுகளின் அடிப்படையிலேயே காணுகின்றோம். இந்த நிலையில் இருந்து தமிழ்த்தேசியவாத தலைமைகள் எவ்வகையிலும் மாற்றம் அடையப் போவதில்லை. ஆனால் தமிழ்த்தேசிய இனத்தின் முன்னால் ஒரு பாரிய அரசியல் கேள்வி எழுந்து நிற்கிறது. தொடர்ந்தும் செக்கு இழுத்த பாதையில் தமிழ்த் தேசிய வாத பிற்போக்கு தலைமைகளுக்குப் பின்னால் தலையாட்டி மாடுகள் போன்று அல்லது செம்மறியாட்டுக்கூட்ட மனோநிலையில் மேய்ப்பர்கள் காட்டும் இருட்டு அரசியலுக்குள் தொடர்ந்து செல்வதா அல்லது அதனை நிராகரித்த புதிய அரசியல் வழிமுறைகளை நாடுவதா என்பதே அக்கேள்வியாகும். கடந்த கால தமிழ்த்தேசிய வாத அரசியல் வரலாற்றின்

தொடர்ச்சி 7ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தமிழனென்று சொல்லடா வர்க்க உணர்வு கொள்ளடா!

**ஒய்யாரக் கொண்டையாம் இனவாதமாம் உள்ளே இருப்பது முதலாளி வர்க்கமாம்!**

இந்திய அரசின் அனுமார்களால் மீண்டும் தீக்கிரையாக்கப்பட்டு விட்டது ஈழம். மிச்சமிருக்கும் தமிழ் மக்களையும் முள்வேலிக்குள் வைத்து சிறுகச்சிறுக கொலை செய்து கொண்டிருக்கிறது இனவெறி அரசு. சொல்லில் அடங்காத துயரக் கதைகளைக் கொண்டிருக்கிறது ஈழத்தமிழர்களின் நிலைமை. கண்ணிவெடியை அகற்றுகிறோம் என்ற பெயரில் ஆக்கிரமிப்புக்கு சர்வே எடுக்கவும், ஆட்காட்டிகளை உருவாக்கவும் இராணுவத்தை அனுப்பி வைத்திருக்கிறது இந்திய அரசு.

இவர்கள் மீதெல்லாம் நம்பிக்கை வைக்குமாறு 1983இல் தொடங்கி நேற்று வரை தமிழக மக்களையும் புலிகளையும் தவறாக வழிநடத்திப் படுகுழியில் இறக்கியவர்கள் யாரோ அவர்கள் மீது கோபம் வரவேண்டும். மாறாக, தமிழ்த் தேசியம் பேசுவோர் இந்த இலக்கைத் திசை திருப்பி, மலையாளிகள், கன்னடர்கள், தெலுங்கர்களுக்கு எதிரான கோபத்தைத் தூண்டுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு "இன உணர்வை" ஊட்டும் திருப்பணியில் இறங்கியிருக்கிறார்கள்.

''தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனும், வெளியுறவுத்துறைச் செயலர் சிவசங்கர் மேனனும் மலையாளிகள் என்பதனால் தான் இந்திய அரசைத் தவறாக வழிநடத்தி விட்டார்கள்'' என்று கூறி இந்திய மேலாதிக்க எதிர்ப்பை மலையாளி எதிர்ப்பாக மாற்றுகிறார்கள். இதன் மூலம் இந்திய அரசு ஆளும் வர்க்கங்களுக்கு மறைமுகமாக நற்சான்றிதழ் கொடுக்கிறார்கள். அதிகாரிகள் மலையாளிகள் என்றால், அமைச்சர்கள் தமிழர்களாக இருந்தார்களே அதற்கென்ன சொல்கிறார்கள்?

ப.சிதம்பரத்தில் தொடங்கி, தி.மு.க.அமைச்சர்கள், கடைசி நேர விற்பனையை முடித்துக் கொண்டு கல்லா கட்டிய பா.ம.க ஆகிய தமிழர்கள் அங்கே மட்டைக்கு நாலாய் கிழித்தது என்ன? தமிழர்கள் அமைச்சர்களாக இருந்ததனால் தான் ஈழத்தமிழனுக்கு இந்த கதி என்று சொல்லாமல், இவர்களை சந்தர்ப்பவாதிகள், பதவிப் பித் தர்கள் என்று தனிநபர்களாக விமர்சித்து விட்டு, நாராயணன் முதல் டீக்கடை நாயர் வரை என்று அங்கே மட்டும் ஒரு இனத் துக்கு எதிராக நஞ்சு கக்குவது ஏன்?

கொழும்புக்குப் பறந்து போய் இந்தியாவின் மேலாதிக்கத்தைப் பற்ற வைக்கும் சிவசங்கர் மேனனும், பாதித்தூக்கத்தில் எழுந்து பாய்லர் அடுப்பைப் பற்ற வைக்கும் டீக்கடை மலையாளியும் ஒரே வர்க்கமா? இல்லை இங்கே தமிழர்கள் டீக்கடை வைக்கக் கூடாது என்று யார் தடுத்தார்கள்? மாற்றான் தோட்டத்து மல்லிகை புகழ் சரவணபவன் தமிழ் முதலாளி, மேசை துடைப்பதற்கு தமிழர் அல்லாத மாற்றாரை, நேபாளிப் பையன்களை வைத்திருக்கின்றாரே, அதென்ன தமிழரின் பெருந்தன்மையா? குறைந்த கூலிக்கு ஆள் தேடும் உழைப்புச் சுரண்டலா?

தமிழனுக்கு ஒன்று என்றால் கேட்க நாதியில்லை என்று அங்கலாய்த்துக் கொள்கிறார்கள் இனவாதிகள். பிற இன மக்களைக் குறைந்த கூலிக்கு கசக்கிப் பிழியும் தமிழ் முதலாளிகளை இவர்கள் எப்போதாவது தட்டிக் கேட்டிருக்கிறார்களா? நாமக்கல் தவிட்டெண்ணெய் ஆலையின் தீ விபத்தில் கருகிச் செத்தார்கள் பீகார் தொழிலாளிகள். மலையாளி டீக்கடை க்காரரைப் பார்த்துகாயும் தமிழின வாதிகள், கருகிய பீகார் தொழிலாளிகளின் உழைப்பில் பணம் கொழிக்கும் தமிழ் முதலாளியைக் கண்டு காய்வ தில்லையே, இது தமிழின உணர்வா, அல்லது முதலாளித்துவ வர்க்க உணர்வா?

பிற இன மக்களின் ஒடுக்கப்பட்ட பிரிவினர் காலந்தோறும் மலம் அள்ளுவதைக் கூசாமல் ஏற்கும் இனவாதத்தால், டீ போடுவதை மட்டும் தாங்கிக் கொள்ள முடியாதாம்! இனவாதத்திற்குள் ஒளிந்திருக்கும் சாதியக் கண்ணோட்டத்தை, திருப்பூரில் உலகத் தமிழின மாநாட்டில் ஆதித்தமிழர் பேரவையைச் சேர்ந்த ஒரு தோழர் மேடையிலேயே சுட்டிக்காட்டிப் பேச, தமிழ்ச் சான்றோர் விருது வாங்க வந்திருந்த பொள்ளாச்சி மகாலிங்கம் என்ற முதலாளித் தமிழரின் மனம் நோகுமென்றும், இது அநாகரிகமென்றும் அங்கேயே மாவீரன் நெடுமாறன் பேசிய தோழரைக் கண்டித்தது மறக்க முடியாத தமிழ்தேசிய நினைவல்லவா?

தமிழனுக்கு இனவுணர்வு இல்லை என்பது இவர்களது கவலை. அதைக் கெடுத்தவன் யார் மலையாளியா, தெலுங்கனா, கன்னடனா? தமிழ்ச் சமூகத்தில் நீக்கமற வேரோடியிருக்கும் சாதியல்லவா தமிழின உணர்வின் முதல் எதிரி? தமிழர்களுக்குள்ளே எல்லோரும் ஒன்று கிடையாது, சமம் கிடையாது என்ற நிலை இருககும் போது, இதை நேர்மையாகப் பரிசீலித்து, நேர்மறையில் ஆதிக்க வர்க்க, சாதி எதிர்ப்பு என்ற அடிப்படையில் தமிழர்களை ஒன்றுபடுத்தவும், தமிழின ஓர்மைக்கும் போராடுவதுதான் நேர்மையானது. அதைவிடுத்து பிற மாநில, தேசிய இனமக்களைத் தமிழின வளர்ச்சிக்குத் தடையாகவும், பகையாகவும் காட்டிக் கொடுப்பது என்பது ஆளும் வர்க்கத்தின் ஐந்தாம் படை வேலை.

சுரண்டும் முதலாளி தமிழனாய் இருந்தால் புரவலர் என்று பல்லைக்காட்டுவது, சுரண்டப்படும் தொழிலாளி வேறு இனம் என்பதால் பல்லைக் கடிப்பது - இது தான் தமிழ்த்தேசிய குடிநாயகப் பண்போ?

தம்மை யாரும் ஆதிக்கம் செய்யலாகாது என்று கருதுபவர்கள், நாம் பிறரை ஆதிக்கம் செய்யலாகாது என்றும் கருதவேண்டும். அத்தகைய ஆதிக்க மரபுகளை இழிவாகக் கருதி நிராகரிக்கவும் வேண்டும். தமிழன் அன்று கங்கை கொண்டான் கடாரம் கொண்டான் இமயத்தில் புலிக்கொடி நாட்டினான் என்று ஊரை அடித்து உலையில் போட்டதை பெருமையாகப் போற்றுகின்றார்கள். யெளவனப் பெண்களை அடிமையாக வாங்கி அரண்மனை அந்தப் புறங்களில் ''கொண்டி மகளிர் ஆக்கியதை எண்ணி புளகாங்கிக்கிறார்கள்.

''பேராற்றல், பெரும்படை, வாள்வீச்சு, வேல்வீச்சு எல்லாமிருந்தும் ஏங்க பின்னே தமிழன் ஆட்சி விழுந்தது?'' என்று கேட்டால் ''பார்ப்பான் பொம்பிளையைக் காட்டி மயக்கிற்றான்'' என்று பதில் அளிக்கிறார்கள். - ''ஆம்பிளை சிங்கம் தான் ஆனால் பொம்பிளை விசயத்திலே வீக்கு!'' என்பது போல.

தொடர்ச்சி 7ம் பக்கம்

# அன்புள்ள தோழருக்கு

## தோழமையுடன் செண்பகன் எழுதும் மடல்

போராட்டமே மக்கள் வாழ்வின் மையப்புள்ளி ஆகும். இதுவே உழைப்பாளி வர்க்கத்தின் உன்னத நிலைப்பாடாகும் என்று கடைசிக் கடிதத்தில் கருத்தாடினோம்.

போராட்டம் என்பது என்ன என்பது பற்றி நாம் இம் மடலில் சிந்திப்போம். போராட்டம் இரண்டு வகைப்படும். முதலாவது மக்களுக்கிடையிலான போராட்டம். அதாவது எங்களுக்கிடையிலான போராட்டம். மற்றது எதிரியுடனான போராட்டம். இம் மடலில் எமக்கிடையிலான போராட்டம் பற்றிச் சிந்திப்போம்.

உழைத்து வாழ்பவரே மனிதர் எனலாம். மூலதனத்தில் பரம்பரைப் பணத்தில், பிறரின் உழைப்பில் வாழ்பவர் மனிதரின் எதிரிகளாவர். முதலில் மனிதர் மத்தியில் போராடுதல் என்பது கவனத்திற்குரியது. மனிதர் சமூகத்தின் உறுப்பினர். சமூகமெனில் தனிமனிதர், குடும்பம்; ஊர், உறவு, நிறுவனம், கட்சி, பொது அமைப்பு என விரிந்து செல்லும். தனிமனிதர் ஒவ்வொருவரும் தமது அன்றாட அலுவல்களில் எங்கெல்லாம் இணைந்து பரந்து செயற்படுகிறாரோ அங்கெல்லாம் அவர் பிற மனிதருடன் தொடர்பு கொள்கிறார். இவ்விடத்தில் மனிதர்களின் எதிரிகளாகச் சிலரை இனங் காண்பதும் அவர்களைப் புரிந்து கொள்வதும் அவர்கள் மத்தியில் உறவு பூண்டு தன்நலன் சார்ந்து சமரசம் செய்வதும் போராட்டத்தின் மறுபக்கமாகும். அது சுயநலன், சுயஈடேற்றம் பற்றியது. பொதுநலன் என்பது அறிவின் பண்பாகும். அறிவின் செயற்திறன் மிக்க பொது நலன் உள்ளோரே மனிதரில் உயர்ந்த மனிதராகிறார்.

போராடுதல் என்பது கலகம் செய்வது, வாய் காட்டுவது, குழப்பம் செய்வது, கோபப்படுவது, ஆயுதம் தரிப்பது, எல்லா நேரமும் முகத்தை இறுக்கி வைத்திருப்பது, சிரிக்க மறுப்பது, எல்லோரையும் எதிரியாகக் கணிப்பது, எரிச்சல்படுவது, இறுக்கிப் பேசுவது, அதட்டிச் சத்தமிடுவது, எப்போதும் சண்டையிடுவது என்ற ஒற்றைப் பரிமாணத்தில் முடிவு செய்யும் விடயமல்ல.

தமது உள்ளத்தில் மட்டும் பொது நலன் என்பதை வைத்துப் பூசிப்பது பயனற்றது. பொதுநலன் என்பது நடைமுறை சார்ந்த விடயம். நடைமுறை என்பது மக்கள் மத்தியில் உறவு பாராட்டுவது; கருத்தியல் தளத்தில் எல்லோரும் இன்புற்றிருக்கும் உலகை கட்டுவதற்கு ஆதரவைப் பெறுவது; அணி திரட்டுவது என்பவற்றின் மூலம் பொது வாழ்வில் மகிழ்வடைவதே தனிமனித அறிவின் பண்பாடாகும்.

போராடுதல் ஓர் இனிய கலை. போராட்டக் கலை ஆக்கபூர்வமானது. அழிவுகரமானதல்ல. பொதுநலன் என்ற வான்வெளியை நோக்கி சுற்றிச் சுற்றி ஏறும் பயணம் போன்றது. முருகையன் மொழியில் சொல்வதெனில்; 'சுற்றி ஏறிடும் பாதை ஆயினும் தூக்கி நம்மை உயர்த்திடுமேயது; வெற்றியென்பது மேல் நிலை எய்துதல், விரிந்த விண்ணிடைமேல் உலாவுதல்'. அந்தப் பரவசம் எமது அன்றாடச் செயல்களில் மகிழ்வூட்டும். அலுப்பிருக்காது. நம்பிக்கையை வளர்க்கும். விரக்தியைப் போக்கும்.

போராடும் கலையில் நாம் தேர்ச்சி பெற வேண்டுமெனில் நாம் தோல்விகளைச் சந்திப்பது தவிர்க்க வியலாதது. தோல்வி எங்களை துவள அனுமதிக்கக் கூடாது. இன்றைய சமகால சமூகம் பற்றிய தெளிவு இருப்பின் தோல்வி பற்றி நாம் விரக்தி அடைதல் நேராது. பிற மனிதர்களின் அறியாமையே எமது தோல்விக்கான புறச் சூழலாகும். அந்த அறியாமை என்பது பல்லாயிரம் ஆண்டுகால பண்பாட்டுப் பழைய சுமையின் மீது கட்டப்பட்டுள்ளது. 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்ற நாட்டார் மொழியைப் புரிந்து அவர்கள் மீது அனுதாபப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. மக்கள் மீதான அனுதாபம் என்பது எமது சகிப்புத்தன்மையை மேம்படுத்தும். சகிப்புத் தன்மை என்பது விட்டுக் கொடுக்காது போராடுதல் ஆகும்.

முதலாளிய சமூகம் தனது சுரண்டல் பிழைப்புக்கேற்ப தனது ஊதாரி இலத்திரனியல் ஊடகம், ஜனரஞ்சகப் பத்திரிகைகள் மூலம் கல்வி, காதல்; கல்யாணம், உழைப்பு, வாழ்வு, உயர்வு என்பவற்றுக்குத் தவறான வியாக்கியானங்களை மக்கள் மனதில் அன்றாடம் திணிக்கிறது. முதலில் மக்களை அவற்றிலிருந்து விடுவிக்கப் பயிற்சி பெற வேண்டும்.

உழைப்பு, உயர்வு, குடும்பம், வாழ்வுப் பெறுமானங்கள் பற்றிய உலக இலக்கியம், கட்சிப் பத்திரிகைகள், வெளியீடுகள் பற்றிய பெருமையை – வாழ்வின் உரைகற்கள் இவையே என்ற தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தொலைக்காட்சி, பத்திரிகை ஆகியவற்றில் வரும் செய்திகளுக்கும் அதன் முதல் பக்கத்தில் இடம்பெறும் பிரமுகர்களுக்கும் முதன்மை கொடுப்பதும், அவர்கள் பற்றியே அன்றாடம் அலசுவதும், அவர்களின் வீரதீரம், குறைநிறை பற்றியே குசுகுசுப்பதும் அதற்குப் பதில் தேடுவதும் தன்னம்பிக்கையற்ற வீண் பொழுதாகும். அவற்றை கவனத்திலெடுத்து நாம் செய்யும் வேலைகளுக்கு முதன்மை கொடுத்து நமது வேலை பற்றி கலந்து பேசுதல் முக்கியமாகும். நம்மால் செய்ய முடியாத வேலைகள் பற்றிப் பெருமூச்சு விடுவதும் செய்யக் கூடிய வேலைகளில் உதாசீனமாய் இருப்பதும் கூட முதலாளியத்துடன் சமசரம் செய்யும் போக்காகும்.

எங்கள் வீட்டு விவகாரங்கள் பற்றி குறை நிறைகள் பற்றி சுயவிமர்சனம், விமர்சனம் செய்யமால் அடுத்த வீட்டார் பற்றி அலசுவதிலேயே எமது பொழுது நாசமாய் போய் விடும். எம்மோடு எமக்கருகில் உள்ளவர்களின் ஆற்றலை, அறிவை எமக்கிடையில் பகிராமல், பரிமாறாமல் முதலாளிய இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் முதன்மை பெறும் செய்திகளில் மூழ்குவதும் முழிபிதுங்குவதும் சமரச மனப்பாங்குதான்.

பொது விடயங்களில் ஈடுபட மட்டுமன்றி தமது நற்கருமங்களில் கூட ஈடுபடுவதெனில் சாமானியர்கள் விரும்புவதில்லை. 'நாங்கள் குடும்பக்காரர்' என்று ஒரு புத்தகம் வாசிக்கவோ, கலை நிகழ்வை கண்டு களிக்கவோ மறுக்கும் மக்கள் வாழும் தேசமிது. ரீவியுடன் குடும்பம் நடத்துவது, புடவைக்கடை, நகைக்கடை சுற்றுவது, அரட்டை, விடுப்பு பேசுவதில் குடும்பகாரன் என்பதில் தமது குடும்ப நலனை மறந்து விடுவர்.

தமது வீடுகளில், தாம் கூடிச் செயற்படும் அமைப்புகளில் ஒவ்வொருவரும் தமக்குத் தமக்கென தனியான ஒளிவு மறைவான நிகழ்ச்சி நிரலுடன் செயற்படுவர். தமது விடயங்களை இரகசியமாக - ஒளித்து மறைத்து வாழ்வர். பிறரின் அந்தரங்கங்களை அலசுவதில் அலாதி பிரியமாயிருப்பர். இத்தகைய நிலைகெட்ட மனிதர் முன்னே தான் எமது பொறுமையான செயற்பாடு வேண்டப்படுகிறது.

'வீட்டுக்கு வீடு வாசற்படி' என்பார்கள். எவருடனும் பொது விடயம் பற்றிப் பேசிப் பார்த்தால் 'திருமணம்' என்பதே 'வாழ்தல்' என்பதும், 'குடும்பம்' என்பதே 'சகலதும்' என்று ஒடுங்கியுள்ள மக்கள் அதிகம் பேர். தங்களைச் சுற்றியே உலகம் சுற்றுகிறது எனத் தன் முனைப்படைவர்.

பேரினவாதம் பலி கொண்ட பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் உயிர்களோ, இடமின்றி அலையும் அகதிகளின் அவலமோ, முட்கம்பி வேலிகளினுள் மூன்று லட்சம் மக்கள்படும் அவதிகளோ இவர்களுக்கு வெறும் வாய் சப்பும் பிற விடயங்கள். தங்கள் தங்கள் வீடுகளிலே, உறவுகளிலே, அமைப்புகளிலே நடக்கும் முரண்பாடுகளே முழு உலக விவகாரமாக அதற்குள் மூடுண்டு கிடப்பர். ஒருவரோடு ஒருவர் முகம் பாரார். பார்த்தாலும் முகமனுக்காக பொய்யான உரையாடல், ஆளையாள் எவ்வாறு அறுப்பது என்பதிலே அலாதியான பிரியம். கணவன், மனைவி, பிள்ளை, உறவினர், நண்பர் என உறவிருக்கும். ஆனால் உள்ளத்தில் முதலாம் நம்பர் எதிரிகளாக அவர்களின் முழுநேரச் சிந்தனையும் செயலும் அதிலேயே மையங் கொள்ளும். போதாக் குறைக்குத் தமிழ் நாட்டின் ரீவித் தொடர்கள் தீனி போட்டு அவர்களைத் தாலாட்டும்.

வீட்டுக்கு வீடு உள்ள வாசற்படிகளை மக்கள் தாண்டி வர நாம் போராட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

நூல் வெளியீடு, வாசிப்பு என்று எமக்கிடையே மட்டுமன்றி ஒவ்வொரு வீடும் எமது நிகழ்கலையின் அரங்குகளாக மாற வேண்டும். ஒளிவு மறைவற்ற உரையாடல் இடம்பெற வேண்டும். என்னுடைய நிகழ்ச்சி நிரலுக்கேற்ப மற்றவரை வரச் செய்வதிலும் மற்றவரின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப என்னையும் அவர்களுடன் இணைக்க வேண்டும். நாம் எல்லோரும் ஒன்றாக நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபடுத்த திறந்த மனத்துடனான உரையாடல் இடம்பெற வேண்டும்.

மக்களுடன் ஐக்கியமும் போராட்டமும் என்பதே எமது நடைமுறையாகும். ஒருவருடன் போராடுவதென்பது அவருடன் உறவை முறித்து ஒதுங்கிச் செல்வதற்கல்ல. உறவை வளப்படுத்தி வளர்ப்பதற்காகவே. போராடிப் போராடி ஐக்கியமாய்ச் செயற்படுவதே மக்கள் இயக்கத்துக்கான நடைமுறையாகும்.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவது சுயநலம் சார்ந்தோர் செயலாகும். ஒளிவு மறைவு என்பது பயத்தின் - சுயநலத்தின் வெளிப்பாடு.

எமது உடலில் உள்ள அழுக்கை அன்றாடம் பல்தேய்த்து, முகம் கழுவி, குளித்து நீக்குவது போல் அன்றாடம் எமது செயற்பாடுகளில் உள்ள தவறுகளைத் திருத்திக் கொள்வதில் தயக்கம் காட்டக் கூடாது. மற்றவரில் உள்ள குறைகளை அவர் ஏற்கக் கூடிய பக்குவமாக எடுத்துச் சொல்லும் நேரம் காலம் பார்த்துச் செயற்பட வேண்டும். அதன் மூலமே அவரை நாம் பொதுநலனின் பக்கம் ஆட்கொள்ளலாம்.

அன்றாட வாழ்வே அனைத்தினதும் பயிற்சிக் கூடமாகும்.

'துட்டனைக் கண்டால் தூர விலகு' என்பர். ஆம். துட்டனைத் தோற்கடிக்க நாம் தயாராக வேண்டும். தற்காலிகமாக எதிரி அரங்காடட்டும். அதுவரை நாம் மக்கள் மத்தியில் போராடுவோம். அணிதிரள்வோம். துட்டனுடன் எவ்வாறு போராடுவதென்பதனை மறுமடலில் சிந்திப்போம்.

**என்றும் தோழமையுடன்**
**செண்பகன்**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சட்ட ஆட்சியா? பொலிஸ் ஆட்சியா?

இலங்கைப் பொலிசாரின் 143ஆவது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. 1978ம் ஆண்டு முதல் பொலிசாரின் அத்துமீறல்களால் அடிப்படை உரிமை மீறப்பட்டதாக ஆயிரக்கணக்கான வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றின் பெரும்பாலான வழக்குகளில் நிவாரணம் கிடைத்துள்ளன. கடந்த சில வருடங்களாக கடத்தல்கள் கொலைகள் போன்றவற்றில் பொலிசார் சம்பந்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் கூறி வருகின்ற போதிலும் சாட்சியங்கள் இல்லை. பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கைகளுக்காகவும் பாதாள உலக குற்றச் செயல்புரிபவருக்கு எதிரான நடவடிக்கைகளாகவும் பல சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பு அளிக்காதவர்கள் யாவரும் நிரபராதிகள் என்ற ஊகம் இலங்கையின் அரசியல் அமைப்பின் மட்டுப்படுத்தப்படாத அடிப்படை உரிமையாகவே இருக்கிறது. நீதிமன்ற தீர்ப்பின்றி எவருக்கும் தண்டனை வழங்கப்படவும் முடியாது.

கடந்த மாதம் அங்குலானவில் இரண்டு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு அவர்களின் சடலங்கள் கடற்கரையில் போடப்பட்டிருந்தன. அப்பிரதேச மக்கள் எதிர்ப்பினால் அச்சம்பவத்தில் அங்குலானை பொலிசாருக்கு நேரடியாக தொடர்பு பட்டிருப்பது வெளியாகி இருக்கிறது. சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகள் நடை பெறுகின்றன.

அடுத்த சம்பவம் அரசாங்க தொழில் நுட்ப நிறுவனத்தின் மாணவன் நிப்புன என்பவர் தாக்கப்பட்டுள்ளார். சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரின் மகனும் மனைவியும் சம்பந்தப்பட்டுள்ளனர். இங்கும் பொலிஸ் அதிகாரமும் அத்துமீறி பிரயோகிக்கப்பட்டுள்ளன. அதாவது அவர் தாக்கப்பட்டதுடன் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்து பாராளுமன்ற குற்ற நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவ்விடயம் அம்பலப்படுத்தப்பட்ட பிறகு தாக்கப்பட்ட மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அவரைத் தாக்கிய பொலிஸ் அதிகாரியின் மனைவியும் மகனும் நண்பர் சிலரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அங்குலானை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் பரிசோதகருக்கு அறிமுகமான ஒரு பெண்ணின் முறைப்பாட்டை அடுத்து கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்கள் அவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களை கைது செய்யவில்லை என்றே பொலிசார் ஆரம்பத்தில் கூறிய போதிலும் அவர்களை கைது செய்து பொலிஸ் கூண்டில் அடைக்கும் போது அங்கிருந்த இன்னொரு சந்தேக நபரின் சாட்சியத்தைக் கொண்டே கைதும் சித்திரவதையும் வெளிக்கொணரப்பட்டது.

முதலாளித்துவ சமூக அமைப்பில் சட்டத்தின் ஆட்சி பற்றியே பெரிதாகப் புகழப்படுவதுண்டு. சட்டமே எல்லோரையும் ஆள்வதாக சொல்லப்படுவதுண்டு. மாயக்சிஸ்ட்டுக்களைப் பொறுத்தவரையில் ஆளும் வர்க்கத்தின் சட்டமே ஆட்சி செய்கின்றன எனலாம். பொலிசாரின் அத்துமீறல்களைப் பார்க்கின்றபோது இங்கு அந்த ஆளும் வர்க்கத்தின் சட்டத்திற்கு புறம்பாகவே எல்லாம் நடந்தேறுவதை அவதானிக்க முடிகிறது. பொதுமக்களைப் பொறுத்தவரை சட்டத்தின் ஆட்சியை தாங்க முடிவதில்லை. சட்டத்திற்கு அப்பால் நீதிக்குப் புறம்பாக நடைபெறும் பொலிசாரின் அத்துமீறல்கள், நிர்வாகத்துறையினரின், பாதுகாப்பு படையினரின் அத்துமீறல்கள் மக்களின் இருப்பையே ஆட்டம் காண வைக்கிறது.

இவ்வாறான அத்துமீறல்கள் நீதிமன்ற நடவடிக்கைகளால் மட்டுமே தடுத்து நிறுத்தப்பட முடியாது.

இலங்கை 1970களுக்குப் பிறகு நிர்வாக நிறைவேற்றுத் துறையினர் அத்துமீறல்களுடன் மிகவும் வேகமாக பயணம் செய்து வருகிறது. 1977 முதல் ஒரிரு மாபாதங்களைத் தவிர இன்று



நன்றி: டெய்லிமிரர்

வரை அவசர காலச் சட்டமே நாட்டை ஆளுகிறது. பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்கள் அமுலில் இருக்கின்றன. கடந்த முப்பது வருடங்களாக நாட்டில் யுத்தம் நடைபெற்றது. இவ்வாறான சூழலில் பொலிசும் பாதுகாப்புப் படையும் சட்டத்திற்கு உட்பட்டு அப்பாலும் கூடிய அதிகாரங்களைக் கொண்டிருக்கின் றன.

முதலாளித்துவ அமைப்பின் கீழ் சிவில் நிர்வாகத்தை நடத்தும் பொறுப்பு பொலிசிடம் இருப்பதாகக் கூறப்பட்ட போதிலும் அதன் நடவடிக்கைகள் சிவில் நிர்வாகத்தை சீர்குலைப்பதாகவே இருக்கிறது.

இந்த நிலைமையில் மக்களின் ஜனநாயகம், மனித உரிமைகளை உறுதி செய்வதென்பது இலகுவான ஒரு விடயமல்ல. அவற்றை உறுதி செய்து கொள்ள முதலில் அடக்கு முறைச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டும். அதன் பிறகு நிர்வாகத்தை மக்கள் நலன் சார்ந்ததாக அமைக்க வேண்டும். அம்மாற்றம் தானாக நடைபெறாது. இலங்கையின் இன்றைய நிலைமை மேலும் மேலும் அடக்குமுறையை நோக்கியே செல்வதைப் புலப்படுத்துகிறது. இதனை தடுத்து நிறுத்த மக்களின தலையீடு அவசியமாகிறது.




வீட்டு வேலைக்கு மலையகச் சிறுவர்களை அமர்த்துவதற்கு எதிராக புதிய மலையகம் அட்டனில் நடாத்திய கருத்தரங்கு கலந்துரையாடலிற்கு வெ. மகேந்திரன், ஜோன், மாக்ஸ் பிரபாகர் ஆகியோர் கூட்டுத் தலைமை தாங்கினர் வலப்பனை பிரதேசசபை உறுப்பினர் சி. பன்னீர்செல்வம் புதிய ஜனநாயக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா, உட்பட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தோர் உரையாற்றினர்.

## தடுமாறும் தமிழ்த் தலைவர்கள்

5ம் பக்க தொடர்ச்சி

ஒவ்வொரு காலகட்ட வரலாற்று நிகழ்வுகளும் ஆழ்ந்து நோக்கப்படல் வேண்டும். அவற்றிலிருந்து உரிய அனுபவங்கள் பட்டறிவுகள் பெறப்பட்ட மீளாய்வும் சுய விமர்சனங்களும் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுவது அவசியம். அறணைத்தனமான அன்றன்று மறந்துவிட்டு அரசியல் ஆதிக்க மேய்ப்பர்களின் பின்னால் ஓடும் அரசியல் கலாச்சாரத்திற்கு தமிழ் மக்கள் முற்றுப் புள்ளியிடல் வேண்டும்.

தமிழ்த் தேசிய இனத்தின் இன்றைய அவல நிலையையும் இருப்பையும் எதிர்காலத்திற்குரிய தொலைநோக்குத் திட்டங்களையும் வகுக்கக் கூடிய ஒரு பரந்து பட்ட அரசியல் விவாதம் அவசியம். இதனை தனியே ஒரு கட்சி அல்லது சில படித்த மேதாவிகள் அல்லது புலம்பெயர்ந்த உயர்வர்க்க கனவான்கள் என்போரால் செய்யமுடியாது. தமிழ்த்தேசிய இனத்தின் பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டுத் தளங்களிலான யதார்த்த நிலைமைகளை உண்மைகளின் அடிப்படையிலும் வரலாற்று வளர்ச்சிகளின் ஊடாகவும் அலசி ஆராயப்படவேண்டும். இவ் ஆராய்வும் கொள்கை முடிவுகளும் மேட்டுக்குடி உயர்வர்க்க சகதிகளின் தேவைகள் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் எடுக்கப்படல் வேண்டும். பரந்துபட்ட தொழிலாளர்கள் விவசாயிகள் மீனவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் பெண்கள் மற்றும் கீழ் மத்தியதர வர்க்கத்தினரான அரசாங்க தனியார் துறையினர் மற்றும் உழைக்கும் மக்களின் நலன்களிலிருந்து தோற்றுவிக்கப்படல் வேண்டும். இத்தகைய நிலைப்பாடு தான் தமிழ்த் தேசிய இனத்திற்குரியதும் முதலாளித்துவ பேரினவாத ஆளும் அதிகார சக்திகளுக்கும் அவர்களது அன்னிய கூட்டாளிகளுக்கும் எதிராக முன்னேறிச் செல்லக் கூடியதுமான சரியான அரசியல் வெகுஜனப் போராட்ட மார்க்கமாக அமைய முடியும். இதனை தமக்குரிய வரலாற்றுக் கடமையாகவும் தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கும் வகையிலும் தமிழ் மக்கள் முன்னெடுக்க முன்வராது விட்டால் தொடர்ந்தும் அடக்குமுறைகள் அழிவுகள் அவலங்களுக்குள் அடிமைத்தனமான வாழ்வை மேற்கொள்ள வேண்டியே ஏற்படும்.

## தமிழன் என்று செல்லடா

6ம் பக்க தொடர்ச்சி

மன்னர்கள் என்றழைக்கப்படும் இத்தகைய திருடர்களையும் பொறுக்கியர்களையும் இனப்பெருமையின் நாயகனாக சித்தரிப்பவர்களிடமிருந்து ஒரு முற்போக்கான இனவிடுதலையை எதிர்பார்க்க முடியுமா?

வரலாற்றில் தேசிய உணர்வு என்பதெல்லாம் முடியாட்சியும் அதன் எச்சங்களை அகற்றி நிலவுடைமை ஆதிக்கத்தையும் அதன் மரபுகளையும் மத நிறுவனங்களின் ஆதிக்கத்தையும் ஒழித்துக் கட்டியபின்னர் தான் வந்திருக்கிறது. பிரஞ்சுப் புரட்சியை கொண்டாடுவோர் லூயி மன்னர் பரம்பரையை தமது மரபாகப் போற்றுவதில்லை. அந்த மரபை ஒழித்ததிலிருந்து தான் பிரஞ்சுத் தேசியம் வந்திருக்கிறது. இங்கோ தமிழ்த் தேசியவாதிகளின் எண்ணமும் கருத்தும் இன்னும் மன்னர் ஆட்சியின் மயக்கத்திலிருந்து விடுதலை பெறவில்லை. புரட்சிகரமான தேசிய உணர்வை தோற்றுவிக்க தேவையான சுயேட்சையான முதலாளித்துவம் இந்தியாவில் வளரவில்லை.

ஆங்கிலக் காலனியாதிக்கவாதிகளாக மேலிருந்து திணிக்கப்பட்ட முதலாளித்துவ அரசு வடிவமும் வெள்ளையனுக்கு துணைநின்ற தரகு முதலாளித்துவ வர்க்கமும், அவர்களுடைய இந்து தேசியமும் எந்த இனத்திலும் ஜனநாயக பூர்வமான இன உணர்வை தோற்றுவிக்கவில்லை. இதனை இனிமேல்தான் உருவாக்க வேண்டியிருக்கிறது. ஏகாதிபத்தியம் தரகு முதலாளித்துவம் நலப்பிரத்துவம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடாமல் மலையாளி, கன்னடன் என்று இனவெறி தூண்டி விடுவது தான் இவர்களது அரசியலாக இருக்கிறது.

வர்க்க ஒடுக்குமுறையின் மருவிய வடிவமாக இன ஒடுக்குமுறை வெளிப்படுவதை இனவாதிகள் அங்கீகரிப்பதில்லை. பன் நாட்டுத் தேசம் கடந்த மூலதனத்தின் கொலைக் கருவியாக உள்ள இந்த அரசை ஏகாதிபத்திய அடிமைத்தனத்தை அழித்தொழிக்க நிற்கும் பாட்டாளி வர்க்க அரசியல் கண்ணோட்டத்தையும் அவர்கள் ஏற்பதில்லை. அதனால் தான் ஒபாமாவிடம் பூங்கொத்து தந்தோ ஜெயலலிதா அத்வானியின் காது கடித்தோ இனவிடுதலையை சாதிக்க முடியும் என்று நம்புகிறார்கள்.

தமிழன் ஒன்றுபட தடையாக இருக்கும் சமூகத் தடைகளான சாதி ஆதிக்கம் பார்ப்பன மதவெறி குறுந்தேசிய இனவாதம் ஆகியவற்றிற்கு எதிராக மக்களைத் திரட்டாமல், ''போதையில் கொஞ்சவானம், சுதிபிறங்கினால் புள்ளையைப் போட்டு அடிப்பானாம்'' என்ற கதையாக, ஒரு முச்சு பழம்பெருமையும் சவடாலும் பேசுகிறார்கள். பிறகு ''தமிழனுக்கு சூடுமில்லை சொரணையும் இல்லை'' என்ற வசைபாடத் தொடங்குகிறார்கள்.

நன்றி : புதிய கலாச்சாரம் ஆகஸ்ட் 2009

## இன்னுமெதுவரை சாலும்.........?

அடுத்தவன் தயவில் ஆட்சியின் பீடம் ஏறும்
உனக்கு
எப்படிக் கூட்டுச் சேர்வது என்பதில் மட்டும்
பேதமிருக்காது, மெய் சிலிர்க்காது!

கொள்கைகளைப் போலவே
இலட்சியங்களும் உனக்கிருக்காது!
ஆற்றலும் இல்லை, ஆளுமையும் இல்லை
வெட்கமும் இல்லை, மானமும் இல்லை,
ரோசமும் இல்லை, கௌரவமும் இல்லை,
ஏன், என் தலைவனாகும்
தகுதியும் படிப்பும் கூட உன்னிடம் இல்லை!

எனினும்
எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு
கெட்ட குணங்கள் ஏராளம் உண்டு!
பதவிக்காய்ப் பாசாங்கு செய்யும்
பக்குவமும் உனக்குண்டு!

வயிற்றுப் பிழைப்புக்காய் ஏழையெனை
ஏய்த்து,
வரங்கள் பல தருவாய், வாக்குறுதி
யளிப்பாய்!
ஏகாதிபத்திய எஜமானின்
எச்சில் சோற்றை ஏப்பம் விட்டு - அவர்தம்
கால்களில் கிடப்பாய்!

நீ மனித முகம் போத்திய நரி;
கயமைத்தனம் மிகுந்தது உன் அரசியல்!

அழித்தொழிக்கப்படுவதும்
ஆக்கிரமிக்கப்படுவதும்
நான் எனத் தெரிந்தும்
பாராளுமன்றம் சென்றதும்
யாரோவென பாராமுகம் காட்டுவாய்!

முடிந்தவரை முட்டுக்கால் இட்டு
முதலாளிகளின் பாதங்களை நக்கிச்
சுவைத்து,
நாக்குகள் மரத்ததும் நழுவி
மீண்டும் நாய்க்குலமாய் நீயும் உன்
நிலைப்பாடும்

இவ்விதம் போலியாய் வால் ஆட்டுவது
இன்னுமெதுவரை சாலும்?

- மாக்ஸ் பிரபாகர் -

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்




# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 2

- வெகுஜனன் -

திருமதி சிரிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சி செய்த 1970 தொடக்கம் 1977 வரையிலான காலப்பகுதியானது இன முரண்பாடு மேலும் விரிசல் அடையவும் பகை முரண்பாடாக வளர்ச்சி காணவும் பெரும் பங்கு அளித்தது. பாராளுமன்ற இடதுசாரிகள் எனப்பட்டவர்கள் அங்கம் வகித்த அவ்வரசாங்கம் முன்னெடுத்த பேரினவாத நோக்குடைய நடவடிக்கைகள் தமிழ்த் தேசியவாதப் பரப்பில் எதிர் அலைகளைத் தோற்றுவித்தன. பாராளுமன்றத் தலைமைகள் தமக்குரிய வாய்ப்புக்களைத் தேட ஆரம்பித்தனர். அதே வேளை தமிழ் இளைஞர்கள் மத்தியில் கடும் எதிர்ப்புக்களும் வன்முறைகளுக்கான வழிமுறைகளும் தோற்றம் பெற்றன. 1970இல் அவ்வரசாங்கம் பல்கலைக்கழகப் புகுமுக க.பொ.த. உயர்தரத்திற்கான புள்ளிகளை மொழி அடிப்படையில் தரப்படுத்தும் திட்டத்தைக் கொண்டு வந்தது. அதனால் தமிழ் மாணவர்கள் குறிப்பாக கல்வித்துறையில் முன்னணி வகித்து வந்த யாழ்குடாநாட்டு மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். நகர் சார்ந்த மத்திய மேல்மட்ட குடும்பங்களை சேர்ந்த மாணவர்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். அவர்கள் மத்தியிலிருந்து கடும் எதிர்ப்புகள் வந்ததுடன் முழுத் தமிழ் மாணவர்களினதும் பிரச்சினையாக வடிவம் பெற்றது. தமிழ்த் தேசியவாத அரசியல் சக்திகளின் பின்புலத்தில் தமிழ் மாணவர் பேரவை தோற்றம் பெற்றது. இதன் ஆரம்பத்தின் ஊடாகவே இக்கால தீவிர இளைஞர் இயக்கங்களில் முன்னணியில் நின்ற பலர் அரசியலில் பிரவேசித்தனர். இத்தரப்படுத்தலுக்கு எதிராக குடாநாடு தழுவிய ஒரு மாணவர் எழுச்சி ஊர்வலத்திற்கு தமிழ்மாணவர் பேரவை அழைப்பு விடுத்திருந்தது. 1970 நவம்பர் 24ஆந் திகதியன்று கொக்குவிலிருந்து ஆரம்பித்து யாழ் முற்றவெளிவரை நடைபெற ஏற்பாடாகியிருந்த அம் மாணவர் ஊர்வலத்திற்கு ஆரம்பத்திற் பொலிசார் அனுமதி மறுத்திருந்தனர். தமிழரசுக் கட்சியின் சில தலைவர்கள் அவ்வூர்வலத்தைக் கைவிடும்படி வற்புறுத்தியும் அது பலனளிக்கவில்லை. இறுதியில் மாணவர் தொகையையும் எழுச்சியையும் கண்ட பொலீஸ் அனுமதி வழங்கியது. இவ் ஊர்வலத்தின் மாக்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் அமைபு கலந்து கொள்வதா இல்லையா எனும் விவாகத்தின் பின், தமிழ்த் தேசியவாதப் பின்னணி இருந்தபோதும், தரப்படுத்தல் இன ஒடுக்குமுறை சார்ந்த ஒன்று என்ற காரணத்தால் அது எதிர்க்கப்படுவதன் அடிப்படையில் கலந்து கொள்ள முடிவாகியது. அதனால் அவ்வமைப்பைச் சேர்ந்த பலநூற்றுக் கணக்கான இடதுசாரி மாணவர்கள் அவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர். இக் கம்யூனிஸ்ட் மாணவர் அமைப்பானது 1969இன் தமிழரசு - காங்கிரஸ் இணைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கல்வி அமைச்சர் இரிய கொல்லவால் அறிமுகப்படுத்தப்பட்ட ‘சியவச’ மாணவர் சீட்டிருப்பை எதிர்த்த இயக்கத்தின் ஊடே தோற்றம் பெற்ற மாணவர் அமைப்பாகும். அக்கால கட்டத்தில் இவ்வமைப்பு ‘தீ’’ என்னும் மாணவர் பத்திரிகையையும் நடாத்திப் பாடசாலைகளில் மாணவர்களின் ஆதரவைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். அதன் காரணமாகவே அன்றைய தமிழ் மாணவர் பேரவையினர் தமது பொதுவான மாணவர் ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டிருந்தனர்.

ஊர்வல ஆரம்பத்தில் நிதானமான அரசாங்க எதிர்ப்பு, தரப்படுத்தல் எதிர்ப்பு முழக்கங்களைக் கொண்டிருந்த போதிலும், குறிப்பிட்ட தூரம் ஊர்வலம் வந்தபின், அன்றைய கல்வியமைச்சரான பதியுதீன் மஹ்முடின் மீதும் முஸ்லிம் துவேஷ அடிப்படையிலும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இது தமிழ்த் தேசியவாதத்தின் பிற்போக்கான நிலைப்பாட்டின் வழியிலேயேயாகும். இம் முழக்கங்கள் யாழ் முஸ்லிம் வட்டாரத்தின் ஊடாக ஊர்வலம் வந்த போது உச்சத்தை அடைந்ததுடன் சில மாணவர்கள் தாம் அணிந்திருந்த தொப்பிகளைக் கழற்றிப் புரட்டி எறிந்து அணிந்து பாவனை செய்தும் கொண்டனர். இத்தகைய இழி நடத்தையைக் கம்யூனிஸ்ட் மாணவர்கள் எதிர்த்தனர். முஸ்லீம் மாணவர்களும் கலந்து கொண்ட அவ்வூர்வலத்தில் அத்தகைய துவேஷ முழக்கங்கள் நிறுத்தப்பட வேண்டும் எனக் கம்யூனிஸ்ட் மாணவர் அமைப்பினர் வற்புறுத்தினர். இதனால் மாணவர்கள் மத்தியில் முறுகல் நிலை ஏற்பட்டது. தமிழ்த் தேசிய வாதத்தின் அசிங்கத்தை அவ்வூர்வலத்திற் காண முடிந்தது. அதன் பின் முற்றவெளியில் இடம்பெற்ற கூட்டத்தின் போது தரப்படுத்தலுக்கு எதிராக முன் கூட்டியே அச்சிடப்பட்ட கம்யூனிஸ்ட் மாணவர் அமைப்பின் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டபோது அங்கு கைகலப்புகள் இடம்பெறலாயின. அன்றைய சம்பவம் தமிழ்த் தேசியவாதத்தின் படுபிற்போக்கான கூறுகளின் வழியேதான் சகல போராட்டங்களும் பயணிக்கப் போகிறதே தவிர முற்போக்கான கூறுகளுக்கு அங்கு இடம் இருக்கப் போவதில்லை என்பதையே எடுத்துக் காட்டியது. வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பது போன்று அன்று கிளப்பப்பட்ட முஸ்லீம் விரோதம் பிற்காலத்தில் எத்தகைய வளர்ச்சியைக் கண்டது என்பதைக் கடந்த முப்பது ஆண்டுகளில் எல்லோரும் காண முடிந்தது.


இத்தகைய மாணவர் பேரவையானது படிப்படியாக இளைஞர் பேரவையாக மாற்றம் பெற்றது. ஆனால் அதன் போக்கிற் புதிய கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்குமான எதுவும் தென்படவில்லை. தமிழரசுக் கட்சியினர் பேசிய அதே தொனியில் தான் இளைஞர் பேரவையினரும் பேசினர். இப் பேரவையில் அணிதிரண்ட இளைஞர்கள் மத்தியில் தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு எதிரான அதிருப்தியும் கண்டனமும் காணப்பட்டன. அவை தமிழ்த் தேசியவாத நிலைப்பாட்டை ஒரு மிதவாதப்



போக்கிலும் வெறுமனே பாராளுமன்றத்திற்குப் போகும் பாதையிலும் முன்னெடுக்கப்படுவதன் குற்றச் சாட்டை மட்டுமே கொண்டிருந்தன. அதற்கு அப்பால், வடக்கு கிழக்கின் தமிழ் மக்களிடையே நிலவிவந்த அடிப்படைப் பிரச்சினைகளான வர்க்க, சாதிய, பிரதேச, மத பெண் முரண்பாடுகளுக்கான தீர்வுகளை உள்ளடக்கியதாக முழுத் தமிழ் மக்களையும் அணிதிரட்டக் கூடிய முற்போக்கான வெகுஜனப் போராட்டப் பாதையிலான கொள்கைகளையோ நடைமுறைகளையோ அவற்றுக்கான சாயல்களையோ இத் தமிழ் இளைஞர் பேரவையினர் கொண்டிருக்கவில்லை. எப்பொழுதும் இளைஞர்கள் என்போர் ஒரு வர்க்கமாக இருப்பதில்லை. அவர்கள் பல்வேறு வர்க்க பின்புலத்திலிருந்து வருபவர்களாகவே இருப்பர். அவர்களிடையே வளரும் சிந்தனைகளும் செயற்பாட்டு முயற்சிகளும் பெருமளவிற்குத் தாம் சார்ந்த வர்க்கத்தின் சார்பாகவும் அதன் நலன்களை மீறாத வகையிலுமே அமைந்து கொள்ளும். ஒரு சில இளைஞர்கள் தமது சூழலாலும் முன்நோக்கிய பரந்த உலக நோக்குச் சிந்தனையாலும் மாற்றுக் கருத்துக்களுக்கும் நடைமுறைகளுக்கும் வந்து கொள்வார்கள். தமிழ் இளைஞர் பேரவையில் ஒன்றிணைந்த இளைஞர்கள் தமிழ்த் தேசியவாதத்தின் பிற்போக்கான கூறுகளைத் தம்மகத்தே கொண்டிருந்தனர். அத்துடன் தமிழரசுக் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டை உள்ளூரப் பெற்றும் இருந்தனர். இவ் இளைஞர் பேரவையினரில் ஓரிருவர் மட்டுமே தாழ்த்தப்பட்ட சமூகத்து இளைஞர்களாக இருந்து வந்தனர். அதே வேளை, பெரும்பாலானவர்கள் உயர்சாதி மத்தியதர, கீழ் மத்தியதரத் தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்தோராகவே இருந்தனர். வன்முறையை நாடுவதும் அதன் மூலம் பௌத்த சிங்கள மேலாண்மை அரசாங்கத்தை எதிர்ப்பதும் அவர்களது பிரதான நோக்கமாக இருந்ததே தவிரக், கருத்தியல் சிந்தனை நடைமுறைத் தளங்களில் தமிழ்த் தேசியவாதத்தின் குறுந்தேசியவாத நிலைப்போக்கே முனைப்புக்காட்டி நின்றது. சாதியத்தை அடிப்படையில் எதிர்த்து முறியடிக்க முடியாத தமிழ்த் தேசியம் வெறும் தமிழ் உணர்வால் மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்களை இணைக்க நின்றது. அதற்குச் சில கல்வி கற்ற அல்லது மேநிலையாக்கம் பெற்ற தாழ்த்தப்பட்டோர் ஆதரவு கொடுத்து பங்கு கொண்டனர். அப்படியானவர்களுக்குக் கூட தமிழ்த் தேசியவாத அரசியலில் வரையறுக்கப்பட்ட இடமே இருந்து வந்தது. என்பது நடைமுறை உண்மையாகும்.

இவ்வாறான சூழலிலேயே, 1972ம் ஆண்டு புதிய அரசியலமைப்பு அன்றைய ஐக்கிய முன்னணி அரசால் கொண்டு வரப்பட்டது. பிரித்தானிய முடியாட்சியுடன் இலங்கையைத் தொடர்புபடுத்தி வைத்திருந்த சகலவற்றையும் அறுத்துக் கொண்டு சுதந்திரமான இலங்கையை அவ் அரசியலமைப்பு பிரகடனம் செய்து கொண்டது. அதன் அடிப்படையில் இலங்கையின் தேயிலை, இறப்பர் உற்பத்திக்கான பெருந்தோட்டங்களை அந்நிய வெள்ளைக்காரர்களிடம் இருந்து அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. தோட்டங்களைத் தேசியமயமாக்கும் நடவடிக்கைளையும் மேற்கொண்டது. இவ்வாறு குறிப்பிடத்தக்க முற்போக்கான செயற்பாடுகளை ஐக்கிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்ற இடதுசாரிகளின் ஆதரவுடன் முன்னெடுத்தது. அதே வேளை, தேசிய இனப் பிரச்சினையை நியாயமான வழிகளில் தீர்த்து வைப்பதற்கு அவ் அரசியலமைப்பில் எவ்வித ஏற்பாடும் உட்புகுத்தப் பட்டிருக்கவில்லை. மேலும் அவ் அரசியலமைப்பு பௌத்த மதத்திற்கு முதலிடம் அளித்ததுடன் சிறுபான்மையோர் பாதுகாப்பிற்கெனப் பெயரளவில் சோல்பெரி அரசியலமைப்பில் இருந்த 29வது சரத்தை விலக்கியது. அது இருக்கக் கூடியதாகவே 1948இல் பிரசாவுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அவ்வாறே 1956இல் தனிச்சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஏற்கெனவே கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் செயலாக்கப்பட்டன. அப்போதெல்லாம் இவ் 29வது சரத்தின் மூலம் எத்தகைய தடையையும் ஏற்படுத்த ஏன் முடியவில்லை என்பதற்கான விடை, மேற்படி சரத்து வெறும் பெயரளவிலான ஒன்று என்பதேயாகும். இப் புதிய, குடியரசு அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டதிலிருந்த சோகம் என்னவென்றால், அதனைக் கொண்டுவந்த அரசியலமைப்பு அமைச்சராக இருந்தவர் ட்ரொட்ஸ்கிச இடதுசாரியும் சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான கொல்வின் ஆர். டி சில்வா என்பது தான். அவரே, தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்துப் பாராளுமன்றத்திற் பேசும் போது, “ஒரு மொழி இரண்டு நாடு, இரண்டு மொழி ஒரு நாடு” எனத் தனது சிம்மக்குரலில் கர்ச்சித்தவராவார். அவ்வாறே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான டாக்டர் விக்கிரமசிங்ஹ, அன்றைய பருத்தித்துறை தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரான பொன். கந்தையா ஆகியோரும் தனிச் சிங்கள மசோதாவை எதிர்த்துக் கடுமையாக உரையாற்றி இருந்தனர். அன்று அம் மசோதாவை எதிர்த்து வாக்களித்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமானதாகும். ஆனாற் பாராளுமன்றச் சந்தர்ப்பவாதமும் அமைச்சுப் பதவிகளின் தணியாத மோகமும் ரொட்சியவாதிகளை ஒரு அந்தலையில் இருந்து மறு அந்தலைக்குப் பாய வைத்தது. அதுவே அவர்களது நிரந்தரச் சீரழிவுக்கும் தமிழ் மக்களுக்கு எதிரான கறையாகவும் அமைந்து கொண்டது. இன்று வரை, தமிழ்த் தேசியவாதம் பேசும் அத்தனை கனவான்களும் தமது துரோகத்தனம், பிற்போக்கு நிலை என்பனவற்றை மறைக்கவும் பொத்தம் பொதுவாக இடதுசாரி விரோதத்தைக் கக்கவும் மேற்கூறிய இடதுசாரிகள் முன்னின்று நிறைவேற்றிய அரசியலமைப்பையே பிரதானப்படுத்திக் காட்டுவது அவர்களுக்கு வசதியாக அமைந்து கொண்டது.

இதன் வழியில், தமிழரசு-தமிழ்க் காங்கிரஸ் தலைமைகள் தமது பாராளுமன்றத் தேர்தல் தோல்விகளை முழு அளவிலான வெற்றிகளாக்க இச் சந்தர்ப்பத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் நன்கு பயன்படுத்த ஆரம்பித்தன. அத்தகைய எதிர்ப்பு நடவடிக்கை போதாது என்றும் மிதவாதம் கொண்டது எனவும் கூறி தமிழ் இளைஞர் பேரவையினர் அடிக்கடி தமிழரசுத் தலைமையுடன் முரண்பட்டு வந்தனர். ஆனால், அமிர்தலிங்கம் போன்றோருடன் இளைஞர்கள் முரண்பட்ட போதிலும் இளைஞர்களைத் தமக்கு விசுவாசமான இளைஞர்கள் மூலம் கட்டுப்படுத்தி வைத்திருக்கவே தமிழரசுக்கட்சி முயன்றது. அதன் வழியில், அமிர்தலிங்கம் போன்றோர் இரண்டு வழிமுறைகளைப் பின்பற்றினர். ஒன்று, தமிழ் தேசியவாத நிலைப்பாட்டில் சகலரும் ஐக்கியப்பட வேண்டும் என்றும் அதன் மூலம் தமது ஒற்றுமையை அரசாங்கத்திற்கும் உலகிற்கும் காட்ட வேண்டும் என்பதாகும். மற்றது, வடக்கு கிழக்கில் தமக்கு எதிராகவுள்ள பாராளுமன்ற எதிராளிகளைத் துரோகிகளாக அடையாளப்படுத்தி அவர்களை அழித்தொழிக்க வேண்டும் என்பதாகும். அதற்கு தீவிரமாக நிற்கும் இளைஞர்



களைப் பயன்படுத்தவும் தமிழரசுத் தலைமை தயக்கம் காட்டவில்லை. இத்தகைய குறுக்கு வழிப்பாதைக்கு திசைகாட்டியவர்களால் அதன் எதிர்கால விளைவுகள் எப்படியிருக்கும் என்பதை உணரவோ ஊகிக்க இயலவில்லை.

தொடர்ச்சி 9ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

மறுபுறத்தில் தமிழ் மக்களை திருப்திப் படுத்தி தமது தலைமைத்துவ ஆதிக்கத்தை தொடர்ந்து கைகளில் வைத்திருப்பதற்கான அரசியல் காய் நகர்த்தல்களைச் செய்தனர். 1972இல் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து வல்வெட்டித்துறையில் ஒரு கூட்டத்தை நடாத்திய தமிழரசு–தமிழ்க் காங்கிரஸ்–இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்து தமிழர் கூட்டணி என்ற பெயரில் இயங்க ஆரம்பித்தனர். இக் கூட்டணியில் தமிழ் காங்கிரஸ் முழுமையான ஈடுபாட்டைக் காட்டவில்லை. ஆயினும் தமிழ் காங்கிரசில் நின்று 1970இல் தோல்வியடைந்த மு. சிவசிதம்பரம், காங்கேசன்துறை திருநாவுக்கரசு, வவுனியா த. சிவசிதம்பரம் ஆகியோர் தமிழரசுடன் கூட்டணி வைத்து வேலை செய்ய ஆரம்பித்தனர். ஜீ.ஜீ. பொன்னம்பலமும் அவரோடு இணைந்து நின்ற தமிழ் காங்கிரஸ்காரர்களும் இக் கூட்டணிக்குச் சம்பந்தமற்றவர்க ளாகவே இருந்து வந்தனர். இருப்பினும், தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளராக மு. சிவசிதம்பரம் இருந்தமையால், உருவாக்கப்பட்ட கூட்டணி ஒரு ஐக்கியத் தோற்றத்தைக் காட்டியது.

தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பத்தில் பெயரளவில் இக் கூட்டில் இணைந்திருப்பதாலும், விரைவாகவே அதிலிருந்து கழன்று கொண்டது. தமிழீழக் கோரிக்கையைத் தாம் ஆதரிக்கவில்லை எனத் தொண்டமானின் பகிரங்க அறிக்கை மூலம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. இதனால் தமிழரசு-காங்கிரஸ் கட்சிகள் மீது விரக்தியடைந்த தமிழ் இளைஞர் ஓரளவுக்கு ஆறுதல் பெற்றாராயினும் தீவிர எண்ணம் கொண்ட இளைஞர்களின் அழுத்தம் அதிகரித்துக் கொண்டே வந்தது. அதனாற், கறுப்புக் கொடிப் போராட்டம், துக்கதினம் கடைப்பிடித்தல், உண்ணாவிரதம் இருத்தல் போன்ற தமிழரசுக் கட்சியின் வழமையான நடவடிக்கைகளே கூட்டணி அமைத்த பின்பும் தொடர்ந்து, 1972 மே 22ஆந் திகதி புதிய அரசியலமைப்பும் குடியரசுப் பிரகடனமும் இடம்பெற்ற போது, வடக்கு கிழக்கில் துக்கதினமும் கறுப்புக்கொடி பறக்கவிடுவதும் கூட்டணியால் முன்னெடுக்கப்பட்டது. அதே வேளை, தமிழ் மாணவர், தமிழ் இளைஞர் பேரவைகளின் ஊடாக வந்த இளைஞர்களிற் சிலர் வன்முறை நடவடிக்கைகளில் இறங்கினர். தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளின் ஆரம்ப வடிவங்கள் ஆங்காங்கே இடம்பெற்றன.

இச் சூழலிலேயே 1972ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த மே 22ம் திகதியில் இருந்து நான்கு மாதங்களுக்குப் பின்பு காங்கேசன்துறைத் தொகுதிக்கான தனது பாராளுமன்றப் பதவியை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் துறந்து கொண்டார். நிரந்தரமானதாக அன்றிப், புதிய குடியரசு அரசியல் யாப்பிற்கான கண்டனமாகவும் எதிர்ப்பாகவும் இப் பதவி துறப்பு இடம்பெற்றது. ஆனால் அரசாங்கம் அதற்கான இடைத்தேர்தலை 1975ம் ஆண்டு முற்பகுதியிலேயே நடாத்தியது. வேண்டுமென்றே இவ் இடைத்தேர்தலை அரசாங்கம் இழுத்தடித்து வந்தது. இவ்வாறு பாராளுமன்றப் பதவி துறத்தலானது பெரும் அரசியல் நடவடிக்கையாகவும் தியாகமாகவும் காட்டப்பட்டு செல்வநாயகத்தைச் சுற்றிக் கட்டியெழுப்பப்பட்ட ''தந்தை'', ''ஈழத்துக்காந்தி'' போன்ற படிமங்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டன.

மேலும் கூட்டணியினருக்கு, குறிப்பாகத் தமிழரசுக்கட்சியினருக்குத், தமது தமிழ் தேசியவாத நிலைப்பாட்டை ஊக்குவிப்பதற்கு அடுத்த ஒரு சந்தர்ப்பம் காத்திருந்தது. அதுவே நான்காவது உலகத் தமிழ் ஆராச்சி மாநாடாகும். இலங்கையில் நடைபெற இருந்த அம் மாநாட்டைக் கொழும்பிலா அல்லது யாழ்ப்பாணத்திலா நடாத்துவது என்பதில் ஆரம்பம் முதல் அரசாங் கக் காப்பாளர்களுக்கும் தமிழ்த் தேசியவாதத் தலைவர்களுக்குமிடையில் இழுபறியாகவும் வாக்குவாதமாகவும் இருந்து வந்தது. இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அவ் வேளை யாழ் மாநகர சபையின் முதல்வரான அல்பிரட் துரையப்பா ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்திருந்தார். யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேட்சை உறுப்பினராகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பின்பே அவர் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார். அதனால் அவர் தமிழரசுக் கட்சியினருக்குத் துரோகி ஆகினார். இந் நிலையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழராய்ச்சி மாநாட்டு இறுதி நாள் நிகழ்வு அம் மண்டப முன்றலில் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. யாழ் முற்றவெளிக்கு முன்பாக அமைந்திருந்த மேற்படி நிகழ்வில் பல ஆயிரக்கணக்கான மக்கள் விழாக் காணக்கூடி இருந்தனர். இதன் போதே, பொலிஸ் படையினர் இந் நிகழ்ச்சியை குழப்பியடிக்கும் நோக்குடன் உட்புகுந்து கலகத்தில் ஈடுபடத் தொடங்கினர். அவர்களை எதிர்த்து இளைஞர்கள் செருப்புக்களும் கற்களும் கொண்டு தாக்கினர். அதனால், ஆகாயம் நோக்கிப் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது மக்கள் சிதறி ஓடியதுடன் சரிந்து விழுந்த மின்சாரக் கம்பிகளில் சிக்குண்டு ஒன்பது பொதுமக்கள் உயிர் துறந்தனர். தமிழராய்ச்சி மாநாட்டின் மேற்படி துயரச் சம்பவம் தமிழர் கூட்டணியினருக்குப் பெரும் அரசியல் வரப்பிரசாதமாக அமைந்து கொண்டது. தமிழர்களின் தலை நகரிலே தமிழர்கள் மீது சிங்கள இனவாதப் பொலிசார் நடத்திய தாக்குதல் என்பதாகவும் அதற்கு மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா துணையாக இருந்தார் அல்லது ஏவி விட்டார் என்பதாகவும் பிரசாரம் மிக வேகமாகவே தமிழ் மக்கள் மத்தியில் பரவியது. இதில், தமிழர் கூட்டணி தமிழ் இளைஞர் பேரவையினர் போன்றோர் முன்நின்றனர். இத் துயரச் சம்பவத்தை நியாய சிந்தை உள்ள எவரும் ஏற்றுக் கொள்ள இயலாது. மாக்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழராட்சி மாநாட்டில் பொலிசார் நடந்து கொண்ட அத்துமீறலை வன்மையாகக் கண்டித்து உரிய நீதி விசாரணையைக் கோரி நின்றது. ஆனால் தமிழ்த் தேசியவாத அரசியல் சக்திகள் இனவாதமாகவே அதனைப் பிரசாரப் படுத்தினர். அதே வேளை தாம் பரப்பி வந்த தமிழீழக் கோரிக்கையை மக்கள் மத்தியில் நியாயப்படுத்திக் கொள்ளவும் இச் சம்பவத்தைப் பயன்படுத்திக் கொண்டனர்.

தமிழர் கூட்டணியினரதும் தமிழ் இளைஞர் பேரவையினரதும் குறுந்தேசியவாதப் பரப்புரைகள் தமிழ் மக்கள் மத்தியில் விரிவுபெற்று வந்த சூழலில், தமிழீழம் என்ற பிரிவினைவாத எண்ணக்கருவும் வளர்க்கப் பட்டது. தமிழனைத் தமிழன் ஆள்வது, ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை, உலகில் பலகோடி தமிழர்கள் வாழ்ந்தும் தமிழருக்கென ஒரு நாடு இல்லை, இனிமேலும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் கீழ் வாழ முடியாது என்பன போன்ற கருத்துக்கள் தீவிர இனவாதத்தின் ஊடாகத் தமிழ் மக்கள் மத்தியிற் பரப்பப்பட்டன.

இவ்வாறான கட்டத்திலேயே 1975ம் ஆண்டு இரண்டாவது மாதத்தில் காங்கேசன்துறைத் தொகுதிக்கான இடைத்தேர்தலிற் செல்வநாயகம் போட்டியிட்டார். அவரை எதிர்த்துப் பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வி. பொன்னம்பலம் போட்டியிட்டார். இத் தேர்தலில் மாக்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி அக்கறை கொள்ளவும் இல்லை. இடதுசாரி என்றளவிற் கூட வி. பொன்னம்பலத்தை ஆதரிக்கவும் இல்லை. பாராளுமன்றச் சந்தர்ப்பவாத கம்யூனிஸ்ட் கட்சியையோ அன்றி வி. பொன்னம்பலம் என்ற சந்தர்ப்பவாதியையோ நேர்மையான மாக்சிச லெனினிசவாதிகள் எவரும் ஆதரிக்கவில்லை. அதே வேளை, செல்வநாயகத்தை ஆதரித்தோர் தமிழீழம் பற்றிய வேகமான பரப்புரைகளைச் செய்து கொண்டனர். இதன் போதே செல்வநாயகம் தமிழீழம் பற்றி மனவிருப்பமின்றி ஒரு பிரசார மேடையில் அரைகுறைச் சத்தத்தில் பேசினார் என்றும் அதனை



அமிர்தலிங்கம் வழமையைவிட உரத்த தொனியில் தந்தை சொல்கிறார் எனப் பிரித்துப் பேசினார் என்றும் கூறப்படுவதுண்டு. எவ்வாறாயினும் செல்வநாயகத்தின் வாயால் அப்போதும் அதன் பின்பும் தமிழீழத்தைச் சொல்ல வைத்தவர் தளபதி அமிர்தலிங்கம் என்றே கூட்டணி வட்டாரங்களிற் பேசப்பட்டது.

அத் தேர்தலிற் செல்வநாயகம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். அது தமிழீழத்திற்கான முதலாவது அங்கீகாரம் எனத் தமிழர் கூட்டணி மகிழ்ச்சி கொண்டது. வி. பொன்னம்பலம் சுமார் பத்தாயிரம் வாக்குகளைப் பெற்றுக் கொண்டார். முன்னையது தமிழீழ ஆதரவு வாக்குகள் என்றால் பின்னையது தமிழீழ எதிர்ப்பு வாக்குகள் என்றே கொள்ள வேண்டியதாகும். இதில் வேடிக்கை யாதெனில், இதே வி.பி. காலம் அதிகம் செல்லுமுன்பாகவே ''செந்தமிழர் இயக்கத்தைத்'' தோற்றுவித்துக் கூட்டணியுடன் இணைந்து கொண்டார். அதை விட மோசமான ஒரு விடயத்தைக் கூட்டணி நடாத்திய மேதின மேடையில் பேசும் போது வி.பி. கூறியும் கொண்டார். அதாவது காங்கேசன் துறைத் தொகுதி இடைத் தேர்தலில் மனச்சாட்சியின்படி தந்தை செல்வாவிற்கே தனது வாக்கை அளித்தேன் என்றார். அதன் மூலம் தனக்கு வாக்களித்த பத்தாயிரம் வாக்காளர்களை மனச்சாட்சியற்ற முட்டாள்கள் என்பதாக ஆக்கிக் கொண்டார். அதுவே வி.பி. என்ற பிரபல்யம் பெற்ற ''கம்யூனிஸ்ட் மனிதரின்'' இறுதியான அரசியல் சாவடைதலாகவும் ஆகியது.

இடைத்தேர்தல் வெற்றி தமிழர் கூட்டணிக்கு தமிழ்த்தேசியவாத அரங்கில் செல்வாக்கு விரிவடைய வழிவகுத்த அதேவேளை இளைஞர் பேரவையைச் சேர்ந்த தீவிரவாத இளைஞர்களின் வன்முறை வரைமுறையற்ற விதத்தில் வளர ஆரம்பித்தது. உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரையும் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பாவையும் கொல்வதற்கு பல தடவைகள் இளைஞர்கள் முயன்ற போதிலும் அவை வெற்றியளிக்கவில்லை. இறுதியாக வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமிர்தலிங்கத்தின் இல்லத்திற்கு அண்மையாக அமைந்திருந்த பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடியில் வைத்து, வழிபாட்டிற்கு வந்த இடத்தில் அல்பிரட் துரையப்பா 1975ஆம் ஆண்டு யூலை 27ஆந் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையைச் செய்தலில் முன்னின்று நிறைவேற்றியவர் விடுதலைப் புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் என்பது யாவரும் அறிந்த ஒன்றேயாகும். அதற்கு முன்பாக நல்லூர் கிராமசபைத் தலைவர் குமாரகுலசிங்கம் துரோகி எனக் கூறப்பட்டு இளைஞர் பேரவையைச் சேர்ந்தோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் இரும்பு மனித ரெனப்பட்ட ஈ.எம்.வி. நாகநாதனை 70ஆம் ஆண்டுத் தேர்தலில் நல்லூர்த் தொகுதியில் தோற்கடித்த சி. அருளம்பலத்தின் பிரதான ஆதரவாளராக இருந்தார் என்பதே அதன் காரணமாகும்.

யாழ் மாநகர முதல்வர் சுட்டுக் கொல்லப்பட்ட அன்றைய தினம் மாக்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடமாராட்சிக் குழு ஒரு கருத்தரங்கை வல்வெட்டித்துறை சந்தியில் அமைந்துள்ள சனசமூக நிலையத்தில் ஒழுங்கு செய்திருந்தது. அதற்கு வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் தலைமை தாங்கவும் அதில் கட்சியின் பொதுச் செயலாளர் நா. சண்முகதாசன் உரையாற்றுவதாகவும் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலையில் துரையப்பா கொலை செய்யப்பட்ட செய்தி குடாநாட்டில் பரபரப்பாகிக் கொண்ட சூழலிலும் தீர்மானிக்கப்பட்ட மேற்படி கருத்தரங்கு அன்று மாலை குறித்த இடத்தில் நடைபெற்றது. பெருந்தொகையான மக்கள் இளைஞர்கள் கலந்து கொண்டனர். தோழர் சண், தமிழர் பிரச்சினையின் வளர்ச்சி பற்றியும் வர்க்க நிலைப்பாட்டின் ஊடான போராட்டம் பற்றியும் விரிவாகப் பேசினார். ஒரு கட்டத்தில் அன்று நடந்த துரையப்பா கொலையைச் சுட்டிக் காட்டி அது தனிநபர் பயங்கரவாதம் என்றும் அதன் மூலம் விடுதலை பெற முடியாது என்றும் அழுத்தந் திருத்தமாக எடுத்துரைத்தார். உதாரணத்திற்குத், தோழர் லெனின் மூத்த சகோதரர் தனிநபர் பயங்கரவாதத்தில் ஈடுபட்டு ஜார் மன்னனைக் கொல்ல முற்பட்டு தோல்வி கண்டதுடன் தூக்கிற் தொங்க வேண்டியேற்பட்ட நிகழ்வையும் சுட்டிக் காட்டினார். அப் பேச்சை இளைஞர்கள் அன்று வல்வெட்டித்துறையில் கேட்டார்களே தவிர அதில் உள்ளடங்கியிருந்த அரசியல் சாராம்சத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றே கொள்ளல் வேண்டும்.

மேலும் தனித் தமிழீழம் என்ற எண்ணக்கருவில் அடங்கியுள்ள பிற்போக்கான அம்சங்களையும் அதன் எதிர்கால வளர்ச்சியின் அபாயத்தையும் அதே நேரம் உரிய அரசியல் தந்திரோபாய போராட்ட வழிமுறையையும் மாக்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டி இருந்தது. அத்துடன் பேரினவாத ஒடுக்குமுறையின் வளர்ச்சிப் போக்கானது வடக்கு-கிழக்கு மக்களை நசுக்கி வருவதையும் எடுத்துக் காட்டியது. எதிரி யார், நண்பன் யார் என்ற தீர்மானிக்கப்பட்டு இனவாதமற்ற வர்க்கப் போராட்டப் பாதையில் வெகுஜன அடிப்படையில் மக்கள் அணிதிரண்டு போராடுவதைக் கட்சி தனது தலைமை வழிகாட்டலில் இடம்பெற்ற போராட்ட அனுபவத்தின் ஊடாக எடுத்துக் காட்டியது.

அதன் அடிப்படையில், தமிழீழப் பிரகடனம் வட்டுக்கோட்டையில் செய்யப்படுவதற்கு முன்பாகவே தமிழீழம் சாத்தியம் - சாத்தியம் இல்லை என்ற மாற்றுக் கருத்துக்களின் பரப்புரை கூட்டணியினதும் மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சியினதும் சார்பாகப் பல மேடைகளில் பேசப்பட்டது. அது தொடர்பான பகிரங்க மேடை விவாதங்கள் இரண்டு 1975ஆம் ஆண்டு முற்பகுதியிலும் நடுப்பகுதியிலும் இடம்பெற்றன. ஒன்று ஆனைக்கோட்டை உயரப்புலம் பாரதி சனசமூக நிலையத்தினர் ஒழுங்கு செய்த விவாத மேடையில், தமிழீழம் சாத்தியம் என்றும் சாத்தியம் இல்லை என்றும் விவாதிக்கப்பட்டது. சாத்தியம் என்பதை வலியுறுத்தி கூட்டணி சார்பில் ம.க. ஈழவேந்தன் தலைமையில் ஒரு குழுவும் சாத்தியம் இல்லை என்பதை வற்புறுத்தி மா.லெ. கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சி.கா. செந்திவேல் தலைமையிலான குழுவும் கடும் விவாதத்தில் ஈடுபட்டனர். பெருந்தொகையான மக்களும் இளைஞர்களும் இவ்விதத்தில் பங்கு கொண்டனர். அவ் விவாதத்திற் சாத்தியமில்லை என்ற கருத்தே மேலோங்கிக் கொண்டது. அடுத்த விவாதம் அப்போதைய உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கத்திற்கும் தோழர் நா. சண்முகதாசனுக்கும் இடையில் இடம்பெற்றது. இவ் விவாதத்திற்கு முன்னாள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். சுன்னாகம் சந்தை மைதானத்தில் நடைபெற்ற இவ் விவாதத்திலும் பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டனர். தோழர் சண் முன்வைத்த சாத்தியமின்மைக்கான தர்க்க நியாயங்கள் பெரும் பகுதி மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்விரு விவாதங்களிலும் தமிழீழம் என்ற எண்ணக் கருவில் உள்ளடக்கியிருந்த பிற்போக்கு அம்சங்கள், அதன் மூலம் ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு விடுதலை கிடைக்க முடியாமை, தமிழீழம் அடிப்படையில் மேட்டுக்குடி உயர் வர்க்க உயர் சாதிய ஆண்ட பரம்பரை சக்திகளுக்கே சேவை செய்யக் கூடியமை என்பன எடுத்து விளக்கப்பட்டிருந்தன. அத்துடன் இலங்கையின் வரலாற்று ரீதியான வளர்ச்சியும் சமகால அரசியல் யதார்த்தச் சூழலும் அந்நிய ஏகாதிபத்தியச் சக்திகளின் தலையீட்டு முயற்சிகளும் தமிழீழத்திற்கு சாதகமற்றதாகவே விளங்கும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது. அதன் ஒட்டுமொத்தமான சாத்தியமின்மை பற்றியும் எதிர்கால அபாயம் பற்றியும் தூரநோக்கில் எடுத்துக் கூறப்பட்டது. பழம் பெருமையும் உணர்ச்சி வேகமும் வீரமும் குறுந் தேசியவாதமாகப் பேசப்பட்ட சூழலில் அவற்றில் எதையுமே காதில் வாங்கிக் கொள்ள இயலவில்லை. இளைஞர்கள் தீவிரவாத நிலைப்பாட்டிலும் கூட்டணித்தலைமை பாராளுமன்றப் பாதையிலும் தமிழீழத்தை வென்றெடுக்க முன்நின்றனர். அதனால், 1976ஆம் ஆண்டு மே மாதத்தில் வட்டுக்கோட்டையின் பண்ணாகத்தில் தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்டது. அதன் அம்சங்கள் பற்றி அடுத்து வரும் தொடரில் பார்ப்போம்.

- வளரும் -

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# முதலாளியப் பேரினவாதத்தின் முதலாவது சனநாயகக் கொலை

## இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

**இமயவரம்பன் 21**

**இலங்கையின்** சுதந்திரம் என்பது உண்மையான சுதந்திரமாக இல்லாமற் கொலனிய ஆட்சி தனது மேலாதிக்கத்தையும் சுரண்டலையும் தொடர்வதற்கு வசதியான ஒரு அதிகாரக் கை மாற்றலாகவே இருந்தது. எனினும், நேரடியான கொலனி ஆட்சி இல்லாமை, புதிய அரசியற் சாத்தியப்பாடுகளை இயலுமாக்கியது. மக்களுடைய எதிர்பார்ப்புக்களை ஏற்கெனவே இருந்த அரசியற் கட்சிகள் வெவ்வேறு விதங்களில் உள்வாங்கி, அவற்றைத் தமது வர்க்கக் கண்ணோட்டங்களிலும் வர்க்க நலன்கள் சார்ந்தும் வெவ்வேறு விதங்களிற் பயன்படுத்தின.

ஏற்கெனவே பேரினவாத அரசியல் நிலை கொண்டுவிட்ட ஒரு சூழலிற், குறுகிய தேசியவாதத்தின் அடிப்படையிற் பாராளுமன்ற அரசியல் முன்னெடுக்கப் படுகிற வாய்ப்பு வலுவாகவே இருந்தது. மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைக் கூர்மையான பகை முரண்பாடுகளாக்குவதன் மூலம் தங்களை வளர்த்துக் கொண்ட ஒரு அரசியற் பாரம்பரியத்தின் வாரிசுகளான பேரினவாதிகளின் கூடாரமாகவே யூ.என்.பி. இருந்தது. அது ஒரு பேரினவாத முதலாளிய முகமாக இருந்த போதும் அதற்குள் முரண்பாடுகள் இருந்தன. தலைமைக்கான போட்டியாகவும் குறிப்பாகச் சில குடும்பங்களிடையிலான ஆதிக்கப் போட்டியாகவும் கொலனிய, விதேசிய ஆதிக்கங்களுடனான உறவு பற்றிய முரண்பாடுகளாகவும் முதலாளிய-நிலவுடைமை வர்க்க நலன்களிடையிலான முரண்பாடாகவும் அந்த இரண்டு சுரண்டும் வர்க்கங்களதும் நலன்களை எவ்வாறு பேணுவது என்பதைப் பற்றிய முரண்பாடுகளாகவும் அவை இருந்து வந்தன. எவ்வாறாயினும், பொதுவான வர்க்க நலன் என்று வருகிற போது, எத்தகைய சந்தர்ப்பவாதக் கூட்டணியாக இருந்தாலும், தமது வர்க்க அதிகாரத்துக்குச் சவாலாக அமையக்கூடிய எதையும் ஒன்று திரண்டு

**இலங்கை மக்கள் மத்தியிலான முரண்பாடுகளை கூர்மையான பகை முரண்பாடுகளாக்குவதில் முதலாளியப் பேரினவாதிகள் முன் நின்றனர்.**

எதிர்க்க அதன் பங்காளிகள் தயங்குவதில்லை. சில சூழ்நிலைகளில் மட்டுமே, ஒரு ஆளும் வர்க்கத்தின் அக முரண்பாடுகளை அதற்கு எதிரான ஒரு போராட்டச் சக்தியாற் பயன்படுத்த இயலுகிறது. ஆயினும், ஆளும் வர்க்கங்கள், தெரிந்து கொண்டே தம் அதிகாரத்தை அழித்துக் கொள்ளுவதில்லை. இதனை, 1947 முதலாக 1952 வரை யூ.என்.பி. ஆட்சி தன்னை உறுதிப்படுத்திக் கொண்ட காலத்திற் காண முடிந்தது.

இக் காலத்திற், பிரதமர் டி.எஸ். சேனநாயக்க எடுத்த முக்கியமான ஒரு நடவடிக்கை 1948ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பிரசாவுரிமைச் சட்டம். அதன் கீழ், இந்தியத் தமிழர் எனவும் இந்திய முஸ்லிம்கள் எனவும் அன்று அறியப்பட்ட இந்திய வம்சாவழியினரின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப் பட்டன. அதன் நோக்கங்கள் இரண்டு. ஒன்று டி.எஸ். சேனநாயக்காவின் சிங்களப் பேரினவாதம் தொடர்பானது. மலையகத் தமிழர் என நாம் இன்று குறிப்பிடும் இந்திய வம்சாவழியினருடன் சிங்களப் பேரினவாத அரசியற் தலைமைக்கு வலுவான அரசியற் பிணைப்புக்கள் இருக்கவில்லை. மலையக மக்களுக்காக முதன் முதலாகக் குரல்கொடுத்த அரசியல்வாதியாகப் பொன்னம்பலம் அருணாசலம் இருந்த போதும், வட பிரதேசத்தின் சாதிய மேட்டுக்குடித் தலைமையினரிடையே அவர்களைப் பற்றிய அக்கறை குறைவாகவே இருந்தது. இதில் வியக்க எதுவும் இல்லை. ஏனென்றாற் தம்மிடையே இருந்த தாழ்த்தப்பட்ட சாதியினரை மட்டுமன்றி இடைநிலைச் சாதியினரையும் ஓரங்கட்டியே வட இலங்கையின் மேட்டுக்குடிகளது அதிகாரம் தக்கவைக்கப் பட்டிருந்தது. அவர்கள் இலங்கையின் வடமேற்குக் கரைப்பகுதியில் வாழ்ந்த தமிழரைப் பற்றியோ மட்டக்களப்புப் பகுதியில் (இன்று அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்கள்) வாழ்ந்த மக்களைப் பற்றியோ கூடப் பெரிய கவனிப்பு இருக் கவில்லை. எனவே தங்களது பாராளுமன்றக் கதிரைகளின் எண்ணிக்கையைத் தீர்மானிக்காத ஒரு சமூகத்தைப் பற்றிய கவனிப்பு அவர்கட்கு இருக்க நியாயமில்லை. எனினும் மலையகத் தமிழரின் வாக்குரிமைப் பறிப்பு தம்மையும் பின்னர் பாதிக்கும் என்ற உணர்வு சில தமிழ்த் தலைவர்களிடம் இருந்தது. அதை விட அவர்களிடையே சமூக நீதி பற்றிய உணர்வுடைய ஓரிருவர் இருந்தனர் என்பதுங் குறிப்பிடத் தக்கது. எனினும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்த ஜி.ஜி. பொன்னம்பலம் மிகவும் தந்திரமாகவே நடந்து கொண்டார். அவரிடமிருந்து பிரிந்து சென்ற எல்லாரும் அவரது துரோகத்தின் காரணமாக மட்டுமே பிரிந்து சென்றனரா என்பது பற்றிய ஐயங்கள் பிற்காலத்தில் எழுந்துள்ளன.

டி.எஸ். சேனநாயக்கவின் மற்ற நோக்கம் இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் மிக வலிய ஆனால் அரசியல் ரீதியாக இன்னமும் வளர்ச்சி பெறாத பின்தங்கிய ஒரு சமூகமாக இருந்த மலையகத் தமிழரின் குடியிரிமையைப் பறிப்பதன் மூலம் அவர்கள் ஒரு போராட்டச் சக்தியாக வளராது தடுப்பதாகும். அது இடதுசாரி இயக்கத்தையும் இலக்கு வைத்த ஒரு தாக்குதல் எனலாம். பேரினவாதமும் சுரண்டும் வர்க்க நலனும் ஒருங்கிணைந்த இந்த நடவடிக்கையைப், பிற்காலத்தில் மிகவுஞ் சீரழிந்து போன பிலிப் குணவர்த்தன உட்பட, இடது சாரிகள் அனைவரும் எதிர்த்து வாக்களித்தனர். தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் பலர் அதை எதிர்க்கவில்லை என்றால், அதற்கான காரணம், மலையகத் தமிழர் மீதான பகைமை அல்ல. அவர்களது வர்க்கச் சார்புகளும் பதவி ஆசையுமே அவர்களது நிலைப்பாட்டைத் தீர்மானித்தன.

யூ.என்.பி., இந்தியத் தேசிய காங்கிரஸ் போலவோ வேறு ஆசியநாடுகளின் தேசிய முதலாளியக் கட்சிகள் போலவோ தேசிய முதலாளியக் கண்ணோட்டத்திற் கூடத் தன்னை அமைத்துக் கொண்ட கட்சி அல்ல என்று முன்னர் கண்டோம். மேட்டுக்குடிக் குடும்பங் களைச் சேர்ந்தோரது போட்டா போட்டியும் வர்க்க அடிப்ப டையிலான இணைவுமே இலங்கைத் தேசிய காங்கிரஸாகவும் சிங்கள மகா சபையாகவும் வடிவெடு த்தன. யூ.என்.பியின் உருவாக்கம் அந்த மேட்டுக்குடிகள் அதிகாரத்தைத் தமது கைக்குக் கொண்டு வருவதற்கான நோக்குடனும் கொலனிய எசமானர்களுடனான உடன்பாட்டின் அடிப்படையிலும் நிகழ்ந்தது. எனவே, 1947க்குப் பிந்திய சில ஆண்டுகளில், யூ.என்.பியின் அரசியலிற் தனிமனிதப் போட்டியும் குடும்ப ஆதிக்க நோக்கங்களும் மிக முக்கியமான பங்கு வகித்தன. இந்த விதமான போக்குக்களின் எச்சங்களை இன்று வரை இலங்கையின் பிரதான சிங்களத் தேசியவாதக் கட்சிகளிற் காண முடிகின்றமை நமது சமூகங்களில் நிலவுடைமைச் சமுதாயச் சிந்தனை எவ்வளவு ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதையே உணர்த்துகிறது.

மறுபுறம் தமிழ்த் தேசிய அரசியல் குடாநாட்டின் மேட்டுக்குடி அரசியலாகவும் குடாநாட்டுக்கு வெளியே பெரும்பாலும் அரசியற் பிரமுகர்களாகத் தம்மை அடையாளங் காட்டிய தனி மனிதர்களது செல்வாக்கைப் பற்றியதாகவும் இருந்தது. தமிழரசுக் கட்சியின் உருவாக்கத்தின் பின்னரே குடாநாட்டுக்கு வெளியே தமிழ்த் தேசிய அரசியல் ஒரு தேர்தல் பிரச்சினையாகவேனும் பேசப்பட்ட ஒரு விடயமாயிற்று. அதற்குச் சிங்களப் பேரினவாதத்தின் எழுச்சி எப்படி முக்கியமான ஒரு தூண்டுகோலானது என்று பின்னர் அவதானிப்போம். முஸ்லிம்கள் நாடு முழுவதும் பரவியிருந்தாலும், அவர்கள் செறிவாக வாழ்ந்த சில பிரதேசங்கள் நாடளாவிய அரசியலில் முன்னிலையில் இல்லாததால், முஸ்லிம்கள் தம்மை ஒரு தனித்துவமான ஒரு சமூகமாகக் கருதிய போதும், முஸ்லிம் தேசிய இன அடையாளத்தின் வெளிப்பாடும் அதன் மீது நிறுவப்பட்ட அரசியலும் வடிவெடுக்க நீண்டகாலம் எடுத்தது. முஸ்லிம் பிரமுகர்கள் தம்மை அரசியலில் முதன்மைப்படுத்திக் கொள்ள முஸ்லிம்களது ஆதரவு மட்டுமே போதாததாக இருந்தது. எனவே அவர்கள் வலிய அரசியற் கட்சி ஒன்றைச் சார்ந்து நிற்க நேரிட்டது. அவர்களது வர்க்க நலனகள் அவர்களை இயல்பாகவே யூ.என்.பியை நோக்கி நகர்த்தின. மறுபுறம் முஸ்லிம் தொழிலாளி வர்க்கத்தினரின் மத்தியிலிருந்தும் படித்த நடுத்தர வர்க்கத்தின் மத்தியிலிருந்தும் வந்த பலர் இடதுசாரிக் கட்சிகளுடன் தம்மை இணைத்துக் கொண்டனர்.

மலையகத் தமிழருடைய தலைமை தொழிலாளி வர்க்கத் தலைமையாக இருக்கும் வாய்ப்பு அச் சமூகத்தின் கல்வியும் சமூக விருத்தியும் பின்தங்கி இருந்த சூழலில் மறுக்கப் பட்டடிருந்தது. மலையகத் தொழிலாளரை அணிதிரட்டி ஒரு போராட்டச் சக்தியாக்கும் நோக்கம், இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற போரில் உருவாகிப், பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்று தன்னை அழைத்துக் கொண்ட தொழிற்சங்க அரசியல் நிறுவனத்திடம் இருக்கவில்லை. நேருவின் ஆலோசனையின் பேரில் 1940இல் உருவான இலங்கை-இந்தியக் காங்கிரஸ் நடேசையரின் தலைமையிலான இந்தியத் தொழிலாளர் சம்மேளனத்தை மேவிய சூழலில், மலையகத்தில் இடதுசாரித் தொழிற்சங்க இலக்கம் வலுவாக வேரூன்ற இயலவில்லை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பின்னர் பிளவுக்கு உட்பட்டு ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் உருவான போதும், அரசியல் வேறுபாடுகளை விட ஆழமாகத், தனிமனிதப் போட்டிகளே பிளவுகட்குக் காரணமாயிருந்தன. அதைவிடவும் உயர் சாதி ஆதிக்கம் தாழ்த்தப்பட்ட சாதியினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட மலையகத்தில் இன்று வரை இருந்து வருவதுங் கவனிக்கத் தக்கது.

இத்தகைய ஒரு அரசியற் பின்புலத்தில், மலையக மக்களது குடியுரிமையையும் வாக்குரிமையையும் வென்றெடுப்பதற்கான போராட்டம் ஒரு வெகுஜனப் போராட்டமாக விருத்தி பெறத் தவறியது. தென்னிலங்கையில் இடதுசாரிகளின் ஆதரவு மட்டுமே இருந்தது. வடக்கிலும் கிழக்கிலும் அதுபற்றிய ஆழமான விவாதங்களும் மக்கள் மத்தியிலான செயற்பாடுகளும் இருக்கவில்லை. மலைய கத்தை மையமாகக் கொண்ட ஒரு எழுச்சியும் இல்லாது அப் போராட்டம் முடங்கியமை, தவிர்க்க இயலாதுபோன ஒரு வரலாற்றுக் கொடுமையாகும்.

இடதுசாரிகளின் ஆதரவுத் தளம் நகர் சார்ந்தும் சமூக நலன்சார்ந்த பணிகளால் சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய மாகாணங்களின் கிராமப் பகுதிகளிலுங் குறிபபிடத்தக்களவில் இருந்து வந்தாலும், விவசாயிகளின் பிரச்சனைகளை முன்னெடுத்துப் போராடுகிற ஒரு அமைப்பாக அது தன்னை உருவாக்கிக் கொள்ளவில்லை.

பின்னர், கம்யூனிஸ்ற் கட்சி பல மாவட்டங்களிலும் விவசாயிகள் அமைப்புக்களை உருவாக்கியது. அவற்றின் மூலமே வட-மத்திய மாகாணத்தின் அனுராதபுர, பொலநறுவை மாவட்டங்களில் அது தனக்கான ஒரு தளத்தை அமைத்துக் கொண்டது. எனினுந் தெற்கிற் காணித் தட்டுப்பாடு காரணமாக நிலமற்ற விவசாயிகட்கும் பெருங்காணிச் சொந்தக்காரர்கட்குமிடையிலான முரண்பாடு ஒரு மோதலாக வளர்வதைக் கிழக்கிலும் வட-மத்திய மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் தவிர்க்க

**மலையக மக்களின் குடியுரிமை வாக்குரிமையைப் பறித்த ஐக்கிய தேசியக் கட்சியின் செயல் "சுதந்திரத்திற்கு" ப்பின் இடம் பெற்ற முதலாவது ஜனநாயகக் கொலையாகும்**

இயலுமாயிருந்தது. மலையகத்தின் காணியற்ற சிங்கள விவசாயிகள், குறிப்பாகக் கண்டி, மாத்தளை மாவட்டங்களிற், தங்களது நிலமின்மைக்குத் தமிழ்த் தோட்டத் தொழிலாளரையே காரணமாகக் கண்டனர். இவ்வாறான இனப் பகைமையும் 1948ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டமும் மலையகத்தின் சிங்கள விவசாயிகள் நடுவே இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தடையாகவும் பேரினவாத அரசியற் கட்சிகள் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளவும் உதவின. எவ்வாறாயினுஞ், சுதந்திரத்திற்குப் பின் இலங்கை அரசியலில் ஏற்பட்ட முதலாவது பெரிய அரசியல் உடைவின் காரணம் பதவிக்கான போட்டியே என்பது கவனத்துக்கு உரியது. டி.எஸ். சேனநாயக்க தனக்குப் பின் தன் மகன் டட்லி சேனநாயக்காவைப் பிரதமராக்கச் சூழ்ச்சி செய்வதை அறிந்த பண்டாரநாயக்க தான் யூ.என்.பிக்குள் ஓரங்கட்டப்பட முன்னரே அதிலிருந்து விலகி, வேறு சிலரையுங் கூட்டிச்சென்று, தனிக் கட்சி அமைத்தார். அந்த உடைவின் விளைவாக ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தோன்றியது. பண்டாரநாயக்க விலகிய சிறிது காலத்தினுள் யூ.என்.பியினுட் தனிப்பட்ட மோதல்கள் வெடித்தாலும் அது மேலுமொரு பிளவுக்கு வழிகோலவில்லை.

பண்டாரநாயக்காவின் விலகல் இலங்கையின் முதலாளி

**டி.எஸ். சேனநாயக்க தனக்குப் பின் தன் மகன் டட்லி சேனநாயக்காவைப் பிரதமரா க்கச் சூழ்ச்சி செய்வதை அறிந்த பண்டாரநாயக்க தான் யூ.என். பிக்குள் ஓரங்கட்டப்பட முன்னரே அதிலிருந்து விலகி, வேறு சிலரையுங் கூட்டிச்சென்று, தனிக் கட்சி அமைத்தார்.**

வர்க்கத்தினுள் ஒரு பிளவை ஏற்படுத்துவதற்கு நாட்டின் பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஏற்பட்ட நெருக்கடிகள் முக்கியமான பங்களித்தன. எனினும், இப் பிளவு 1952ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் யூ.என்.பியைக் குறிப்பிடத்தக்க முறையிற் பாதிக்கவில்லை. யூ.என்.பி போட்டியிட்ட 81 ஆசனங்களில் 54 ஆசனங்களை வென்றது. இடதுசாரிகளின் ஆசனத் தொகை 18 இலிருந்து 13ஆகக் குறைந்தது. ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 9 ஆசனங்களை வென்றது. மலையகத் தமிழர் பிரதிநிதித்துவம் இழந்தனர். 1952ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் யூ.என்.பி தன்னை வலுப்படுத்திக் கொண்டதை உணர்த்தின. மலையகத் தமிழரின் குடியுரிமைப் பறிப்பு அதற்குப் பலவழிகளிலும் உதவியது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் மக்களை அடுப்பில் இருந்து நெருப்பிற்குள் தள்ளியவர் யார்?

நாம் ஒரு பிரச்சினையை ஆராயும் போது, அந்தப் பிரச் சினை ஆரம்பித்த போதிருந்த சூழ்நிலையென்ன, அதன் வளர்ச்சிப் போக்கென்ன, அதன் இன்றைய நிலையென்ன என்பதை வரலாற்று வளர்ச்சியின் ஊடே புரிந்து கொண் டாலே பிரச்சினைக்குரிய தீர்வைக் காண முடியும். கடந்த காலத்தைப் பற்றிப் பேசாது விடுவோம், இன்றைய நிலை பற்றி மட்டுமே கதைப்போம் என்பது எம்மை மேலும் மேலும் சகதிக்குள் தள்ளும் வேலை யேயாகும். இதைத் தான் இன்று தமிழ்த் தேசிய வாதிகள் செய்து வருகி ன்றனர்.

முப்பது வருடங்கள் சாத்வீகம் பேசிப் பாராளுமன்றம் சென்று பிற்போக்கு அரசியல்வாதிகளுடன் கூடிக் குலாவி, அடுத்த முப்பது ஆண்டுகள் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்து நின்று, இன்று அதுவும் தோல்வியில் முடிந் ததாகப் பகிரங்கமாக அறிவித்துத் தமது இயலாமையை வெளிப்படுத்திய தமிழ்த் தேசியவாதிகள் தமிழ் மக்களை மீண்டும் மேய்க்க வந்துள்ளனர். நடந்தெல்லாம் மறந்தி ருப்போம், நடப்பதையே நினைத்திருப்போம் எனக் கவி பாடுகின்றனர்.

நாம் கடந்துவந்த பாதை ஏன் தோல்வியுற்றதென்பதை ஆராயத் தமிழ்த் தேசியவாதிகள் தயாராக இல்லை. கடந்து வந்த பாதை பற்றிச் சுயவிமர்சனம் செய்யாமல் உள்நாட்டிற் பிற்போக்குச் சக்திகளுட னும் வெளி நாட்டில் இந் திய ஆளும் வர்க்கத்துடனும் கூடிக் குலாவுகின்றனர். இடதுசாரிகள் செய்த தவறுகளுக்கு அவர்களை மன்னிக்க முடியாதெனக் கூறுபவர்கள், தாம் செய்த தவறுகளாற் பல இலட்சக் கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டும் இடம் பெயர்ந்து அவலங்களை அனுபவிப்பதற்கும் கோடிக் கணக்கிற் சொத்துக்களை இழப்பதற்கும் பொறுப்பான இந்தத் தேசியவாதிகளது கடந்த காலத்தை மறந்து மன்னித்தருள வேண்டுமாம். இப்போது கூட்டமைப்பு எனக் கூறிக் கொண்டு வடக்கிலே வாக்குக் கேட்க ஆரம்பித் திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களான தமிழ்த் தேசிய வாதக் கனவான்களிடம் தமிழ் மக்கள் கேட் கிறார்கள்: ஐயாமாரே உங்கள் மனைவிமார் பிள்ளைகள் குடும்பங்கள் எங்கே உள்ளனர் என்று உண்மையைக் கூறுவீர்களா?

மலையகத் தொழிலாளர்களின் வாக்கு ரிமை பறிப்புக்குத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி உடந்தையாய் இருந்த காரண த்தால் அக் கட்சியிலிருந்து பிரிந்து தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தனர். ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியினர் கூட்டங்கள் வைத்த போது அக் கூட்டங்கள் தமிழ்க் காங்கிரஸ் கட்சியி னரால் குழப்பட்டன. அன்று தமிழரசுக் கட்சியினரின் கூட்டங்கட்கு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் பாதுகாப்பு வழங்கினர். அதை அவர்கள் மறந்தது தற்செயலானதல்ல. தமிழரசுக் கட்சி யும் ஆண்ட பரம்பரையைச் சேர்ந்தவர்களாகிக் கொண்டது தான் காரணம். தமிழ்க் காங்கிரஸ் சைவ மேட்டுக்குடி வேளாள ஆதிக்கக் கட்சி என்றால் தமிழரசு சைவ கிறிஸ்தவ மேட்டுக்குடி வேளாள ஆதிக்கக் கட்சியா கியது. தந்தை, தளபதி, அண்ணன், தம்பி என வேடமணி ந்த வர்களாற் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டதே மிச்சமாகும். 1956ல் பண்டாரநாயக்க அரசாங்கம் சிங்களம் மட்டும் மசோதாவைப் பாராளுமன்றத்திற் சமர்ப்பித்து வாக்கெடுப் புக்கு விட்ட வேளை, அதை எதிர்த்து இலங் கைக் கம் யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, தமிழரசுக் கட்சி என்பன வாக்களித்தன. அன்று சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து வாக்களித்த தமிழ்ப் பாராளுமன்ற அங்கத்தவர்களிலும் பார்க்கக் கூடுதலான சிங்கள இடது சாரி உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்திருந்தனர் என்பதை அரசியல் ஆய்வுப் பிரகிரதிகள் அறிவார்களா?

இது ஒரு முக்கிய நிகழ்வு. பாராளுமன்ற இடதுசாரிகள் பிற் காலத்திற் செய்த தவறுகளுக்கு மன்னிக்கவே கூடாதென்பவர்கள் இச் சம்பவத்தைப் பற்றி ஏதும் பேசத் தயாரில்லை. அப்படியான ஒரு நிகழ்வு இடம் பெற்ற தாகவே கூறுவதற்கு தயாரில்லை. அன்றைய தனிச் சிங்கள மசோதாவை எதிர்த்து அப்போதைய பருத்தித் துறைப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கம்யூனிஸ்ட் தோழர் பொன் கந்தையாவின் காரசாரமான உரையைத் தமிழ்த் தேசியவாத ஆய்வு மரமண்டைகள் ஒரு முறை தானும் வாசித்திருக்குமா?

தமிழ் மக்களுக்கு அநீதி விளைவித்த பண்டாரநாயக்க அரசாங்கம், அதே வேளை, நாட்டின் சுதந்திரத்தையும் இறமையையும் வலியுறுத்திப் பாதுகாத்த உண்மையை மறுப்பது நியாயமாகாது. அன்று பண்டாரநாயக்க அரசா ங்கம் நாட்டிலிருந்த பிரிட்டிஷ் தளங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்த போது, அதை எதிர்த்து மாட்சிமை தங்கிய மகாராணியாருக்கு தந்தியடித்த பெருமை தமிழரசுக் கட்சியின் இரும்பு மனிதர் டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதனையே சேரும். தமிழத் தேசியவாதிகள் பிற்போ க்காளர் பக்கத்திலும் அந்நியச் சக்திகளின் அடிவருடி களாகவுமே அன்றிலிருந்து இன்றுவரை செயற்பட்டனர் என்பதற்கு இது ஒரு சான்று. தேசியத் தலைவரெனப்பட்ட பிரபாகரன் கடைசி நேரத்தில் ஒபாமா நிர்வாகம் தம்மைக் காப்பாற்றுமென எதிர்பார்த்தது, இவர்களின் மேற்கத்தைய ஏகாதிபத்திய சார்பு உயர் வர்க்க நிலைப்பாட்டை அம்பலப் படுத் தியது. பண்டாரநாயக்க ஆட்சியின் போது, பண்டா-செல்வா உடன்படி க்கை செய்யப்பட்டு, எழுதியமை காய முன்பே தளபதி அமிர்தலிங்கம் சிறீ எதிர்ப்புப் போராட் டத்தை ஆரம்பித்து ஒப்பந்தத்தைக் கிழிப்பதற் கான சூழலை உரு வாக்கினார். அதை அப் போது இலங்கை கம்யூ னிஸ்ட் கட்சி தெரிவித்த போது ஏற்க மறுத்த அமிர்தலிங்கம், பிற்கால த்தில் ஒப்பந்தம் கிழிக்கப் படுவதற்குத் தானும் ஒரு காரணம் என ஏற்று க்கொண்டார். அதை எத்தனை தமிழ்த் தேசிய வாத ஆய்வாளர்கள் நினைவூட்டத் தயாராக உள்ளனர்?

பண்டாரநாயக்கவிற்கு எதிராக அவருடைய கட்சி க்குள் புத்தரக்கித்த தேரோ, விமலா விஜய வர்தன போன்றோர் செயற்பட்டிருந்தனர். அந்த ஒப்பந்தத்தைச் செய்ததன் காரணமாகத் தமிழரசுக் கட்சியினர் தனக்கு ஆதரவளிப்பார் களென பண் டாரநாயக்க எதிர்பார்த்தார். ஆனாற் தமிழரசுக் கட்சியினரோ, பண்டாரநாயக்க அரசுக்கு ஆதர வளித்து ஒப்பந்தத்தை அமுல் நடாத்துவதற்குப் பதிலாக, அவருக்குத் தொந்தரவு கொடுத்தனர். யூ.என்.பியினர் ஜே.ஆர். தலைமையில் கண்டி யாத்திரை மேற்கொண்டனர். அந்தப் பாதயாத் திரையை இம்புலகொடவில் எஸ்.டி. பண்டார நாயக்க முறியடித்தார் என்ற போதும், தமிழரசுக கட்சியின் ஆதரவு கிடைக்காததாலும் பண்டார நாயக்க ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார் என்பது மற்றொரு மறைக்கப்படும் பக்கமாகும். பண்டா-செல்வா ஒப்பந்தம் அமுலாகியிருந்தால், பிற்கா



லத்தில் இடம்பெற்ற குடியேற்றத் திட்டங்களைத் தடுத்திருக்கலாம். ஏன் வட-கிழக்கு இணைப்பிற் கும் அவ் ஒப்பந்தத்தில் ஏற்பாடு இருந்தது. அதைவிட, லட்சக் கணக்கான உயிர்களைப் பாதுகாத்திருக்கலாம். இடப் பெயர்வுகளைத் தடு த்திருக்கலாம். ஆனாற் தெற்கின் பேரினவாதி களும் வடக்கு-கிழக்கின் தமிழ்க் குறுந் தேசிய வாதிகளும் அதற்கு வழிவிடவில்லை. பண்டா-செல்வா ஒப்பந்த விடயத்திற் தமிழரசுக் கட்சியில் அமிர்தலிங்கம் தலைமையிற் செயற்பட்ட ஒரு பகுதியினரின் அதி தீவிர நடவடிக்கையின் விளைவால் நாம் பல்வேறு இன்னல்களைச் சந்தித்தோம். அவற்றிற்காகத் தமிழ்த் தேசியவா திகளை மன்னிக்கலாமா என்பதை எதிர்காலத் தமிழ் இளந்தலைமுறையினர் தான் முடிவுசெய்ய வேண்டியவர்களாவர்.

பண்டாரநாயக்க ஆட்சியின் போது மேற்கொண்ட முற்போக்கு நடவடிக்கைகளை எல்லாம் மேட் டுக்குடி உயர்வரக்கப் பிரதிநிதிகளான தமிழரசுக் கட்சியினர் எதிர்த்து வந்தனர். பண்டாரநாயக்க ஆட்சியின் போது கொண்டுவரப்பட்ட சட்டங்க ளுள் நெற்காணி மசோதாவும் ஒன்று. அதையுந் தமிழரசுக் கட்சியினர் எதிர்த்தனர். நெற்காணிச் சட்டம் முழுமையாக அமுற்படுத்தப்பட்டிருந்தால் குடியேற்றத் திட்டங்களுக்கான தேவை ஏற்ப ட்டிராது. விவசாயிகளைக் காணிகளிலிருந்து வெளியேற்றுவதை அச் சட்டம் தடைசெய்தது. ஏழை விவசாயிகள் நன்மை பெறக் கூடியதாக இருந்தது.

பண்டாரநாயக்கவின் அரசியலிற் பங்கேற்று ஒப்பந்தத்தை அமுல் நடத்தாதவர்கள் பிற்காலத் தில் டட்லியுடன் ஒப்பந்தம் செய்து அவரின் அமைச்சரவையில் உள்ளூராட்சி அமைச்சர் பதவியை மு.திருச்செல்வத்திற்கு வாங்கிக் கொடுத்தனர். எவ்வாறாயினும் வட-கிழக்கில் மலசல கூடங்களைத் தானும் அவர்களால் கட்ட முடியவில்லை. தமிழ்த் தேசியவாதிகள் தமது வர்க்க நிலைக்கு அமைவாகப் பிற்போக்கு அரசி யல்வாதிகளின் பின்னாலேயே சென்றதற்கான இவ் உதாரணங்கள் வரலாற்றில் என்றும் இருந்து வரவே செய்யும்.

*வண்ணை கரன்*



# போருக்குப் பின்பான பிரதான முரண்பாடு

இலங்கையின் மாக்சிய லெனினியவாதிகள், இலங்கையின் அடிப்படை முரண்பாடு வர்க்க முரண்பாடே எனினுங், குறிப்பான சூழ்நிலைகளின் பயனாகக் கடந்த மூன்று தசாப்தங்களாகத் தேசிய இன முரண்பாடு பிரதான முரண்பாடாகத் தன்னை நிலைநாட்டியுள்ளது என்று கூறி வந்துள்ளனர். அதன் பொருள் ஏதென்றால், அந்த முரண்பாட்டின் தீர்வில்லாமல் அல்லது அதன் தீர்வு நோக்கிய காரிய நகர்வு இல்லாமல், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமோ வர்க்க ஒடுக்கு முறைக்கான போராட்டமோ வெற்றி பெற இயலாது என்பது தான். அதற்கான காரணம் என்னவென்றாற், தேசிய இனப் பிரச்சினை வலியதொரு முரண்பாடாக இருக்கையில் ஒடுக்கப்பட்ட மக்களை இன அடிப்படையில் பிளவுபடுத்துவது ஒடுக்கும் வர்க்கச் சக்திகட்கு இயலுமாயிருக்கும். அதே அளவுக்கு, ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றுபடுத்துவது புரட்சிகரப் போராட்டம் சக்திகட்குக் கடினமானதாக இருக்கும். பிரதான முரண்பாடு என்பதை ஏற்காத நேர்மையான இடதுசாரிகள் பலர் தேசிய இனப் பிரச்சனையின் தீர்வு அதி முக்கியமானது என்பதை ஏற்கிறார்கள். இடதுசாரிகளல்லாத சனநாயக வாதிகளும் முற்போக்குச் சிந்தனையாளர்களும் இப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை மறுக்க இயலாமைக்கு அது போராக வடிவெடுத்தது முக்கியமான ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

விடுதலைப் புலிகள் தோல்வியை எதிர்நோக்க முன்பிருந்தே, தமிழரிற் சிலர், விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டாற் தேசிய இனப் பிரச்சனை தானாகவே தீர்ந்து விடும் என்னுங் கருத்தை வெளிப்படுத்தி வந்துள்ளனர். தேசிய இனப் பிரச்சனையைப் பயங்கரவாதப் பிரச்சனையாக அடையாளங்காட்டி வந்த பேரினவாதிகளது நிலைப்பாட்டினின்று இது வேறுபட்டதல்ல. இன்று விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப் பட்டுள்ளனர். ஆனாற் தேசிய இனப் பிரச்சனையின் தீர்வுக்கான ஆரோக்கியமான நகர்வு எதற்குமான சாடை தெரியவில்லை.

இன்னொரு புறம் விடுதலைப் புலிகளையுஞ், சில சமயம், அதன் தலைவரை மட்டும் தமிழ்த் தேசிய இனத்தின் முழுமையான அடையாளமாகப் பார்த்து விடுதலைப் புலிகளது தோல்வியாற் துவண்டு போய் விரக்தி அடைந்தோர் உள்ளனர். சிலரால் விடுதலைப் புலிகளின் தலைவரது சாவை இன்னமும் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. இவ்வாறானவர்கள் மட்டுமன்றித் தீவிரமான சிங்களப் பேரினவாதிகள் கூட எல்லாத் தமிழரையும் புலிகளாகவே பார்த்தனர்.

குழப்பம் மிக்க பார்வைகள் பலவற்றுக்குமான காரணம் தேசிய இனப் பிரச்சனையை மக்கள் மத்தியிலான ஒரு முரண்பாட்டின் விருத்தியாகக் காணத் தவறியமையாகும். அதைத் தனியே தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான முரண்பாடாகக் கண்டது ஒரு பெரிய தவறாகும். அதன் வர்க்கத் தன்மையை அடையாளங் காணாமை மற்றொரு பெரிய தவறாகும். மாக்சிய லெனினியவாதிகள் தேசிய இனப் பிரச்சனை எவ்வாறு ஒரு இன ஒடுக்குமுறையாகவும் போராகவும் உருமாற்றம் பெற்றது என்பதை இயங்கியற் கண்ணோட்டத்தில் வரலாற்றுப் பொருள் முதல்வாத அடிப்படையில் ஆராய்ந்ததால் மேற்கூறிய எக் குழப்பத்திற்கும் பலியாகவில்லை.

அவர்களது நோக்கிற் தேசிய இனமுரண்பாடு எல்லாத் தேசிய இனங்களையும் தேசிய சிறுபான்மை இனங்களையுஞ் சேர்ந்த மக்களிடையிலான பகைமையற்ற, அதாவது சினேக, முரண்பாடு. அது எவ்வித வன்முறைக்கும் இடமின்றித் தீர்க்கக் கூடியது. அது, ஆளும் அதிகார வர்க்கத்தினரிடையே இருந்த போட்டியின் வடிவிற் தொடங்கி, மக்களின் கவனத்தை அடிப்படையான பொருளாதாரமுஞ் சமூக நீதியுஞ் சார்ந்த பிரச்சினைகளிலிருந்து கவனத்தைத் திருப்புகிற நோக்கிற் பகை முரண்பாடாக மாற்றப்பட்டது. அதுவே முதலாளிய உலகமயமாக்கலின் தேவை கருதிப் போராகவும் உருமாற்றப்பட்டது. எனினுந் தேசிய இன முரண்பாடு உண்மையில் எந்த இரு தேசிய இனங்கட்கும் இடையிலானதல்ல. அது சிங்களப் பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகளாகத் தங்களை காட்டிக் கொள்ளுகிற ஒரு ஆளும் அதிகார வர்க்கத்தின் நலன்கள் சார்ந்த பிரச்சினை. அந்த வர்க்க நலனை முன்னெடுக்கும் பேரினவாதப் பிற்போக்குச் சக்திகளதும் அவர்கட்குப் பின்னால் அவர்கட்கு ஆதரவாகச் செயற்படுகிற அந்நிய மேலாதிக்கச் சக்திகளதும் தேவைகளால் வளர்த்தெடுக்கப்பட்ட பிரச்சனை. எனவே தேசிய இனப் பிரச்சனையின் பகைமையான அம்சம் தேசிய இனங்களைச் சார்ந்த மக்களுக்கு இடையிலான முரண்பாடுகளைப் பற்றியதல்ல. அது பேரினவாத ஒடுக்குமுறையாளர்கட்கும் ஒடுக்கப்படுகிற தேசிய இனங்கட்கும் இடையிலானது. எனவே அதைச் சிங்களவர்-தமிழர் முரண்பாடு எனப் பார்ப்பது பல வழிகளிலும் தவறானது. அது சிங்களப் பேரினவாதத்திற்கும் சகல சிறுபான்மைத் தேசிய இனங்கட்கும் தேசிய சிறுபான்மையினருக்கும் இடையிலானது. அப் பகை முரண்பாட்டுக்கு வலுச் சேர்க்கிற ஒரு முரண்பாட்டு அம்சமாகக் குறுந் தேசியவாதத்தையும் குறுகிய இனவாதப் போக்குகளையும் கூறலாம்.

தேசிய இனப் பிரச்சனையின் தீர்வு இரண்டு முக்கியமான போராட்ட அம்சங்களைக் கொண்டது ஒன்று பேரினவாத ஒடுக்குமுறையாளர்களின் வன்முறை உட்பட்ட பல்வேறு அடக்குமுறைகளை எதிர்த்துப் போரிடுவது. மற்றது தேசிய இனப் பிரச்சனையின் பகைமையற்ற பண்பை மீளவும் நிலை நிறுத்துவது. இவை இரண்டையும் இயலுமாக்கினாலே தேசிய இனப் பிரச்சனைக்கு நிலையான நியாயமான தீர்வொன்றைப் பெற இயலும். அதற்கான போராட்டம் ஒரு பரந்துபட்ட வெகுஜனப் போராட்டமாகவும் அமைவது அவசியம். அப் போராட்டம், தேசிய இனப் பிரச்சனையை மட்டுமே தனது அக்கறையாகக் கொண்டிருக்க இயலாது. தேசிய இனப் பிரச்சனை ஒடுக்குமுறையாகவும் போராகவுங் காரணமான முரண்பாடுகளையும் ஒடுக்குமுறையாவும் போராகவும் மாறியதன் விளைவான முரண்பாடுகளையுங் கணிப்பில் எடுக்க வேண்டும். அதிற் சம்பந்தப்பட்ட சக்திகளைக் கணிப்பில் எடுத்து நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்ற முடிவுக்கு வரவேண்டும்.

விடுதலைப் புலிகள் ஒரு ஆயுதப் படை என்ற வகையில் முழுமையாக முறியடிக்கப் பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் முற்றாக அழிக்கப்படவில்லை. அவர்கள் என்றேனும் முற்றாக அழிக்கப்பட்டாலும், விடுதலைப் புலிகளின் தோற்றத்துக்குக் காரணமான இன ஒடுக்கற் பிரச்சனை தீர்க்கப் படவில்லை. போரின் முடிவு ஒரு முரண்பாடு வெளிப்பட்ட முறையை மாற்றியுள்ளதே ஒழிய முரண்பாட்டின் தன்மையை மாற்றிவிடவில்லை. உண்மையிற் போரின் வெற்றி அதற்குப் பின்னாலிருந்த சக்திகளை வெவ்வேறு வகைகளிற் பாதித்துள்ளது. எனினுஞ் சிங்களப் பேரினவாதம் இப்போது மேலும் ஆக்கிரமிப்புப் பண்புடையதாகி விட்டது. அது முஸ்லிம்களையும் மலையகத் தமிழரையும் முன்னைவிட வெளிப்படையாக இலக்கு வைக்கிறது. எனவே தேசிய இனப் பிரச்சனை மேலும் மோசமாகியுள்ளதே ஒழிய, அது எவ்வகையிலும் இல்லாமற் போகவுமில்லை, தீர்வை நோக்கி நகரவுமில்லை.

பிரதான முரண்பாடு என்பதை அரசாங்கத்துக்கும் புலிகட்கும் இடையிலான முரண்பாடு என்றோ அடக்குமுறைப் போரும் ஆயுதப் போராட்டமும் என்றோ தமிழருஞ் சிங்களவரும் என்றோ பார்த்தவர்கள் இனி எந்த முரண்பாடு பிரதானமான இடத்துக்கு வரும் என்று தடுமாறுவது இயல்பானது. தேசிய இனப் பிரச்சினை இன்று திட்டவட்டமாகவே புதியதொரு கட்டத்திற்கு வந்துள்ளது என்பதை யாரும் மறுக்க இயலாது. அதனால் அதைக் கையாளுகிற விதத்தில் மாற்றங்கள் அவசியமாகின்றன. அது தன்னை வெளிப்படுத்துகிற விதங் காரணமாக முரண்பாட்டின் வெவ்வேறு தரப்புக்களும் போராட்ட அணிகளும் சில முக்கிய மாற்றங்கட்கு உள்ளாகலாம். ஆனாற் தேசிய இனப் பிரச்சினை பிரதான முரண்பாடாகத் தொடர்வது மறுக்க இயலாத உண்மை.

இன்றைய நிலைமைகளில், மேலை ஏகாதிபத்தியவாதிகளும் இந்தியாவும் மீண்டும் இலங்கையிற் குறுக்கிட வேண்டும் எனவும் பேரினவாதிகளுடன் அவற்றுக்கு உள்ள முரண்பாடுகளைத் தமிழர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் எனவும் எவரும் ஏதிர்பார்ப்பது, மேலாதிக்கவாதிகள் எதற்காக அக்கறை காட்டுகின்றனர் என்பதை விளங்கத் தவறியதன் விளைவுகள். இலங்கையைத் தமது மேலாதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர அவர்கள் முயல்கிறார்கள். அவர்கள் யாருடைய தரப்பிலும் இல்லை என்பதையும் அவர்களுக்குப் பிரச்சனையின் நிலையான நியாயமான தீர்வில் அக்கறை இல்லை என்பதையும் நாம் உணர வேண்டும். இன்னொரு விதத்திற் பார்த்தாற், தேசிய இனப் பிரச்சினை தீராமற், பகைமையான இன முரண்பாடாகத் தொடருவது அவர்கட்கு வாய்ப்பானதாகும். அதன் மூலம் பொது எதிரிக்கு மாறாக மக்கள் இணைய இயலாமற் செய்யப்படுகிறது.

எனவே தான் வர்க்க முரண்பாட்டின் பிரதானமான ஒரு வெளிப்பாடான ஏகாதிபத்திய மேலாதிக்கச் சக்திகட்கு எதிரான போராட்டத்தின் வெற்றிக்குத் தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வு ஒரு முக்கிய நிபந்தனையாகிறது. தேசிய இனப் பிரச்சனையின் முக்கியத்துவத்தை மறுத்து இந்த நாட்டிற் சமூக நீதிக்கும் சனநாயகத்திற்கும் மனித உரிமைக்குமான போராட்டத்தால் ஒரு எல்லைக்கப்பால் முன்னேற இயலாது என்பதை நாம் மறக்கலாகாது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தமிழர்களும் யூதர்களும் தமிழீழமும் இஸ்ரேலும்

### 1. வரலாற்று உடன்பாடின்மை

இலங்கைத் தமிழரின் நிலையை இஸ்ரேலியருடன் ஒப்பிடுகிற ஒரு வழக்கம் 1960களில், 1961இல் சத்தியாக்கிரகம் தோல்வியில் முடிந்த பிறகு, தீவிரமடைந்து சிலகாலம் ஓய்வு பெற்று இருந்தது. தமிழர் எல்லா நாடுகளிலும் உளர், தமிழருக்கு ஒரு நாடு இல்லை என்பது முன்பு யூதச் சமூகம் பற்றிய ஒரு கூற்றுக்கு ஒப்பானது. எனினும் அது பொருந்தாத உவமை. பெருவாரியான தமிழர் தமது சொந்த மண்ணிலேயே தமிழகத்திலும் இலங்கையிலும் வாழ்ந்து வந்துள்ளனர். தமிழரில் ஒரு பகுதியினர் கொலனி ஆட்சிக் காலத்திற் தமிழகத்திலிருந்த இடம் பெயர்க்கப்பட்டு இலங்கை, மலாயா, பிஜி, மடகஸ்கர், தென்னாபிரிக்கா போன்ற நாடுகட்கும் பிற இந்தியத் துணைக்கண்டச் சமூகத்தினருடன் சேர்ந்து மேற்கிந்தியத் தீவுகட்கும் பிற பிரித்தானியக் கொலனிகட்கும் அனுப்பப் பட்டனர். அந் நாடுகளிற் சிலவற்றில் அவர்கள் தம் இன, மொழி அடையாளங்களுடன் வாழுகின்றனர். சில நாடுகளில் இன அடையாளம் பேணுகின்றனர். பிறவற்றிற் தம்மைப் பிற சமூகங்களுடன் சங்கமாக்கியுள்ளனர். எனினும் தமிழருக்குரிய பிரதான நிலப்பரப்புத் தமிழகமே. தமிழினம் என்பது இன அடையாளமன்றி மொழி அடையாளமாகவே பெரிதும் அறியப் படுகிறது. இன்றைய தமிழரிற் கணிசமானோர் பிற இந்தியச் சமூகங்களிலிருந்து வந்தவர்களின் பரம்பரையினர். அவ்வாறே தமிழரும் பிற சமூகங்களுடன் ஒன்றியுள்ளனர்.

யூதர்கள் இன அடையாளத்தை வலியுறுத்துவது போக, யூத மதமும் அந்த அடையாளத்துக்கு நெருக்கமாக உள்ளது. மிக அரிதாகவே எவரும் யூத மதத்தைத் தழுவ இயலும். யூத மதம் பல பிரிவுகளைக் கொண்டது. எப் பிரிவிலும் இல்லாத யூதர்களும் உள்ளனர். பெரும்பாலான யூதர்கள் தமது மண்ணை விட்டு பதினைந்து நூற்றாண்டுகட்கு முன்னரே சிதறிச் சென்றுவிட்டனர். மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் அவர்கள் பிற சமூகத்தினருடன் பகைமை இல்லாது வாழ்ந்தனர் எனலாம். ஐரோப்பாவில் முதலாளியத்தின் எழுச்சியுடன் யூத சமூகத்தினின்று வணிகம், கடன் வழங்கல் என்பனவற்றின் வழியாகச் செல்வந்தர்கள் தோன்றினர். அதைவிட, வழமையான நிலவுடைமைச் சமூகத்தின் ஒரு பகுதியாக ஏற்கப்படாத யூதர்கள் தமக்கான சேரிகளில் வாழ்ந்தனர். அவ் வழக்கம் முதலாளித்துவத்தின் எழுச்சியுடன் இறுக்கமடைந்தது. கலைகளிலும் பொழுதுபோக்கு, கணித, அறிவியற் துறைகளிலும் யூதரிடையே ஈடுபாடுடையோர் தோன்றுவதற்கு அவர்கள் நிலவுடைமைச் சமுதாயத்திற்குப் புறம்பானவர்களாக இருந்தமை ஒரு காரணியாயிற்று.

அப்போது உலகளாவிய யூத உணர்வு என்று ஒன்று இருந்ததாகக் கூற இயலாது. தீவிர மதப் பற்றாளரிடையே தமது சொந்த நாட்டுக்கு (பல நூறு ஆண்டுகள் முன்பு விட்டுச் சென்ற இஸ்ரேலுக்கு) மீளுவோம் என்ற மதவழியான நம்பிக்கை இருந்தது. முதலாம் உலகப் போரை ஒட்டிய காலத்திலேயே யூதர்கட்கான தாயகம் என்ற கருத்து பிரித்தானிய கொலனிய ஆட்சியாளர்களது துணையுடன் உருவாக்கப் பட்டது. அதற்கு நியாயங்கள் இருந்தன. அக் காலத்தில் யூதர்கள் பல ஐரோப்பிய நாடுகளிலும் தொடர்ச்சியான கொடுமையை அனுபவித்தனர். ரஷ்யப் பேரரசு உட்பட்ட பல நாடுகளிலும் அவர்கட்கெதிரான இன ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. எனினும் ஜேர்மன் /பாசிசவாதிகளின் கீழ் இரண்டாம் உலகப் போருக்கு முன்பிருந்து யூதர்கள் அனுபவித்த கொடுமைகளே யூதர்கட்கு ஒரு தாயகம் தேவை என்ற கருத்துக்கு வலிமை சேர்ந்தன. அப்போது யூதர்களிடம் வங்கி மூலதன வலிமை இருந்தது. அந்தப் பொருள் வலிமையும் அவர்களது செல்வாக்கிற்கு உதவியது.

எனினும் யூதர்கட்கான தாயகத்தை அவர்கள் எப்போதோ விட்டுச் சென்ற மண்ணிலே நிறுவதற்காக, ஸியோனிஸவாதிகள் எனப்படும் யூத இனவாதிகள் பயங்கரவாத அமைப்புக்களைக் கொண்டு அராபியர்களை வன்முறை மூலம் விரட்டத் தொடங்கினர். முடிவில், ஐ.நா சபையின் ஆசிகளுடன் 1948இல் இஸ்ரேல் நிறுவப்பட்டது. அதன் பின்பும் அராபியரை விரட்டுவதும் பலஸ்தீனத்தில் ஆக்கிரமிப்பையும் திட்டமிட்ட குடியேற்றங்களையும் மேற்கொள்வதும் தொடர்ந்தது.

இஸ்ரேல் உருவானதிலிருந்து இஸ்ரேலிய அரசு இரண்டு முக்கியமான காரியங்களைச் செய்தது. ஒன்று யூத இனவெறியை வளர்த்துப் பலஸ்தீன மண்ணின் வளமான பகுதிகள் அனைத்தையும் அராபியரிடமிருந்து பறிக்கிற ஆக்கிரமிப்பும் திட்டமிட்ட வன்முறை

## அபாயம் தரும் ஒப்பீட்டு முயற்சி!

யுமாகும். மற்றது மத்திய கிழக்கில் அமெரிக்காவின் ஆதிக்கத்தின் காவலரணாக இஸ்ரேல் கடந்த அரை நூற்றாண்டுகளாக இயங்கி வந்துள்ளது.

இஸ்ரேல் கடந்த அறுபதாண்டுகளாகப் பலஸ்தீன மக்களுக்கு எதிராக இழைத்து வந்துள்ள கொடுமைகள் விரிவாக ஆவணப் படுத்தப் பட்டுள்ளன. பலஸ்தீன மக்களுடைய எழுச்சியின் விளைவாக அவர்களது விடுதலை இயக்கமான பலஸ்தீன விடுதலை இயக்கம் 1974இல் ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்டது. எனினும் பலஸ்தீன மக்களால் இன்னமும் பறிக்கப்பட்ட தமது மண்ணுக்கு மீற இயலாதுள்ளது. அதற்கான காரணம் இஸ்ரேலின் அரச இயந்திரத்தின் வலிமையும் பலஸ்தீன மக்களின் ஒற்றுமையின்மையும் அரபு நாடுகட்கு இடையிலான பகைமைகளும் என்று சிலர் விளக்க முற்படுகின்றனர். ஆனால் அத்தனைக்கும் ஆதாரமாக இருப்பது அமெரிக்கா என்கிற பெரு வல்லரசு இஸ்ரேலுக்கு வழங்கிவந்துள்ள நிபந்தனையற்ற ஆதரவேயாகும். அமெரிக்காவின் பொருளாதார, இராணுவ உதவியின்றி இஸ்ரேலால் நிலைக்க முடியாது. சர்வதேச அரங்கில் இஸ்ரேலை உலக நாடுகள் புறக்கணிக்காமலும் தண்டிக்காமலும் இருப்பதற்கும் அமெரிக்காவின் ஆதரவு முக்கியமானது. இந்த உண்மைகளை மனதிற் கொள்ளும் எவருக்கும் இஸ்ரேல் என்கிற நாட்டுடனும் யூத இனத்துடனும் இலங்கைத் தமிழரின் நிலையைப் பொருத்திப் பார்ப்பது எத்துணை அபத்தமானது என்று விளங்கும்.

தொடரும்

# ஆள் அமைப்பு ஆளுமை 6

# அரசியற் கட்சியும் உறுப்பினர்களும்

சி.சிவசேகரம்

**பொது அமைப்புக்களிற்** தொழில் சாராதவையாயும் அரசினின்று சுயாதீனமானவையாயும் மனிதர் சுயவிருப்பின் அடிப்படையிலேயே இணைவனவாயும் உள்ளவற்றில் அரசியற் கட்சிகள் முக்கியமானவை: அரசியற் கட்சிகள் குறிப்பிட்ட சமூக நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை. அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வேலைத் திட்டங்களை உடையவை. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான நிறுவன ஒழுங்கு விதிகளையுங் கட்டுப்பாடுகளையும் உடையவை.

எந்த ஒரு அமைப்பையுஞ் செவ்வனே நடத்தக் குறைந்தபட்ச நடத்தை விதிகளுங் கட்டுப்பாடுகளுந் தேவை. அவ்வாறில்லாத போது, ஒரு அமைப்பு உட் பூசல்களால் எளிதாக உடையவும் தெளிவான நோக்கின்றித் திசைகெட்டுத் திரியவும் காலப்போக்கிற் சீரழிந்து சிதையவும் நேரலாம். அரசியற் கட்சிகள் நோக்கங்களில் வேறுபடுகின்றன. நடைமுறைகளில் வேறுபடுகின்றன. நிறுவன அமைப்புக்களின் தன்மைகளில் வேறுபடுகின்றன. எனினும், அவை சீராக இயங்கப், பொதுவான சில நடத்தை விதிகள் உள்ளன. ஒரு கட்சிக்குள் அவை மீறப்படும் போதும் மீறல்கள் விசாரிக்கப்பட்டுத் தவறுகள் திருத்தப்படாத போதும் உறுப்பினர்கள் நம்பிக்கை இழக்கின்றனர். பொது மக்களிடையே அக் கட்சி பற்றிய நம்பிக்கை தளருகிறது. அதனாற் பயனுள்ள முறைகளில் இயங்க இயலாது போகிறது.

எவ்வாறாயினும், அரசியற் கட்சிகளின் விதிமுறைகள் பலவும் கட்சிகள் யாருடைய நலன்களை முன்னிறுத்திச் செயற்படுகின்றன என்பதிலே தங்கியுள்ளன. அவற்றின் நடைமுறைப் படுத்தலில் ஒரு கட்சி எவரதும் எவ்வகையானதுமான நலன்களை முதன்மைப் படுத்துகிறது என்பது தீர்மானமான ஒரு பங்கை வகிக்கிறது.

கம்யூனிஸ்ற் கட்சி ஒன்றில் ஒருவர் உறுப்பினராவதற்கு முன்னர் அவர் கட்சியில் உறுப்பினராக ஏற்றவரா என்பது கவனமாக விசாரிக்கப் படுகிறது. அவரது சமூக நடத்தையும் சக மனிதர் பற்றிய பார்வையுங் கணிப்பில் எடுக்கப் படுகின்றன. கட்சியின் கொள்கைகளில் அவருடைய உடன்பாடு பற்றி விசாரிக்கப் படுகிறது. ஒருவர் கம்யூனிஸ்ற் கட்சியொன்றில் இணைவதற்கு முன்னர் கட்சியின் வெகுசன அமைப்புக்களில் ஒன்றில் இணைந்து செயற்படுமாறு ஊக்குவிக்கப் படுகிறார். உறுப்புரிமை முதலில் நிபந்தனைக்குட்பட்டதாக இருந்து பின்னர் முழு உறுப்புரிமை ஆகிறது. இவை யாவும் தெளிவாக வரையறுக்கப்பட்ட வழிகாட்டல்கட்கும் விதிமுறைகட்கும் உட்பட்டே நடக்கின்றன. கம்யூனிஸ்ற் கட்சிகள் தொழிலாளி வர்க்கத் தலைமைமை வலியுறுத்துவதனால் ஒருவரது வர்க்கப் பின்னணிக்கு முக்கியத்துவம் உள்ளது. தொழிலாளர், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் மத்தியிலிருந்து வருவோருக்கு முன்னுரிமை உள்ளது.

ஒரு கம்யூனிஸ்ற் கட்சியில் இணைவது எவ்வளவு கவனமான கவனிப்பிற்கும் ஆலோசனைக்கும் உட்பட்டதோ அவ்வாறே ஒரு உறுப்பினர் தவறாகவும் கட்சிக்கோ கட்சியின் நோக்கங்கட்கோ தீங்காகவும் நடந்து கொள்ளுகிற போது, அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதும் பலவாறான விசாரணைகட்குப் பின் சம்பந்தப்பட்ட உறுப்பினர் தனது நடத்தையை விளக்க வாய்ப்பளித்துத் தவறு செய்திருப்பின் அதைத் திருத்த வாய்ப்பளித்துக் கட்சியும் உறுப்பினரும் விமர்சனத்திற்கும் சுய விமானத்திற்கும் தம்மை உட்படுத்தக் கூடிய ஒரு சூழலிலேயே முடிவுகள் எடுக்கப் படுகின்றன.

இவ்வாறான கட்டுப்பாடு கம்யூனிஸ்ற் அல்லாத சில இயக்கங்களில் இருக்கக் காணலாம். குறுகிய தேசியவாத, மதவாதத் தீவிர அமைப்புக்களில் உள்ள கட்டுப்பாடு அவற்றைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க உதவுகிறது. ஆனாற் கம்யூனிற் கட்சிகளுடன் அவை முக்கியமான சில வழிகளில் வேறுபடுகின்றன. விமர்சனம்-சுயவிமர்சனம் என்பது குறுகிய தேசியவாத, மதவாத அமைப்புக்களில் இல்லை. உட் கட்சிச் சனநாயகமும் மத்தியத்துவமும் அவற்றில் இல்லை. கம்யூனிஸ்ற் கட்சிகள் கட்சியின் முடிவுகளைச் சுயேச்சையாக உறுப்பினர் எவரும் மீறுவதை ஏற்பதில்லை. ஆனால் எந்த முடிவையும் சனநாயகமான முறையில் விவாதிக்கவும் மீளாயவும் தேவையானாற் திருத்தவும் ஒரு கம்யூனிஸ்ற் கட்சி ஆயத்தமாக உள்ளமை, அதனைப் பிற அரசியற் கட்சிகள் அனைத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிற ஒரு பண்பாகும். ஒவ்வொரு அரசியற் கட்சியிலும் சேருகிறவர்கள் மட்டுமில்லாமல் அனுதாபிகளாகவும் ஆதரவாளர்களாகவும் உள்ளவர்களும் அக் கட்சியின் நடத்தை விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் வெவ்வேறு அளவுகளில் உள்வாங்கிக் கொள்ளுகின்றனர். அதனாலேயே ஒரு நல்ல கம்யூனிஸ்ற் கட்சியின் ஆதரவாளரால் ஒரு நல்ல சனநாயகவாதியாகவும் இருக்க இயலுமாகிறது. மாறாகச் சர்வாதிகாரத் தலைமைகளையும் குறுகிய சமூக இலக்குக்களையுங் கொண்ட கட்சிகளை நெருங்குவோர் அவ்வாறான பண்புகளைத் தாமும் உள்வாங்கிக் கொள்ள நேரிடுகிறது.

> ஒரு நேர்மையான கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பும் செயற்பாடும் ஏனைய அரசியல் கட்சியையில் இருந்து வேறுபட்டதாகும் ஏனெனில் அதன் உறுப்பினர்கள் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் வர்க்கங்களில் இருந்தே மிகக் கவனமாக உள் வாங்கப்படுகின்றனர்.

பாராளுமன்ற அரசியற் கட்சிகளிற் சில கட்டுக்கோப்பாக இயங்குகின்றன. சில மிகவும் ஒழுங்கீனமாக இருக்கின்றன. உட் கட்சிச் சனநாயகம் என்பது இன்றைய பாராளுமன்ற அரசியற் கட்சிகளில் மிகவுங் குறைபாடான ஒன்றாகவே இருந்து வருகிறது. கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களுங் கட்சியின் வலிமையையும் வளர்ச்சியையும் செல்வாக்கையும் தேர்தல் முடிவுகளை வைத்தே கணிப்பிடுகின்றனர். அக் கட்சிக்குப் பொருளுதவி செய்கிற பெரும் புள்ளிகளும் தேர்தல்களில் ஓடியாடி வாக்குச் சேகரிக்கிற தனி மனிதர்களும் தேர்தல் வெற்றிகளை நம்பியே பணத்தையும் உழைப்பையும் முதலிடுகின்றனர். அதன் காரணமாகக் கொள்கைகள் என்பவற்றைத் தேர்தல்களை வெல்லுவதற்கான உபாயங்களாகவே அவை கருதுகின்றன. அதன் விளைவுகளை நாம் பல்வேறு வடிவங்களில் இன்று காணுகின்றோம்.

சந்தர்ப்பவாதக் கூட்டணிகள், கட்சி ஒழுங்குகளை மீறிநடத்தல், கட்சி தாவுதல், தேர்தலுக்குத் தேர்தல் மாறுகிற கொள்கைகள், பொய் வாக்குறுதிகள் போன்ற அனைத்துமே பாராளுமன்ற அரசியற் சீர்குலைவு ஒவ்வொரு கட்சியிலும் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் தாம். பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளிலும் மேற்கூறிய விதமான போக்குக்கள் இருப்பதை நாம் அறிவோம். எனினும் பிற கட்சிகளை விடச் சற்றுக் குறைவாகவே இவ்வாறான அரசியல் நடத்தைப் பிறழ்வு இருக்கக் காரணம், இக் கட்சிகளில் இன்னமும் அவை சீரழிய முன்னம் இருந்த சில ஸ்தாபனக் கட்டுப்பாடுகளும் நடத்தை விதிகளும் ஓரளவுக்கேனும் பேணப்படுவதாகும்.

ஒரு அரசியற் கட்சி என்பது ஒரு கூட்டு நிறுவனம். அது பொதுவான சில நோக்கங்களைக் கொண்டவர்களது அமைப்பு. அதனால் அதன் பேரால் அதன் பிரதான உறுப்பினர் எவருங் கூறுகிற கருத்துக்கள் அக் கட்சியின் கருத்துக்களாகவே கொள்ளப்படும். அவை கட்சியின் ஏற்கப்பட்ட கருத்துக்களாகவோ கட்சியின் பொதுவான கொள்கைகட்கு உடன்பாடாவோ இல்லாத போது, அக் கருத்துக்கள் கட்சியின் மீது உறுப்பினர்களும் மக்களும் கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஊறு விளைவிக்கின்றன. எனவே ஒரு பொறுப்புள்ள உறுப்பினர் தன் மனதிற்கு வந்த கருத்துக்களைத் தெரிவிப்பது பற்றி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அக் கருத்துக்கள் முக்கியமான விடயங்கள் பற்றியவையாய் இருப்பின் கட்சியில் உள்ள மற்ற நண்பர்களுடன் அவற்றைப் பற்றி உரையாடிய பிறகு பகிரங்கமாகப் பேசுவாரானாற் தனக்கும் தனது கட்சிக்கும் வீணான மதிப்பிறக்கத்திற்கு இடமளிக்க மாட்டார்.

தமது முக்கியத்துவத்தை ஊரறியச் செய்வதற்காகப் பொது இடங்களிலும், பத்திரிகையாளர்கள் முன்னிலையிலும் வாயில் வந்தபடி பேசுகிறவர்கள் உள்ளனர். சிலர் தமது படமும் கருத்துக்களும் வெளிவர வேண்டி அதிரடியான கருத்துக்களைக் கூறுவதுண்டு. சிலர் சுய விளம்பரத்துக்காகப் பத்திரிகையாளர்களைத் தங்கள் கைக்குட் போட்டுக் கொள்ளப் பல உபாயங்களை மேற்கொள்கிறார்கள்.

இவ்வாறானவர்கள் சுய விளம்பரம், புகழ் நாட்டம், போட்டி பொறாமைகள், போன்ற பலவாறான தவறான காரணங்கட்காக மேற்கூறிய விதமாக நடந்து கொள்கின்றனர் என்பதே பெரும்பாலும் உண்மை. எனினும், தமது நடத்தை கேள்விக்கு உட்படுத்தப்படுகிற போது அதைக் கருத்துச் சுதந்திரம் என்றும் தாம் சொன்னதே சரி என்றும் பிடிவாதம் பிடிப்பார்கள். கட்டுப்பாடற்றுப் போகிற கட்சிகளில் இவ்வாறு உளறித் திரிவோரின் தொகை அதிகமாக இருக்கும். சந்தர்ப்பவாதக் கூட்டணிகளில் வெவ்வேறு அணிகளிடையிலான முரண்பாடுகளும் மேற்கூறிய விதமான பொறுப்பற்ற கருத்துக்களாக வெளிப்படும்.

இதை ஒரு அமைப்பின் கட்டுப்பாட்டுக்கும் தனிமனிதச் சுதந்திரத்திற்கும் இடையிலான முரண்பாடெனக் காணுகிறவர்கள் அரசியற் கட்சிகள் சுதந்திரமான சிந்தனையையும் கருத்து வெளிப்பாட்டையும் ஒடுக்குகின்றன என்று வாதிப்பதுண்டு. ஆனால் உண்மை வேறு விதமானது. ஸ்தாபனக் கட்டுப்பாடும் ஒழுங்கும் தனிமனிதரது சிந்தனையையும் கருத்துக் கூறுஞ் சுதந்திரத்தையும் மறுப்பதற்கு மாறாக அவற்றைச் சமூகப் பயனுள்ள முறையில் நெறிப் படுத்துகின்றன.

# வடக்கின் வசந்தம் கிழக்கின் உதயம் ?

இவ்விரண்டு அழகான பெயர்களும் மகிந்த சிந்தனை அரசாங்கத்தால் புனையப்பட்ட பெயர்களாகும். இராணுவ நடவடிக்கையின் கடுமையான யுத்த முனைப்புக் காட்டி விடுவிக்கப்பட்ட இவ்விரு பிரதேசங்களும் தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாகும். இத்தகைய இரு பிரதேசங்களிலும் யுத்தத்திற்கு பின்பான அபிவிருத்தியெனக் காட்டுவதற்கே வடக்கே வசந்தமும் கிழக்கே உதயமும் என்ற பிரசாரம் அரசாங்க ஊடகங்களிற் பரப்பட்டு வருகிறது. இதன் மூலம் வடக்கும் கிழக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு உட்பட்ட பிரதேசங்கள் என்பது மறைக்கப் படுகிறது. அதன் மூலம் தேசிய இனப் பிரச்சினை என்பது இராணுவத் தீர்வின் மூலம் வந்துவிட்டதாகவே காட்டப்படுகிறது.

வடக்கு இப்போது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி விட்டது என்றும் அதனாலேயே அங்கு இரண்டு தேர்தல்கள் நடாத்தப் பட்டுள்ளன என்றுங் கூறிக் கொள்ளப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக நல்லூர்த் திருவிழாவையும் சன்னிதி முருகன் ஆலய உற்சவங்களையும் காட்டி மக்கள் சுதந்திரமாகவும் சந்தோச மாகவும் திரண்டு இருப்பதாக காட்டி நிற்கிறார்கள்.



அதே வேளை முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் 3 இலட்சம் வரையான மக்கள் தடுத்து வைத்து அவலங்களுக்கு உள்ளாக்கப்படுவது பெருமளவுக்கு மறைக்கப்படுகிறது. இந்த அவலங்களுக்கு உள்ளான மக்களின் நிலை பற்றிய அக்கறைகள் குறைந்து பழங்கதையாகி வருகிறது. அங்கு ஊடகங்கள் தொடக்கம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரை செல்ல முடியாதவாறான தடை இறுக்கமாகவே உள்ளது. முகாங்களில் ஒரு சில இடங்களை மட்டும் திரும்பத் திரும்பத் தொலைக்காட்சிகளில் வெளிக்காட்டி அவ்வாறே அனைத்து முகாங்களும் இருப்பதாக பிரச்சாரம் செய்யப்படுகிறது. அவ்வாறு சகல முகாம் மக்களும் சகல வசதிகளோடும் இருப்பின் அவர்களைச் சென்று பார்க்கவோ பேசவோ ஏன் ஊடகங்களுக்குத் தடை விதிக்க வேண்டும்? எதிர்க்கட்சியினரை தாராளமாக அனுமதிக்கலாம் அல்லவா!

வவுனியா இன்று அகதி முகாங்களால் நிரம்பி வழியும் நகரமாகக் காட்சி தருகிறது. இம் மூன்று இலட்சம் மக்களின் பேரால் மேல் மட்டங்களில் இருந்து கீழ் மட்டங்கள் வரை யாவும் வியாபாரம் ஆக்கப்பட்டு யாவும் மறைக்கப்பட்டு வருகின்றன. பெரும் வியாபாரம் நிறுவனம் தொடக்கம் வீதி வியாபாரம் வரை ஓகோ என்று நடைபெற்று வருகிறது. முகாங்களில் இருக்கும் மக்களுக்கு வழங்கப்படும் உணவிலிருந்து உடுபுடவை பெறுவது வரை சகலதிலும் தரகுப்பணமும் இலாபப் பணமும் கறக்கப்படுகின்றன. இருப்பினும் உணவு உடை கல்வி சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை தேவைகள் யாவற்றினும் ஊடாக முகாம்களில் இருந்து லாபம் பெறவே சகலரும் முயல்கின்றனர். அரசாங்க அதிகாரிகள் தொடக்கம் தனியார்கள் வரை, ''இதன் மூலம் எவ்வளவு கிடைக்கும்'' என்ற எதிர்பார்ப்புடனேயே அகதி முகாங்களுக்கு உள்ளும் வெளியிலும் விடயங்கள் இடம்பெறுகின்றன. மீள்குடியேற்றம் பிற்போடப்படும் ஒவ்வொரு நாளும் இப் பணம் கொத்திச் செல்லும் வல்லூறுகளுக்கே வாய்ப்பாகும்.

வன்னி மக்களின் அவல நீடிக்கும் அதேவேளை குடாநாட்டு மக்களின் நிலை திறந்த வெளிச் சிறைச்சாலை போன்றதேயாகும். ஜனநாயகம் சுதந்திரம் யாவும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளன. உணவிற்கும் வீட்டினுள் தாழ்ந்த குரலில் பேச மட்டுமே அங்கு சுதந்திரம் இருக்கிறது. விரும்பினால் தேவாரமும் திருவாசகமுமோ அன்றிக் கர்த்தரை வேண்டும் ஆராதனைகளையோ மட்டும் சத்தமிட்டு வெளிப்படுத்தலாம். அதனால் தான் திருவிழாக்களில் பெருந் தொகையிற் கலந்து கொண்டு சற்றுச் சத்தத்துடன் வாய் விட்டுப் பேசுகிறார்கள். வாய் திறந்து அரோகரா என்றும் ஆண்டவரே என்றும் கூறுவதன் மூலம் ஏதோ ஒருவகையில் நிம்மதி கொள்கிறார்கள். ஏனையவற்றுக்கு வாய்ப்பூட்டுத்தான். என்று மாறும் இந்த நிலை என்ற ஏக்கமே மக்கள் மத்தியில் காணப்படுகிறது. பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் பல தடவைகள் தாக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் கொல்லப்பட்டும் கடத்தப்பட்டும் போனதாற், பத்திரிகைகள் சுயதணிக்கை செய்வதைவிட வேறு வழியில்லை என்ற நிலையிலேயே வெளிவருகின்றன.

வடக்கிலிருந்து தெற்கு நோக்கி புகையிரதம் ஓடப்போகின்ற தென்றும் ஏ 9 பாதை திறக்கப்பட்டு பயணிகள் சுதந்திரமாக பயணிக்கப் போகின்றார்கள் என்றும் தடல்புடல் பிரச்சாரம் போகிறதே தவிர நடைமுறையில் அவற்றை காணமுடியவில்லை. கட்டுப்பாடுகளுடன் கூடிய அனுமதி பெற்ற பயணம் தான் தொடரப்படுகிறது. ஏ 9 பாதையால் பஸ் பயணம் என்பது விநோதமான முறையிலேயே இருந்து வருகிறது. இ.போ.ச பஸ்கள் வவுனியா வரை ஒரு தொகுதியாகவும் அங்கிருந்து கொழும்புவரை மற்றொரு தொகுதியாகவும் மக்கள் பொருட்களைப் போன்று மாற்றி மாற்றி ஏற்றப்படுகிறார்கள். இதைவிட சொகுசு பஸ் மூலம் 2400 ரூபா செலுத்தி நேரடியாக கொழும்பு வரை பயணிக்க முடியும். புலிகளின் கட்டுப்பாடு இருந்த காலத்தில் இருந்த பல நடைமுறைகள், பண வசூ லிப்புக்கள் போன்று உலைச்சங்கள் இப்போதும் இடம் பெறுகிறது என்றே கூறு வேண்டியுள்ளது. துப்பாக்கிகள் யாருடையு கையில் கெட்டியாக இருக்கிறதோ அங்கெல்லாம் அதிகாரம் மக்கள் சார்பாக இருக்க மாட்டாது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அது தான் இப்போதும் வடக்கில் இடம்பெறுகிறது.

நிற்க. கிழக்கின் உதயத்தின் கீழ் வீதிகள் பாலங்கள் கட்டடங்கள் ஆங்காங்கே நிர்மாணிக்கப்படுவது ஏதோ உண்மைதான். அவற்றால் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் மறுக்கக் கூடாது. ஆனால் அங்கு அபிவிருத்தி என்பது எந்தளவுக்கு மக்களுக்கானதாகவும் மக்கள் பங்குபற்றுவதாகும் இருக்கிறது என்பதே முக்கியமானதாகும். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்ப திருகோணமலை, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்கள் உள்ளடங்குகின்றன. அங்கு மாகாண சபையும் மாநகர சபைகளும் நகர சபைகளும் பிரதேச சபைகளும் இயங்குகின்றன. அவை யாவும் அதிகாரத்தின் அடையாளங்களாக இருக்கின்றனவே தவிர மக்களின் அபிவிருத்திக்கு எவ்வாறு உதவி ஒத்துழைப்பாக உள்ளன என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

இவ்வாறு மக்களின் வாழ்வும் சுபீட்சமும் எதிர்காலமும் பல்வேறு கேள்விகளுடன் இருந்தும் வரும் அதேவேளை உள்நாட்டு வெளி நாட்டு முதலீட்டுக் கழுகுகளின் கண்களின் பார்வை கிழக்கே பதிந்து வருகிறது. குறிப்பாக விவசாயம் உல்லாசப் பயணத்துறை ஆகிய இரண்டுக்குமான நிலங்களைப் பெற்றுக் கொள்ள உள்நாட்டு வெளிநாட்டு கம்பனிகள் முந்தியடித்து நிற்கின்றன. கிழக்கு மாகாணத்தில் 54,551 ஹெக்ற்யர் நிலம் மத்திய அரசின் கீழ் உள்ளது. அதேபோன்று மாகாணசபையின் கீழ் 76,666 ஹெக்ற்யர் நிலம் உள்ளது. இவ்விருவகை மொத்த நிலத்தில் 620.07 ஹெக்ற்யர் தனியார் வர்த்தக நடவடிக்கைகளுக்குக் கீழ் உள்ளன. 148.7 ஹெக்ற்யர் நிலம் தனியார் நிறுவனங்களுக்கு உள் என. இவற்றில் நீர், நில வளம் மிக்க நிலங்கள் பெரியளவிலான விவ சாய முயற்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. கொழும்பைத் தளமாக கொண்ட ஒரு கம்பனி அம்பாறை மாவட்டத்தில் 400 ஏக்கர் நிலத்தைச் சோளப் பயிர்ச்செய்கை க்குத் தரும்படி கேட்டு ள்ளது. இதுபோன்று மற்றொரு கம்பனி வாழைப்பழச் செய்கைக்கு 400 ஏக்கர் தரும்படி மனுச்செய்துள்ளது. அதே வேளை, திருகோணமலைக்கு வடக்கே குச்சவெளிப் பகுதியில் உல்லாசப் பயணத்துறைக்காகச் சில கம்பனிகளும் தனிநபர்களுமாக 34 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவை மக்களுக்குரிய அபிவிருத்திகளுக்கல்ல. நிலம் நீர் கடற்கரைவளப் பகுதிகளில் மூலதனமிட்டு சுரண்டிச் செல்லுவதற்கே யாகும். இவற்றுக்கு அப்பால் இந்தியாவின் அனல் மின்நிலையம் சம்பூரில் அமையவுள்ளமை ஏற்கனவே தெரிந்ததாகும்.



இவற்றின் மத்தியில் கிழக்கின் உதயமானது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திற்கான உள்ளக முயற்சிகள் இடம்பெற்று வருவதாக கூறப்படுகின்றன. அதனை ஊக்குவிப்பதில் ஜாதிக கெல உறுமய, ஜே.வி.பி ஆகியவற்றின் கீழ் அமைப்புக்கள் கச்சிதமாகச் செயலாற்றி வருவதாகவும் கூறப்படுகிறது. ஏற்கனவே தீகவாவி ஒரு புனிதப் பிரதேசம் என்ற பிரகடனத்தின் பெயரில் அப் பிரதேசத்திற் திட்டமிட்டதும் அத்துமீறியதுமான சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றமை நினைவுக்குரியதாகும். இப்போது முஸ்லிம், தமிழ் மக்களது பாரம்பரியக் காணிகள் அத்துமீறி அபகரிக்கப்படு வதாகப் புகார்கள் அம்பாறை மாவட்டத்திலிருந்து வந்து கொண்டே இருக்கின்றன. அதே போன்று திருகோணமலை மாவட்டத்திலும் இடம்பெறுகின்றது. இவ்விரு மாவட்டங்களிலும் அரச அதிபர்களாக உள்ளவர்கள் சிங்கள உயர் அதிகாரிகளாகவே உள்ளனர். அதே போன்று கிழக்கின் ஆளுனரும் முன்னாள் படை அதிகாரியே. அண்மையில் மாகாணசபை விடயத்தில் ஆளுனர் வரம்பு மீறிச் செயற்படுகிறார் என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

எவ்வளவுக்கு சமாதானம் இன ஐக்கியம் என்று விளம்பரம் செய்யப்பட்டாலும், வடக்குக்-கிழக்கில் பேரினவாத உள்நோக்கங்களோடு தான் யாவும் முன்னெடுக்கப்படுகின்றன. எவ்வளவுக்கு மறைத்தாலும் அதன் உள்ளடக்கம் தவிர்க்க இயலாது வெளிவரவே செய்கிறது. இதனை நான் குறுகிய இனவாத அடிப்படையிற் கூறவில்லை. இடம்பெறும் பேரினவாத நடைமுறைகளையும் அவற்றின் உள்நோக்கங்களையும் வெளிப்படுத்துவது அவசியம். ஏனெனில் அத்தகைய நடவடிக்கைகளே இன ஐக்கியத்தைச் சீர்குலைத்து ஒடுக்குமுறையை நிலைநாட்டி வருவனவாகும். இவை சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களைப் பிரித்துக் குரோதங்களாக வளரவைத்து இறுதியில் மோத வைப்பனவாகும்.

ஆகவே வடக்கின் வசந்தமும் கிழக்கின் உதயமும் பல்வேறு கேள்விகளையும் சந்தேகங்களையும் , எழுப்பி நிற்கின்றன. வடக்குக் கிழக்கிற்கான உரிய அரசியல் தீர்வு அரசியல் அமைப்பு ரீதியில் உறுதிப்படுத்துவதே அங்கு சமாதானம், இயல்பு வாழ்க்கை, ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை என்பவற்றுக்கான அடிப்படை உத்தரவாதமாக அமைய முடியும்.

- வடபுலத்தான் -

# கண்டதும் கேட்டதும்

செய்திக் கோப்பு

செங்குருவி

## ● ஜே.வி.பி அன்றும் இன்றும்

ஜே.வி.பி. சார்பான ''லங்கா'' பத்திரிகையின் மூன்று பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டுப் பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிசாரால் (T.I.D.) தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது விசாரணை தொடரப் படுவதாகவும் அறிய முடிகிறது. இது பற்றி பத்திரிகையாளர்களும் ஊடகங்களும் குரல் கொடுக்க வேண்டும் என ஜே.வி.பி. வேண்டுகோள் விடுத்துள்ளது. அதில் நியாயம் இருக்கலாம். ஆனாற் கடந்த காலங்களில் வடக்குக் கிழக்கிலும் தெற்கிலும் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட வேளையிலும் தடுத்து வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும் ஆட்கடத்தல்களின் போதும் ஜே.வி.பி. பாதிக்கப்பட்டவர்க்கு அனுதாபமின்றியே நடந்து கொண்டதை நினைவூட்டாமல் இருக்க முடியாது அன்று மௌனம் இன்று அலநாலா?

## ● இப்படியும் ஒரு வியாபாரம்

வவுனியா முட்கம்பி வேலிகளுக்கு பின்னால் இருந்து வருவோர் மத்தியில் வெளி நாட்டுத் தொடர்புள்ள சிலரை வெளியே கொண்டு வருவதற்கும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கவும் ஒரு சில தரகர்களும் தம்பிரான்களும் இருக்கின்றார்களாம். ஒரு இலட்சத்தில் இருந்து ஏழு இலட்சம் வரை இதற்கான கட்டணம் விலைபோவதாகச் செய்திகள் கசிகின்றன. சில உயர் பாதுகாப்பு அதிகாரிகள் தொட்டு இயக்கங்களின் உறுப்பினர்கள் வரை இவற்றில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் பேசப்படுகிறது. மூன்று இலட்சம் மக்களை வைத்து செய்யப்படும் வியாபாரங்களில் இதுவும் ஒன்றாகும். எதிலும் பணம் பண்ணலே முன்நிற்கிறது.

## ● பயணம்

மேல்மாகாண சபையின் 101 உறுப்பினர்கள் குழுக்குழுவாக சீனநாட்டுக்கு உல்லாசப் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இதற்குப் பெயர் பயிற்சிக்கான பயணம் என்பதாகும். இதற்கான முழுப் பயணச் செலவும் மேல்மாகாண சபைக்குரியதாகும். அதன் தொகை அதாவது மூன்று கோடி ரூபாய்கள் ஆகும். இது யாருடைய பணம் என்பதே கேட்கப்படவேண்டிய கேள்வி. இந்தப் பயணத்தில் அரசாங்க எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் பங்குகொள்கின்றனர். ஜே.வி.பி. உறுப்பினர்கள் மட்டும் இதனைப் புறக்கணித்துள்ளனர். இம் மேல்மாகாண சபை 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைவானது என்பதும் அப்படியொரு முறைமை இல்லாத சீன நாட்டில் எதற்கு பயிற்சி பெற மாகாண சபை உறுப்பினர்கள் சென்றுள்ளனர். எல்லாம் அனுப்பியவர்களுக்கேயாகும். இதில் ஆளும் கட்சிகள் எதிர்க்கட்சிகள் இரண்டும் எவ்வித முரண்பாடும் கிடையாது.

## ● வெற்றியோ தோல்வியோ

வடக்கின் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கு வெற்றிகிடைத்திருப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெருமிதப்படுகிறது. அப்படியாயின் வாக்களிக்காத 80 வீதமான மக்கள் தமிழ்த்தேசியத்தின் மீது அதிருப்தியும் கண்டனமும் கொண்டிருப்பார்கள் என்பதை கூட்டமைப்பினர் ஏற்றுக் கொள்வார்களா?

## ● அமைச்சரின் அதிருப்தி

நடந்து முடிந்த வடக்கின் யாழ்மாநகர சபைத் வவுனியா நகரசபைத் தேர்தல்களின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்ட சமூகசேவை அமைச்சர் தலைமையிலான ஈ.பி.டி.பி கட்சியினர் எதிர்பார்த்தளவுக்கு வெற்றிபெறவில்லை. இது பற்றி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளமை கவனத்திற்குரியவை. எவ்வளவு தான் சலுகைகள் வழங்கியபோதிலும் தமிழ் மக்கள் தமக்குரிய அரசியல் தீர்வு கிடைக்காத வரை அரசாங்கப் பக்கமோ அல்லது அரசாங்க ஆதரவு தருபவர்களுக்கோ வாக்களிப்பதில் முன்நிற்க மாட்டார்கள் என்பதே யதார்த்தம். இதனை அமைச்சர் உணர்ந்திருப்பது அவரது அறிக்கையில் காண முடிகிறது. எப்படியாகினும் தமிழ் மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டால் போதும்.

## ● காதில் பூச்சுற்றும் அமைச்சர்

இலங்கைக்கு இந்தியா ஆயுதங்கள் வழங்கியது உண்மையே ஆனால் அவ்வாயுதங்கள் தங்களது தற்பாதுகாப்பிற்கேயன்றி தமிழர்களை கொன்றழிக்கவல்ல. இவ்வாறு இந்தியாவின் பாதுகாப்பு இணையமைச்சர் கூறியுள்ளார். அப்படியாயின் இந்தியா வழங்கிய ஆயுதங்களுக்குள் குண்டுகளோ, வெடிமருந்துகளோ இருக்கவில்லை என்று கூறுவாரா இவ்வமைச்சர். இது யாருடைய காதுகளில் பூச்சுற்றும் முயற்சி.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



## உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

# எனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழையாக வேண்டும்

அண்மையில் நேபாளம் குறித்த இரண்டு செய்திகள் என் கவனத்தை ஈர்த்தன. அதிலும் குறிப்பாக அச்செய்திகளுக்கு தமிழ்ப்பத்திரிகைகளும் தமிழ் இணையத்தளங்களும் கொடுத்த முக்கியத்துவம் அச்செய்திகள் என் கவனத்தை ஈர்க்க முக்கிய காரணம். முதலாவது செய்தி நேபாள மாவோவாதிகளின் தலைவர் பிரசண்டா மாவோவாதிகள் தொடர்ந்தும் ஏனைய மாவோவாத இயக்கங்களுடன் தொடர்புகளைப் பேணுவார்கள் என்றும் இலங்கையிலும் நேபாளத்திலும் இந்தியாவின் தலையீடு கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்திருந்தார். இச்செய்தி தமிழ் ஊடகங்களில் வேறொரு தொனியில் சொல்லப்பட்டது. உண்மையில் செய்தி திரித்துத்தான் சொல்லப்பட்டது. அவை விடுதலைப்புலிகளுடன் மாவோவாதிகள் தொடர்புகளைப் பேணுவார்கள் என்றவாறும் விடுதலைப்புலிகளுக்கு மாவோவாதிகள் உதவிகளைச் செய்வார்கள் என்ற தொனியிலும் செய்தி முக்கியத்துவப்படுத்தப்பட்டு இருந்தது. அதேவேளை பிரசண்டா இந்தியாவின் தலையீட்டை கண்டித்திருந்தது அதன் முக்கியத்துவத்தை இழந்திருந்தது. இவை அறியாமல் விடப்பட்ட பிழைகள் அல்ல. திட்டமிட்ட செய்தித் திரிப்பின் விளைவிலானவை. எந்தவொரு செய்தியையும் தங்களுக்கு வாய்ப்பானதாக மாற்றி மக்களை அறிவூட்டாமல் தடுக்கின்ற காரியத்தை தமிழ் ஊடகங்கள் தொடர்ந்து செய்துவந்திருந்தன. இன்றைய அவல நிலைக்கு இவர்களும் பொறுப்புச்சொல்ல வேண்டியவர்கள் என்பதை மறுக்க இயலாது.

குறிப்பாக மேற்சொன்ன செய்தித்திரிப்பு இரண்டு நோக்கங்களை உடையது. முதலாவது அரசியல் வங்குரோத்து நிலையில் மக்களுக்கு பதில் சொல்ல முடியாமல் தனித்துவிடப்பட்டுள்ள தமிழ்த்தேசியவாதிகளுக்கு யாருடைய ஆதரவும் முக்கியமானதே. (அது ஒடுக்குபவனாக இருந்தாலும் அல்லது ஒடுக்கப்படுபவனாக இருந்தாலும் சரி, ஏனெனில் எந்தவொரு கோட்பாட்டு ரீதியான முடிவுகளையும் தமிழ்த்தேசியம் எடுப்பதில்லை. காரணம் அது பிற்போக்கான சுயநலத்தன்மையுடையதாகவே நீண்டகாலமாக இருந்து வருகிறது.) அவ்வகையில் இவர்கள் எதிர்பார்த்த அமெரிக்காவோ, மேற்குலகோ அல்லது இந்தியாவோ உதவிக்கு வராத நிலையில் இவ்வாறான செய்தித்திரிப்பு அவர்களுக்குப் பயனள்ளதே. இரண்டாவது காரணம் தமிழ்த்தேசியவாதம் ஒருபோதும் இந்தியாவை விமர்சிப்பது கிடையாது. இந்தியாவிடம் தவம் கிடந்து "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று இரஞ்சி நிற்பதைத் தவிர வேறெதையும் செய்ய அதனால் முடியாது. எனவே இந்திய மேலாதிக்கம் பற்றியும் இந்தியாவின் தலையீடு பற்றியும் தமிழ் மக்கள் அறிந்து கொள்வது தமிழ்த்தேசியவாதிகளுக்கு நல்லதல்ல. எனவே அவ்வாறான செய்திகள் ஒன்றில் திரிக்கப்படுகின்றன அல்லது தணிக்கை செய்யப்படுகின்றன.

மேற்கு வங்கத்தின் லால்கர் பகுதியில் ஏற்பட்ட மக்கள் எழுச்சியும் அப்பகுதியை மாவோவாதிகள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது பற்றியோ அதனது முக்கியத்துவம் பற்றியோ எதையுமே எழுதாத தமிழ் ஊடகங்கள் லால்கர் பகுதியில் இருந்து மாவோவாதிகள், மக்கள் உயிரிழப்புக்களைத் தவிர்ப்பதற்காக விலகியதை இந்திய இராணுவம் பயங்கரவாதிகளிடமிருந்து லால்கர் பகுதியை மீட்டதாகவும் ஜனநாயகம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டதாகவும் காரணங்கள் கற்பித்து தமது இந்திய விசுவாசத்தை நிலைநிறுத்திக்கொண்டன. லால்கர் மக்களின் எழுச்சி மிகவும் முக்கியமானது. உலகில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் எப்படியெல்லாம் போராடுகிறார்கள் என்பதை தமிழ் மக்கள் அறிந்திருப்பது அவசியம். அவை நல்ல பயனுள்ள பாடங்களாக அமைய முடியும். ஆனால் மக்கள் மேல் நம்பிக்கை வைக்காத தமிழ்த்தேசியவாதமும் தமிழ் ஊடகங்களும் இவ்வாறான செய்திகள் மக்களை சென்றடையக் கூடாது என்பதில் கவனமான இருக்கிறார்கள். ஆனால் மக்கள் விழிப்படைந்து வருகிறார்கள். தமது தலைவிதியை தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களிடம் விட்டுவிடாது தாமே எழுதுவார்கள்.

நேபாளம் குறித்த என் கவனத்தை ஈர்த்த இரண்டாவது செய்தி "விடுதலைப்புலிகளின் கதியே மாவோயிஸ்ட்டுகளுக்கும் ஏற்படும்" என்ற தலைப்பில் முதற் பக்கத்தில் கட்டம் கட்டப்பட்ட முக்கியத்துவம் பெற்றிருந்த செய்தி. நேபாள காங்கிரஸ் தலைவர் கிரிஜா பிரசாத் கொய்ராலா "நேபாள மாவோவாதிகள் எம்முடன் இணைந்து செயற்பட மறுப்பார்களானால் விடுதலைப்புலிகளின் கதியே மாவோயிஸ்ட்டுகளுக்கும் ஏற்படும். எமது சர்வதேச நண்பர்கள் மாவோவாதிகள் பால் கொண்டிருந்த இணக்கப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளார்கள்" என்று சொன்ன செய்திக்கு மிகுந்த முக்கியத்துவத்தை தமிழ் ஊடகங்கள் வழங்கியிருந்தன. இச்செய்திக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால் கொய்ராலா இவ்வாறான ஒரு செய்தியை தானாகவே சொன்னாரா அல்லது எவரோ சொல்லச்சொன்னதை உத்தியோகபூர்வமற்ற பேச்சாளராகச் சொன்னாரா போன்ற கேள்விகளுக்கான விடையைத் தேடுவது பயனுள்ளது. இது பூகோள அரசியலின் போக்கை அறியவும் மக்கள் போராட்டங்களை "சர்வதேச சமூகம்" எவ்வாறு அணுகுகிறது என்பதை புரிந்துகொள்ளவும் உதவும். ஆனால் தமிழ் ஊடகங்கள் இதை விரும்புவதில்லை. அவர்கள் தங்களது மார்க்சிய எதிர்ப்பை காட்டக்கூடிய வழிகளிலெல்லாம் காட்டுகிறார். கட்டம் கட்டப்பட்ட செய்தி இம்மனநிலையின் வெளிப்பாடே. ஏனெனில் எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனப் பிழையாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் போராட்டம் இன்று முக்கியமான ஒரு சந்தியில் நிற்கிறது. மக்களை மையப்படுத்திய உபாயங்களை உருவாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இவ்வாறான செய்தித்திரிப்புகளும் மனநிலைகளும் பயனுள்ள செயற்பாடுகளுக்கு வழிவகுக்காது. எனவே நாம் சிந்தித்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அதை செய்யத்தவறுவது எமது எதிர்காலச் சந்ததிக்கு புதைகுழி தோண்டும் செயற்பாடன்றி வேறெதுவுமில்லை.

# நீதியைக் கொல்லும் இஸ்ரேலும் நியாயம் கோரும் பலஸ்தீனமும்

உலகில் மிக நீண்டகாலமாக அடக்குமுறைக்கு ஆட்பட்டிருக்கும் சமூகமாக பலஸ்தீன சமூகம் இருந்து வருகின்றது. பல்லாயிரக்கணக்கான உயிர் இழப்புக்கள், பொருள் இழப்புக்கள், நிலப்பறிப்புக்கள் போன்ற பலவற்றையும் தாண்டி இஸ்ரேலிய ஒடுக்குமுறைக்குகெதிராகவும் சியோனிச சண்டித்தனத்திற்கெதிராகவும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பலஸ்தீன மக்கள் போராடி வருகிறார்கள். இஸ்ரேலின் படுகொலைகளும் தொடர்ச்சியான கொலைவெறித்தாக்குதல்களும் பலஸ்தீன மக்களின் மனவுறுதியை பாதிக்கவில்லை.

ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் சகலவிதமான போராட்டக் கருவிகளையும் அவர்கள் கையிலெடுக்கிறார்கள். உலகெங்கும் அடக்குமுறைக்கெதிராக போராடும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரமூட்டுகிறார்கள்.

பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் அரபு மக்களின் விடுதலையின் முக்கியமான ஒரு குறியீடாக உள்ளது. பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் உலகின் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்குகிற ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிரான பிரதான சவாலாகவும் இருக்கிறது. ஆனால், அதை அரபு மக்களுக்கும் முஸ்லிம்கட்கும் மட்டுமே உரியதாகக் கொள்ளக் கூடாது. ஏனெனில், அது உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்திய ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை, இனவாதம், ஃபாஸிஸ அடக்குமுறை போன்ற பல்வேறு கொடுமைகட்கும் எதிரான போராட்டங்களின் பொதுவான குறியீடாகும். இதுவரை பலஸ்தீன மண்ணில் இஸ்ரேல் விளைவித்த சேதங்கட்கு நிவாரணமோ, நட்டஈடோ பற்றி இதுவரை எதுவுமே பேசப்படவில்லை. இனியும் எதுவுமே பேசப்பட மாட்டாது. இஸ்ரேலின் பாதுகாப்பு என்கிற பேரில் மத்திய கிழக்கில் தனது குறுக்கீட்டை வலுப்படுத்துகிற அமெரிக்காவின் உண்மையான நோக்கங்கள் மத்திய கிழக்கின் எண்ணெய் வளம் தொடர்பானது. இந்த இடத்தில் தான் பலஸ்தீன மக்களைப் பற்றிய 'சர்வதேச' அக்கறை நமக்கு சில பாடங்களைக் கற்பிக்கிறது. அவை மிகவும் முக்கியமான பாடங்கள். ஒடுக்குபவனும் ஒடுக்கப்படுபவனும் இருக்கின்ற சூழலில் யாருடைய ஆதரவு எமக்கு தேவை என்பது பற்றிய தெளிவு இருக்க வேண்டும். அமெரிக்காவையும் இந்தியாவையும் நம்பினால் எல்லாம் கிடைக்கும் என்று நம்புகிறவர்களும் மற்றவரை நம்பப் பண்ணுகிறவர்களும் இருக்கிறார்கள். நம்புகிறவர்களை விட நம்பச் சொல்லுகிறவர்கள் ஆபத்தானவர்கள். அவர்கள் தங்கள் சுயலாபம் கருதியே அப்படிச் சொல்லுகிறார்கள். இஸ்ரேலின் "தற்காப்புக்கான உரிமையை" எப்போதோ ஏற்றுக்கொண்ட ஒபாமா இஸ்ரேல் பலஸ்தீன மக்களின் மீது நடத்திய வெறியாட்டத்தைக் கண்டிக்க மறுத்து அதை நியாயப்படுத்தியவர். அத்துடன் காஸா மீதான பொருளாதாரத் தடையைப் பற்றி வாயே திறக்காதவர் என்பதையும் மறக்கலாகாது. ஒபாமா ஆட்சி ஈராக்கிலிருந்து படைகளை விலக்கிக்கொள்ள இருப்பது, அந்த நாட்டின் மீதான ஆக்கிரமிப்புத் தவறானது என்பதனால் அல்ல இயலாமையாலேயே. அண்மையில் ஒரு நேர்காணலில் அமெரிக்க முன்னாள் சட்டமா அதிபர் ராம்சே கிளார்க் சொன்ன ஒரு விடயம் முக்கியமானது. "பயங்கரவாதத்திற்கு எதிரானது என நடத்தப்படுகிற போர் உண்மையில் இஸ்லாத்திற்கு எதிரான போராகும், பெரும்பாலான அரசியல் தலைவர்கள் இஸ்லாமிய பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகப் பறைசாற்றிக் கொண்டாலும் உண்மையில் இஸ்லாத்தை முற்றுமாக துடைத்தெறிந்து விடுவதே அவர்களது உண்மையான நோக்கமாகும். அமெரிக்க அரசாங்கம் எப்போதும் ஒரு எதிரியைச் சுற்றியே செயல் படக்கூடியது. தனது செயல் திட்டங்களின் உண்மையான நோக்கத்தை மூடி மறைக்கவும், அமெரிக்க மக்களை ஒருங்கிணைக்கவும் அமெரிக்கா ஒரு புதிய எதிரியை தேடிக் கொண்டிருக்கிறது. தேசப்பற்றை போற்றுவது அதன் உண்மையான நோக்கமன்று. பிறர் மீது மேலாதிக்கம் செலுத்துவதும், பிறரது வளங்களை அபகரிப்பதும்தான் அதனுடைய உண்மையான நோக்கம். அதே வேளை, இவற்றை யாரும் இனம் கண்டு கொள்ளாமல் இருக்க எதிரியை வேட்டையாடுவதாக வெளிவேடம் போடுகிறது. இங்கு தான் அமெரிக்க இராணுவம் தனது முழுமையான பங்களிப்பை செய்கிறது".

இன்று இஸ்ரேலின் கொடுமையைக் கண்டிக்கவும் இஸ்ரேலைத் தனிமைப்படுத்தவும் மூன்றாம் உலக நாடுகளிலிருந்தும் விடுதலை போராட்ட அமைப்புகளில் இருந்தும் மக்கள் இயக்கங்களில் இருந்தும் உரத்த குரல்கள் எழுமானால், அவை இஸ்ரேலின் எசமானனும் அடக்குமுறை ஆட்சிகள் பலவற்றின் ஆதரவுச் சக்தியாகவும் உள்ள அமெரிக்காவையும் தாக்கும். அதை விடுத்து இஸ்ரேல் போன்ற ஒரு நாடு பற்றிய கனவில் மூழ்கி இருப்பதும் அக் கனவை வெற்று நம்பிக்கையாக வளர்ப்பதும் மக்களுக்கு இழைக்கின்ற துரோகமாகும். இஸ்ரேலின் கொடுமைகளை எதிர்க்கத் தவறுபவர்கள் உலகில்



நடக்கிற எந்தக் கொடுமையையும் ஆதரிக்கக் கூடியவர்கள் என்பதை நாம் மறக்கலாகாது. உள்ளபடி சொல்வதென்றால், மனசாட்சியையும்,நீதியையும் கொன்றவர்களால் தான் இஸ்ரேலுக்கு ஆதரவாக பேசவோ, எழுதவோ முடியும். இங்கே சொல்ல வேண்டிய இன்னொரு மிக முக்கியமான செய்தி ஒன்றும் பொதிந்துள்ளது. இஸ்ரேலிய அரசு நடத்துகிற கொடுமைகட்கு எதிரான குரல்கள் எப்போதுமே இஸ்ரேலுக்குள்ளிருந்து எழுந்து வந்துள்ளன.எனினும், சரிக்கும், பிழைக்கும், நியாயத்திற்கும், அநியாயத்திற்கும் வேறுபாடு தெரியாத ஒரு சமூகமாக இஸ்ரேல் சீரழிந்து வந்துள்ளது. பலஸ்தீன மக்களுடைய உரிமைகள் முற்றாக வழங்கப்படாத வரை இஸ்ரேலுக்கு அமைதியோ, பாதுகாப்போ இல்லை என்பதை இஸ்ரேலிய மக்கள் புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள்.ஒரு சமுகம் பலஸ்தீன பயங்கரவாதம் என்று இஸ்ரேல் அரசு சொல்லுகிற காரணத்தை கேள்வியின்றி ஏற்றுக்கொண்டதன் விளைவுதான் இது என்பதை சுட்டியாக வேண்டும். இப்போதெல்லாம் இஸ்ரேலியப் படையினர் செய்கிற எதற்கும் நியாயம் தேவையில்லை என்றாகிவிட்டது. இஸ்ரேலின் இன்றைய அப்பட்டமான இனவெறிப் போக்கு வலுப்பெற்று, நாட்டின் ஆதிக்கச் சிந்தனையாவதற்கு எவ்வாறு அரசியற் கட்சிகளும் ஊடகங்களும் உதவின என்பதற்கும் மேலாக, இப்போக்கு எப்படி இஸ்ரேலிய சமுதாயத்தைச் சனநாயகமற்ற ஒன்றாகச் சீரழித்துள்ளது என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டியது. இதன் பலாபலன்களையும் தீமைகளையும் மௌனம் காக்கும் இஸ்ரேலிய மக்களே அனுபவிப்பர். எனவே எந்த வொரு ஆதிக்க மனப்போக்கு இக்கும் எதிராகப் போராட வேண்டியது மக்களின் கடமை. அதை மக்கள் தாமாகவே செய்யத் தவறுவார்கள் எனில் துன்பம் வந்து சேரும். வரலாற்றை மக்களே உருவாக்குகின்றனர் என்பதன் உண்மையை நாம் மறக்கிற போது தனி மனித ஆளுமைகள் மீது மிகையாக நம்பிக்கை வைத்து சமூகப் பொறுப்புக்களைக் குறிப்பிட்ட சிலரது கைகளில் விட்டு விட்டு ஒதுங்கிக் கொள்ளுகிறோம். இது மிகுந்த ஆபத்தானது என்பதற்கு இஸ்ரேலிய சமுகம் ஒரு சான்று. அந்நியர் மீது வைக்கின்ற நம்பிக்கைகள் அவர்களது நலன் சார்ந்ததாகவே இருக்க முடியுமே தவிர எங்களது நலன் சார்ந்ததாக இருக்க முடியாது என்பதற்கு பலஸ்தீன சமுகம் ஒரு சான்று. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஆதரவானது மக்களாலேயே வழங்கப்பட முடியும் என்ற உண்மை உறைக்க வேண்டும். இல்லாவிடில் போராட்டம் திசை தவறுவது தவிர்க்க முடியாதது.

ஏகலைவா

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்




# மாவை வரோதயன் மறைவுக்குப் புதிய பூமியின் அஞ்சலி

கடந்த யூன் மாதம் 27ஆந் திகதி மூத்த கவிஞரும் தமிழ் அறிஞரும் ஆற்றல்கள் வாய்க்கப் பெற்றவரும், தேசிய கலை இலக்கியப்பேரவையின் தலைவருமான இ.முருகையன் தனது 74ஆவது வயதில் இயற்கையெய்தினார். அத் துயர்மிகு பிரிவு இடம்பெற்ற இரண்டு மாதங்கட்குப் பின் மற்றொரு மக்கள் கவிஞரும் பல்துறைப் படைப்பாளியும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கொழும்புச் செயலாளருமான மாவை வரோதயன் (சி. சத்தியகுமாரன்) கடந்த 29.8.2009ஆம் ஆண்டு இயற்கையெய்தினார். அவரது இழப்பு ஈழத்து இலக்கியப் பரப்பிற் பெரும் இடைவெளியை தோற்றுவித்துள்ளது. மாவை வரோதயன் இறக்கும் போது அவருக்கு 44 வயது. அவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். கடந்த ஒரு வருட காலத்திற்கு மேல் சுகவீனம் அடைந்த நிலையில் இருந்து வந்தார்.

ஈழத்து இலக்கியப் பரப்புக், காலத்திற்குக் காலம் மக்கள் கவிஞர்களையும் மக்கள் படைப்பாளிகளை தோற்றுவித்து வந்துள்ளது. அந்த வரிசையில் மாவை வரோதயன் தனக்குரிய இடத்தை தனது படைப்பாற்றலாலும் கலை இலக்கிய செயற்பாட்டாலும் பெற்றுக் கொண்டவர். வெறுமனே எழுதுவதும் அவற்றை பிரசுரிக்க வைப்பதும் புகழ் உரைகள் சேர்ப்பதும் பொன்னாடை போர்த்திக் கௌரவங்கள் பெறுவதும் மாறா நடைமுறையாகிவிட்ட சமகாலச் சூழலிற் படைப்பாற்றலைப் பயனபடுத்தித் தனது ஆற்றல் கட்கு ஏற்பச் சமூக சார்பும் மக்கள் சார்புமுடைய இலக்கியங்களைப் படைத்தவர் மாவை வரோதயன்!

அவரது கவிதைகள் சிறுகதைகள், உரைநடைச் சித்திரம், நாடகங்கள் போன்ற ஆக்கங்களின் கண்டனம் இடித்துரைத்தல், அம்பலமாக்கல், நியாயங் கோரல் போன்றன விரவிக் கிடக்கும். அவ்வாறே மக்களை விழிப்படையச் செய்யவும் செயலுக்குத் தூண்டவுமான நோக்கும் போக்கும் அவரது படைப்புக்களிற் காணப்படும். ஏற்றத் தாழ்வான, சமூக நீதி மறுக்கப்படுகின்ற சமூகச் இன்றைய சூழலில் எந்தவொரு மனித நேயப் படைப்பாளியும் கோபப்படாது அமைதியாக சமாதானமாக வாழ்ந்து ஆக்கங்களைப் படைக்க முடியாது. அந்த வகையில் மாவை வரோதயனின் ஆக்கங்களில் கனல் பறக்கும் கோபங்களையும் கண்டனங்களையும் கிண்டல்களையும் கேலிகளையும் காணமுடியும். அவை அனைத்தும் இச் சமூகத்தினதும் அதன் ஏற்றத்தாழ்வின் விளைவாக ஒரு சிலரால் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுவதை எதிர்த்தவையாக இருப்பதைக் காண முடியும்.


மாவை வரோதயன் தனது மாணவப் பருவம் தொட்டே மனித நேயத்தை வளர்ப்பவராகவும் மக்கள் சார்பு நிலைப்பாட்டை நோக்கி வழிநடப்பவராகவும் காணப்பட்டார். அவர் இளம் வயதிற் சாக நேரிட்ட போதும் அவரது உலகப் பார்வையும் மக்களுக்கு பணியாற்றும் சேவை மனப்பான்மையும் அவரிடம் நிறைய இருந்தது. அவர் கல்விச், சுகாதாரத் துறைகளில் அரசாங்க உத்தியோகத்தராக பணிபுரிந் தமையானது தனியே சம்பளம் பெறும் நோக்கத்திற்கு அப்பால் மக்கள் பணியாகவும் அமைந்திருந்தமை முக்கியமானதாகும்.



மாவை வரோதயன் நல்ல நண்பனாகவும் தோழராகவும் உயர்ந்தவர். அன்பு, பாசம், பரிவு, அரவணைப்பிற்கு உரியவராக வாழ்ந்தவர். அவரது இழப்பை எம்மால் தாங்கிக் கொள்ள இயலவில்லை என்பதே சோகத்தின் மேற் சோகமானதாகும். வாழ வேண்டிய வயது மட்டுமன்றி மாவை போன்ற படைப்பாளிகளும் செயல் வாதிகளும் வாழ்ந்து பணியாற்ற வேண்டிய காலப்பகுதியாகவும் இன்றைய சூழல் காணப்படுகின்றது. எனவே மாவை வரோதயன் என்ற அன்பு நண்பனுக்கும் தோழனுக்கும் இலக்கியப் படைப்பாளிக்கும் நாம் செலுத்த வேண்டிய அஞ்சலி அவரது பணியினை தொடர்வதாகும். புதிய பூமி மாவைக்குத் தனது சிகப்பு இறுதி அஞ்சலியைத் தெரிவிக்கிறது. அவரது துணைவியாருக்கும் குழந்தைகட்கும் ஆறுதலும் அனுதாபமும் தெரிவிக்கின்றது. உறவினர் நண்பர்கட்கும் அனுதாபங்களைத் தெரிவிக்கிறது.

- ஆசிரியர் குழு -

# குழம்பிய சிந்தனையின் இடதுசாரி விரோத வன்மம்




நவீன அரசியல் சிந்தனை - ஓர் அறிமுகம், க.சண்முகலிங்கம். விழுது ஆற்றல் மேம்பாட்டு நிறுவனம் + குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை 2009 ப 133 + viii. ரூபா 350.00

இத்துணை சிறிய நூலொன்றில் நவீன அரசியற் சிந்தனைகளையுஞ் சிந்தனையாளர்களையும் செம்மையாக அறிமுகப் படுத்தலாம் என யாரும் எதிர்பார்க்க நியாயமில்லை. சில சிந்தனையாளர்களது கருத்துக்களிற் தெரிந்தெடுக்கப்பட்ட சிலவற்றை ஆசிரியரது முற்சாய்வுகட்கேற்ப 'மறுவாசிப்புக்கு' உட்படுத்தித் தமிழ்ப் படுத்தியுள்ளதையே நூலிற் காண முடிகிறது. நவீன சிந்தனைகளைத் தமிழில் வழங்குவதற்குத் தேவையான பரந்தளவிலான வாசிப்போ தேடல் முயற்சியோ நடந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. சில முக்கியமான சிந்தனையாளர்களை மூலத்தில் வாசிப்பதற்கோ மொழிபெயர்ப்பில் வாசிப்பதற்கோ முயற்சி எடுக்கப்படவில்லை என்பதை உசாத்துணைப் பட்டியல் காட்டுகிறது. அமைப்பியலை அறிய, அதை மிகவுங் குழப்பமாகவே விளங்கி வியாக்கியானஞ் செய்து வந்த தமிழவனின் நூல் மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது.

நம்மிற் சிலருக்கு எப்போதுமே நம் மீது மேலாதிக்கஞ் செய்கிற நாடுகளிலிருந்து தான் நவீனச் சிந்தனைகள் வர இயலும். ஆனால் மூன்றாமுலகத் தேசியம் பற்றியும் விடுதலை பற்றியும் விளங்கிக் கொள்வதற்கு ஆபிரிக்க, லத்தின் அமெரிக்கச் சிந்தனையாளர்களைப் படிப்பது மிகப் பயனுள்ளது. நிச்சயமாக /பிரான்ற்ஸ் /பனன், அமில்கார் கப்ரால் ஆகிய இருவரதும் பங்களிப்புக்கள் வரலாற்று முக்கியம் வாய்ந்தவை. லெனினியப் போக்குக்களில் அமைப்பு ரீதியான கலந்துரையாடல்கள் மூலம் சிந்தனையை விருத்தி செய்யும் போக்கு வலுவாகியுள்ளது. அதற்கான சான்றுகளை நேபாளம், .·. பிலிப்பின்ஸ், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் மாக்ஸிய லெனினியக் கம்யூனிஸ்ற் கட்சிகளின் அரசியல் அறிக்கைகளிற் காணலாம். அதன் வேர்கள் வெகுஜனப் புரட்சிகர இயக்கங்களில் உள்ளன. அறிவுஞ் சிந்தனையும் பற்றிய வெகுசனக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலான இப் போக்கு, நவீன சிந்தனையின் வளர்ச்சிப் பரிமாணங்களில் மிக முக்கியமானது. மக்களிடமிருந்து பெறப்படுகிற அறிவுக்குத் தனிமனிதர் உரிமை கொண்டாடுகிற போக்கிற்கு எதிர்மாறான முனைப்பை இது காட்டுகிறது.

இப் பின்னணியிற், 'சண்முகலிங்கத்தின் பிரகடனப்படுத்தப்படாத பலம் அவரது ஆழ்ந்தகன்ற வாசிப்பும் நோக்குச் செழுமையும்' என்று பின்னட்டையில் ஒரு பேராசிரியர் விதந்துரைத்துள்ளமை நமது அறிவுலகின் நிலை பற்றி மேலும் விசனமளிக்கிறது. இப்படிப்பட்ட நூலுக்கு அவசியமான வாசிப்பையே செய்யாத ஒருவர் எவ்வளவு ஆழமாக வாசித்திருக்கிறார் என்பது நூலுக்குட் செல்லுகிறபோது மேலும் விளங்கும்.

தத்தமது அகச்சார்பான முடிவுகட்கான ஆதாரங்களைத் தேடுகிற விதமான வாசிப்புக்கள் உள்ளன. அவற்றிற் சில, தமக்குப் பாதகமான ஆதாரங்களைப் புறக்கணிப்பதுடன் நின்று விடுகின்றன. சில தமக்கு எற்ற விதமாகக் கருத்துக்களைத் திரிப்பதிலுங் கவனங் காட்டுகின்றன.

பல்வேறு சிந்தனைகளைப் பற்றியும், முக்கியமாகத் தேசியமும் அரசும் பற்றிய கோட்பாடுகள் பற்றியும், குறிப்பாக மாக்சியக் கருத்துநிலை பற்றியுமே கவனங் காட்டுகிற இந்த நூலிற் கொலனிய, கொலனியத்துக்குப் பிந்திய அரசுகள் பற்றிப் பீற்றர் எவன்ஸின் கட்டுரையிலிருந்து கருத்துக்கள் வழங்கப் பட்டுள்ளன. அங்கோ வேறு எங்குமோ, கொலனித்துவத்துக்குப் பிந்திய அரசுகளின் தன்மையிலும் செயற்பாட்டிலும் நவகொலனியத்தினதும் ஏகாதிபத்திய உலக மேலாண்மையினதும் பங்கு பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. கொள்ளையிடும் அரசு எனப்படும் பிறிடேற்றரி (கொன்றுண்ணி) அரசு பற்றிப் பேசுகையில், முன்னம் மொபுட்டு ஆட்சியின் கீழிருந்த ஸய்யிர் (இப்போது கொங்கோ குடியரசு) நாட்டின் அரசு பற்றி விவரிக்கப் படுகிறது. அந்த விதமான அரசின் நிலைப்பிற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் முப்பதாண்டுகட்கும் மேலாக வழங்கி வந்த ஆதரவுபற்றி எதுவுமே பேசப்படவில்லை. மொபுட்டு, மார்க்கொஸ், சுகர்த்தோ எல்லாருமே கொன்றுண்ணி அரசுகளை நடத்திய கொள்ளையர்கள் தான். ஆனால் அவர்களது ஆட்சியின் பிறப்பிற்கும் நிலைப்பிற்கும் ஆதாரம் ஏகாதிபத்தியமே என்ற உண்மையை விளங்கிக் கொள்ளாத சிந்தனை, நவீனத்துவத் தோற்றங் காட்டலாமே ஒழிய உண்மை சார்ந்ததாக இராது.

கிராம்ஷியின் சிவில் சமூகம், சிந்தனை மேலாண்மை போன்ற கருத்துக்களை மாக்ஸிய விரோத நோக்கில் என்.ஜி.ஓக்களும் பின்னவீனத்துவக்காரரும் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் லெனின், மாஓ, கப்ரால் போன்று கிராம்ஷியும் மாக்ஸியத்தை வளப் படுத்தியவரே என்பதும் அவரது கருத்துக்கள் உண்மையில் சீனப் பண்பாட்டுப் புரட்சியின் போது முன்னெடுக்கப்பட்ட கருத்துக்களுக்கு மிக உடன்பாடானவை என்பதும் முக்கியமானவை. இவை பற்றி மாக்ஸிய விரோத நோக்கில் கிராம்ஷியை விதந்துரைப்போர் பேசுவதில்லை. அவ்வாறே, கிராம்ஷி ஆயுதப் புரட்சியை நிராகரித்தார் என்று ஒரு கருத்தும் உருவாக்கப்பட்டு வருகிறது. எவ்வாறாயினும், கிராம்ஷி, மாக்ஸிய லெனினிய வட்டாரங்களில் மிகவும் மதிக்கப்படுகிறவராகவே இருக்கிறார்.

மேற்குறிப்பிட்ட நூலில் மாக்ஸின் அரசு பற்றிய கோட்பாடு வலிந்து குழப்பத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ளதுடன் நில்லாது, மாக்ஸியவாதிகள் 'அடித்தள விளிம்புநிலைத் தேசியங்களை' ஒரு பொதுமையான தேசியத்தினுட் கரைத்து இல்லாமச் செய்ய முயல்வதாகக் கூறும் ஒரு கட்டுரை தமிழாக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதாரங்கள் ஒரு சிலரது வெறும் அபிப்பிராயங்களே ஒழிய நடைமுறைச் சாட்சியங்களல்ல. புரட்சிக்குப் பிந்திய நிக்கராஹூவாவிலும் சோசலிச சீனாவிலும் மிகச் சிறிய தொகையினரைக் கொண்ட இனங்கட்கான சுயாட்சிகள் உருவாக்கப்பட்டன. சோசலிஸ ரஷ்யக் குடியரசிலும் சிறுபான்மைத் தேசிய இனங்கட்கான சுயாட்சிகள் இருந்து வந்தன. அவை யாவும் இன்னமும் உள்ளன.

அனைத்திலும் முக்கியமாக, இலங்கையிற் தமிழ்த் தேசியவாதமும் பேரினவாதமும் மறுத்து வந்த மலையகத் தமிழ், முஸ்லிம் தேசிய இன அடையாளங்களையும் மாக்ஸிய லெனினியவாதிகளே முதலில் ஏற்றனர். இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் பிரதேச அடையாளங்களை வெளிப்படுத்தலை மிகவும் ஊக்குவித்தோர் இடதுசாரிகளே பேராசிரியர் கைலாசபதியின் பங்களிப்பு இவ்விடத்து முக்கியமானது.

கண்ணுக்கு முன்னே உள்ள உண்மைகளைக் கூடக் காண மனமில்லாது இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைப் பற்றிய எத்தனையோ ஆழமான புதிய சிந்தனைகளைக் கண்டும் காணாமற் போகிற நூலாசிரியருக்குத் தேசியம் பற்றிய இடதுசாரிச் சிந்தனையை விகாரப்படுத்தி முன்னாள் வாம சமசமாஜக் கட்சிக்காரரும் பின்னவீனத்துவச் சிந்தனைக் குழப்பத்திலிரு ந்து மீள முடியாதவருமான சுமனசிறி லியனகேயின் கட்டுரை தான் கண்ணிற் படுகிறது.

இத்தகைய நூல் ஒன்றிற் கலைச் சொற்களைப் புனைகிற தேவை ஏற்படுகிறது. சில சொற்களுக்கு உரிய சொற்கள் இருப்பது பற்றி நூலாசிரியர் கள் அறிவதில்லை. சிலர் அறிந்துழ் வலிந்து புதிய சொற்களைப் புனைந்து தம்மை அதி மேதாவிகளாகக் காட்டிக் கொள்வர். இந் நூலில் அவ்வாறான புனைவுகட்குரிய மூலச் சொற்கள் தரப்படடுள்ளமை வரவேற்கத் தக்கது. சில இடங்களிற் மூலச் சொற்கள் தேவையின்றித் தரப்பட்டுள்ளன. வேறு சில இடங்களிற் தரப்பட்ட தமிழ்ச் சொல் மூலச் சொல்லுடன் உறவற்று உள்ளமை பற்றிக் கவனங் காட்டியிருக்கலாம். சில சொற்கள் இடத்துக்கிடம் வேறுபடும் முறைகளிற் தமிழாக்கப் பட்டுள்ளன. அதுவுங் கவனத்திற்கு உகந்தது.

இந்த நூலின் மூலம் யாரும் நவீன அரசியற் சிந்தனைகளைப் பற்றிப் பயனுள்ள எந்த அறிமுகத்தையும் பெறுவாரென நான் நம்பவில்லை. தொட்டந் தொட்டமாக யார் யாரோ எழுதியதையெல்லாம் தொகுத்து ஒரு நூலாக்குவது விடயப் பரிச்சயமற்ற வாசகர்கட்கு உதவாது. அதை விட, ஏலவே உள்ள சிந்தனைகள் பற்றிய ஒழுங்கான வரலாற்று வழியிலான அறிமுகமும் அவற்றை ஒட்டியும் அவற்றின் மறுப்பாயும் உருவான புதிய மாற்றுச் சிந்தனை முறைகள் பற்றிய அறிமுகமும் பயனுள்ளதாய் இருந்திருக்கலாம்.

இந்த நூலுக்குத் தினக்குரலில் வெளிவந்த ஒரு மதிப்புரை பற்றியுங் கூற வேண்டியுள்ளது.பேராசிரியர் சிவத்தம்பி மெச்சும் ஞானசூனியங்களில் ஒருவரான சி.அ. யோதிலிங்கத்தின் விமர்சன உரை ஒன்று முழுமையாகப் பிரசுரிக்கப் பட்டிருந்தது. உரையின் கணிசமான பகுதியில் நூலிற் தொடப்பட்ட விடயங்களை முன்வைத்து விளக்கங் கூறித் தன் மாக்ஸிய விரோத வன்மத்தைக் கொட்டியிருந்தார். உதாரணமாக, வியற்னாம் கம்யூச்சியா லாவோஸ் போன்ற நாடுகளிலிருந்து எழுச்சியடைந்த கம்யூனிச அச்சுறுத்தல்களிலிருந்து தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேசியா, இந்தோனேசியா போன்ற தென்கிழக்காசிய நாடுகளைக் காக்கும் தேவை அமெரிக்கா சார்ந்த மேற்குலகத்திற்கு இருந்தது என்றும் அதைப் போலவே சீனாவுக்கு எதிராகத் தாய்வானையும் வடகொரியாவுக்கு எதிராகத் தென்கொரியாவையும் (மேற்குலகு) பாதுகாக்க முற்பட்டது என்றும் பேசியிருக்கிறார்.

இது அவர் குறிப்பிட்ட எந்த ஒரு நாட்டினதும் வரலாறு பற்றிய அவரது பூரண அறியாமையை மட்டுங் கூறவில்லை. அவருள்ளே இருக்கிற மாக்சிய விரோத வன்மம் பற்றியுங் கூறுகிறது. யூ.என்.பியின் தரகராகச் செயற்பட்டுச் சீரழிந்த ஒரு தமிழ்த் தேசியவாதியிடம் வேறெதை எதிர்பார்ப்பது?

-திருமுகன்-

www.padippakam.com                நன்றி - நூலகத்திட்டம்


*REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA*

செப்ரெம்பர் 2009

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org





மலையகச் சிறுமிகள் உயிரிழந்த கழிவு நீர் வாய்க்கால்

## மக்களை முகாம்களில் தடுத்து வைத்திருப்பது மனித தர்மத்திற்கு விரோதமானது

### புதிய-ஜனநாயக கட்சி ஜனாதிபதிக்கு கடிதம்

வவுனியா அகதி முகாம்களில் மழை வெள்ளத்தால் ஏற்படும் உயிரழிவுகளைத் தடுத்து நிறுத்த ஒரே வழி அகதிகளாக்கப்பட்ட சுமார் மூன்று லட்சம் தமிழ் மக்களை அவர்களது சொந்த இடங்களுக்குச் சென்று வாழ அனுமதிப்பது தான். வன்னியில் வாழ்ந்து வந்த ஒரே காரணத்திற்காக தண்டனைக் கைதிகள் போன்று முகாம்களில் தடுத்து வைத்து அவலங்களை எதிர் கொள்ள வைப்பது பௌத்த தர்மம் மேற் கொள்ளப்படுவதாகக் கூறும் நாட்டில் மனித தர்மத்திற்கு மதிப்பளிக்காத ஒரு நடவடிக்கையாகும். ஆதலால் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களையும் எப்போதும் பருவ மழையால் பாதிக்கப்படப் போகும் மக்களையும் தாமதமின்றி மீளக் குடியமர்த்துவதற்கு ஏற்ற நடவடிக்கையைத் தங்களது நேரடித் தலையீட்டின் மூலம் ஜனாதிபதி செயற்படுத்த வேண்டும் என எமது புதிய ஜனநாயகக் கட்சி வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு வவுனியா அகதி முகாம்களில் மழை வெள்ளத்திற்குள் சிக்கியுள்ள மக்களின் துயர நிலைபற்றி புதிய ஜனநாயக கட்சி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல், தேசிய அமைப்பாளர் இ.தம்பையா ஆகியோர் கட்சியின் சார்பில் கையெழுத்திட்டு மேற்படி கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளனர்.

மேலும் அக் கடிதத்தில் யுத்தத்தையும் பயங்கரவாதத்தையும் முடிவுக்கு கொண்டுவந்துள்ளதாகப் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி பிரகடனம் செய்து மூன்று மாதங்கள் முடிவுறுகின்றது. அகதிகளாக்கப் பட்ட மக்களை மீளக் குடியேற்றுவதற்கு 180 நாள் வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்தால் கூறப்பட்டது. இந்நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் அவலங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவற்றுடன் இப்போது கடும் மழையும் பெருவெள்ளமும் ஏற்பட்டு மக்கள் துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர். குழந்தைகள் கர்ப்பிணித்தாய்மார்கள், பெண்கள், நோயாளர்கள், முதியவர்கள் மற்றையோர் இவ் வெள்ளத்தால் அவதியுறுகின்றனர்.

மழையும் வெள்ளமும் ஏற்கனவே தண்டனைக் கைதிகள் போன்று நடாத்தப்பட்டு வருபவர்களுக்கு மேலதிகத் தண்டனையாகவே இருந்து வருகிறது. ஏற்கனவே உயிரழிவுகளையும் இழப்புகளையும் தாண்டி வந்த மக்கள் ஏற்கனவே படுகாயங்களாலும் கடும் நோய்களாலும் பாதிக்கப்பட்டு உயிர் இழந்தனர்.

இப்போது மழை வெள்ளத்தால் அடுத்த கட்ட உயிர் அழிவுகளை எதிர் நோக்க வேண்டிய அபாயத்திற்கும் உள்ளாகி உள்ளனர். தற்போதைய மழையினால் மட்டுமன்றி விரைவில் ஆரம்பிக்கவுள்ள பருவ மழையாலும் அகதி முகாம் மக்கள் பாதிக்கப்படப் போகிறார்கள். ஆதலால் மக்களைப் பாதுகாப்பதற்குள்ள ஒரே வழி அவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு சென்று வாழ அனுமதிப்பது தான். சொந்த நாட்டு மக்களான தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் வன்னியை வாழ் விடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஒரே காரணத்திற்காகத் தடுத்து வைத்து அவலங்களை அனுபவிக்க வைப்பது எத்தகைய தர்மத்திற்கும் நீதிநியாயங்களுக்கும் உட்பட்டதாக இருக்க முடியாது. எனவே மழை வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு வேறு முகாம்களை உருவாக்குவது நிவாரணங்கள் வழங்குவது மட்டும் போதாது. ஐ.நா. முகவர் நிறுவனங்களையோ ஏனைய உதவி வழங்கும் முகவர் அமைப்புகளையோ குறை கூறிப் பயன் இல்லை. சொந்த நாட்டு மக்களுக்கு பொறுப்பாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டியது அரசாங்கமும் அதன் தலைவராகவும் இருக்கும் ஜனாதிபதியுமேயாகும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றோம் என்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சிறுமிகளின் இறுதி ஊர்வலம்



சிறுமிகளை இழந்த தாய்மார்






மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL. 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.